# இலங்கை

# இன்டர்நஷனல் அலர்ட் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்
## கொள்கை விளக்கம் இல.1

இந்த வெளியீட்டில் இடம்பெற்றுள்ள ஆய்வுகள், கருத்துக்கள் பின்வரும் கருத்திட்ட நன்கொடையாளர்களின் கருத்துக்களையோ கொள்கைகளையோ பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டிய அவசியமில்லை: சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய திணைக்களம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஜேர்மன் சமஷ்டி அமைச்சு, சர்வதேச அபிவிருத்திகான அமெரிக்க நிறுவனம், அமெரிக்க அரசாங்கம், அவுஸ்திரேலய அரசாங்கம் (AusAID)

தமிழ்

© இன்டர்நஷனல் அலர்ட் 2006

| | | |
|---|---|---|
| முதல் வெளியீடு | : | இன்டர்நஷனல் அலர்ட் |
| கூட்டு | : | சமாதான கூட்டணிக்கான வர்த்தகம் ஸ்ரீலங்கா பெர்ஸ்ட் |
| ISBN | : | 955-8085-01-4 |
| வடிவமைப்பும் பிரதியும் | : | ஜே அன்ட் ஜே விளம்பர (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் |
| அச்சு | : | வேகமான அச்சு |

இந்த வெளியீட்டின் அச்சிட்டிற்கான
அனுசரணை வழங்கியது

Australian Government
AusAID

# இலங்கை:
# சமாதானத்துக்கான ஒரு முகவராக வர்த்தகம்

# பொருளடக்க அட்டவணை

முகவுரை

| | |
|---|---|
| இன்டர்நஷனல் அலர்ட் | 141 |
| ஸ்ரீலங்கா பெர்ஸ்ட் | 143 |
| சமாதானக் கூட்டணிக்கான வர்த்தகம் | 145 |
| **அறிமுகம்: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்தின் பங்கு** | **147** |
| **ஸ்ரீலங்கா : சமாதானத்திற்கான முகவராக வர்த்தகம்** | **161** |
| 1. அறிமுகம் | 161 |
| 2. இலங்கையில் வர்த்தகமும் சமூகமும் | 171 |
| 3. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்துறை முயற்சிகள் | 183 |
| 4. முடிவுரை | 189 |
| சுருக்கச் சொற்பதம் | 195 |
| உசாத்துணைகள் | 197 |
| முடிவுக் குறிப்புகள் | 201 |

# இன்டர்நஷனல் அலர்ட்டின் முகவுரை

இன்டர்நஷனல் அலர்ட் ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட சமதானத்தைக் கட்டியெழுப்பும் ஒரு அமைப்பாகும். அது, உலகெங்கிலும் 20 க்கும் அதிகமான நாடுகளிலும் பிராந்தியங்களிலும் வன்முறை பிணக்குளால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாகவும், அரசாங்க, ஐரோப்பிய ஒன்றிய ஐக்கிய நாடுகள் மட்டங்களிலும் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கையையும் நடைமுறையையும் மெருகுபடுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக வர்த்தகம், மனிதாபிமான உதவி, அபிவிருத்தி, பால்நிலை, பாதுகாப்பு, மோதலுக்குப் பின்னரான புனர்நிர்மாணம் ஆகிய விடயங்கள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக்கு இன்டர்நஷனல் அலர்ட் நிறுவனம் பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

யுத்தம் அல்லது ஸ்திரமற்ற நிலை ஏற்படும் போதெல்லாம் உள்ளூர் தனியார் துறை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. முதலீட்டு வீழ்ச்சி, உட்கட்டமைப்பு சேதம், நேரடித் தாக்குதல், ஆளணி, மூலதனம், சந்தைவாய்ப்பு ஆகிய வசதிகளை இழத்தல், மோதல்மிக்க சூழ்நிலையில் இயங்கும் பொழுது எதிர்பாராத நிலைமைகளால் ஏற்படும் செலவினம் போன்ற அனுபவங்களை வர்த்தகத்துறை எதிர்கொள்ள நேரிடுகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் போலன்றி உள்ளூர் வர்த்தகர்களால் அவர்களது முதலீட்டு இடங்களை எளிதில் மாற்றிக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பாதிப்புக்களாலும், ஏனைய காரணங்களாலும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கு பங்களிப்புச் செய்யும் வகையில், வர்த்தகத்துறை உந்தப்படுகின்றது என்பது மோதல் சூழ்நிலையில் இடம்பெறும் வர்த்தகம் தொடர்பான ஆய்வு மூலம் புலப்படுகின்றது. அத்துடன், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பல்வேறு தரப்பட்ட பணிகளில் ஈடுபடுவதற்கான மூலவளங்கள், திறன்கள், ஆற்றல்கள் ஆகியன வர்த்தகத்துறையிடம் உள்ளன. பிணக்கிற்குத் தீர்வுகாண வர்த்தகத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட அளப்பரிய அனுபவம், வர்த்தகத்துறை தலைவர்களுக்கு பெரும் துணிச்சலையும், தமது சொந்த சமூகத்தின் பெறுபேறுகள் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துவதற்கான உணர்வு ஆற்றலையும் வழங்கும் என்று இன்டர்நஷனல் அலர்ட் நம்புகின்றது.

சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த வெளியீடு, இன்டர்நஷனல் அலர்ட் 2004 ஆம் ஆண்டு 20 பல்வேறு நாடுகளில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூர் வர்த்தகத்துறையின் பங்கு தொடர்பாக மேற்கொண்ட பாரிய ஆராய்ச்சித் திட்டத்தில் இலங்கை சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இந்த வெளியீடு மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்தத்துறை பற்றி இலங்கையில் விளக்கம் அளிப்பதற்கான ஒரு சாதனமாக இது பயன்படுத்தப்படவுள்ளது. இந்த முயற்சி மூலம் இலங்கையில் உள்ள பெருமளவு மக்கள் ஆராய்ச்சியின் பெறுபேறுகள் பற்றி அறிந்து கொள்ளவும் அதன் சிபார்சுகள் பற்றி கருத்துத் தெரிவிக்கவும் விவாதிக்கவும் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு வன்செயல் பரவும் சூழ்நிலையை நோக்கிச் செல்வதால், இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் தொடர்பான புதிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணி எந்தவிதத்திலும் பல்வேறு செயற்பாட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே கூட்டு முயற்சி மற்றும் மூலோபாய கூட்டுச் செயற்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. தற்போதைய மோதல்களால் உள்ளூர் வர்த்தகத்துறை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. இந்த வெளியீட்டில் குறிப்பாக தனியார்துறை பற்றி சிபார்சுகள் செய்யப்பட்டுள்ள அதேவேளையில், இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்குதாரராக விளங்கும் வர்த்தகத்துறையுடன் ஏனைய துறையினர் எவ்விதம் இணைந்து செயற்பட முடியும் என்பது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடைசியாக இந்தப் பணிக்கு ஆரம்பக்கட்டம் தொடக்கம் நிதியுதவியையும் மற்றும் கணிசமான ஒத்துழைப்பையும் வழங்கிய உள்ளூர் வர்த்தக மற்றும் உள்ளூர் சமாதான கருத்திட்டத் திட்டத்தின் நன்கொடையாளர்களுக்கு இன்டர்நஷனல் அலர்ட் நன்றி

தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது. அவர்களின் உதவியின்றி இந்தப் பணி சாத்தியமாகி இருக்க மாட்டாது : UK DFID பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஜேர்மன் சமஷ்டி அமைப்பு, USAID ஆகியவற்றுக்கு எமது நன்றிகள். அத்துடன் எமது நிறுவனத்தின் பணி தொடர்வதற்கு தொடர்ந்தும் நன்கொடை வழங்கி வரும் பின்வரும் நிறுவனங்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். அயர்லாந்தின் வெளிவிவகார திணைக்களம் (Irlsh Aid) டென்மார்க் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (Danida) UK DFID பின்லாந்து வெளிவிவகார அமைச்சு, நெதர்லாந்து, SIDA வெளிவிவகார அமைச்சு, அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிற்சர்லாந்து நிறுவனம் (SDC). இந்த ஆய்வு பற்றி இலங்கையில் விளக்கிக் கூறும் பணிக்கு உதவியமைக்காக AusAID க்கும் நாம் நன்றி கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

கலாநிதி மார்க்கஸ் மேயர்
வதிவிடப் பிரதிநிதி
இன்டர்நஷனல் அலர்ட் ஸ்ரீலங்கா

# ஸ்ரீ லங்கா பெஸ்டின் முன்னுரை (Sri Lanka First)

துரிதமான சமத்துவம் மிக்க அபிவிருத்தி நிலையான சமாதானத்தின் திறவுகோலாகும். பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறாமல் மக்கள் ஒதுக்கப்பட்டால் பிணக்குகள் தோன்றும். இதன் விளைவாக வன்செயல்கள் பரவுவதுடன், வறுமையும் அதிகரிக்கும். இலங்கையை இதற்கு ஒரு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சுதந்திரம் கிடைத்தது முதல் மோசமான திட்டமிடல் மற்றும் குறுகிய அரசியல் சிந்தனை காரணமாக வன்முறை இன மோதல் ஏற்பட்டுள்ளது. இது, 20 வருடங்களுக்கும் மேலாக எமது நாட்டைப் பாதித்ததுடன், மக்களைப் பிளவுபடுத்தியும் உள்ளது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் வறுமையை ஒழிப்பதற்கும் நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்களை எய்துவதற்கும் தவறிவிட்டன.

சமாதான உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் சண்டை ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக தனியார்துறை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்குச் செய்ய வேண்டிய பங்களிப்பு அளப்பரியதாகும். தென்பகுதியைச் சேர்ந்த பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு சகல சமூகங்களின் சட்டபூர்வமான உரிமைகளையும், அபிலாஷைகளையும் உறுதிப்படுத்தும் அரசியல் சீர்திருத்த நடைமுறையொன்றை வகுக்க வேண்டும் என்பதை வர்த்தகத்துறை பிரதான தென்பகுதி அரசியல் கட்சிகளுக்கு உணர்த்த வேண்டியுள்ளது.

தனியார் துறைக்கு சமாதானத்தில் கூட்டு அதிகார நலன் அக்கறையொன்று உள்ளது. துரித அபிவிருத்தியின் அவசியத்தையும், மனித மேம்பாட்டிற்கும் சிறந்த கல்வி அறிவுடைய ஆளணியை உருவாக்கவும் சிறந்த உட்கட்டமைப்பை ஏற்படுத்தவும் உதவக்கூடிய சமாதானமான, உறுதியான சூழ்நிலையின் அவசியத்தையும் நாங்கள் புரிந்துள்ளோம். இது வர்த்தகத்துறை வளர்ச்சிக்கும், கன்னியமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் உதவும். நிலையான சமாதானம் இதனால் வெறும் அலங்காரச் சொல்லாக இல்லாமல் யதார்த்தமுடையதாக அமையும்.

முக்கிய பங்குதாரர் என்ற வகையில் தனியார் துறையினர் முக்கிய பங்கு ஒன்றை வகிக்க வேண்டியுள்ளது என அவர்களை நம்பச் செய்வது ஒரு சவாலாகும். இந்த வகையில் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் அவர்கள் தீவிர பங்கை வகிக்க வேண்டும். அரசியல் எதிர்விளைவுகள் ஏற்படும் என்ற அச்சத்துக்கும் மத்தியில் தலைநிமிர்ந்து செயற்படக்கூடிய துணிச்சல் அவர்களுக்கு இருக்க வேண்டும். வர்த்தகத்துறை நாட்டிற்கு முதலிடத்தை அளித்தால் மாற்றத்தை உண்டுபண்ண முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. ஸ்ரீ லங்கா பெஸ்ட் முயற்சியின் மூலம் நாம் இதனை நிரூபித்துள்ளோம். நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட்டால், நாம் அதிகமானவற்றை இழக்க நேரிடும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக வர்த்தகத்துறையினர் தீவிர பங்காற்றியமைக்கு தென்னாபிரிக்கா ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே அனுசரணையாளராக செயற்பட்டதன் மூலம் ஆபிரிக்காவில் ஏற்படவிருந்த மிக மோசமான இரத்தக்களரியுடன் கூடிய சிவில் யுத்தத்தை அவர்களால் தடுக்க முடிந்தது. தென்னாபிரிக்க வர்த்தகத்துறையின் இந்த வெற்றியை இலங்கையின் வர்த்தகத்துறையினர் ஒரு ஊக்குவிப்பாகக் கொள்ள முடியும். நிலையான சமாதானத்தைக் கருத்திற் கொண்டு தென்னாபிரிக்க அரசாங்கமும், வர்த்தகத்துறையும் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தற்பொழுது கூட்டாக செயற்படுகின்றன.

வர்த்தகத்துறைக்கு ஊக்குவிப்பு அளிக்கப்பட்டால் அது ஒரு பலம் வாய்ந்த சக்தியாக விளங்க முடியும். இந்த ஊக்குவிப்பு சொந்த நலனைக் கொண்டதாக இருந்தாலும், இது சமத்துவம் மிக்க அபிவிருத்திக்கும் சமூகப் பொறுப்புணர்ச்சிக்கும் வழிகோலும். இறுதியில் இதன்மூலம் முழு நாடே நன்மையடையும். சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் முயற்சியில் அரசாங்கமும், சர்வதேச சமூகமும், தனியார் துறையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என நான் கருதுகின்றேன்.

ஸ்ரீ லங்கா பெஸ்ட், மிகப்பெரிய வர்த்தக சமூகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சாதகமான முயற்சியாகும். 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற விமான நிலையத் தாக்குதல் காரணமாக, நாடு பொருளாதார ரீதியில் பேரழிவை எதிர்நோக்கியிருந்த வேளையில் தனியார் துறையினர் ஒன்றிணைந்து கூட்டு நிலைப்பாடு ஒன்றுக்கு வந்தனர். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தென்பகுதியில் உள்ள இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைவதன் மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதே இந்த நிலைப்பாடாகும். சமாதானம் ஏற்படாவிட்டால், இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரம் மங்கலானதாக இருக்கும் என்பதை வர்த்தகத்துறை உணர்ந்து கொண்டது. சமாதானத்தை அடைவதற்கு இன்னமும் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் பல்வேறு அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக குழுக்களுடனான இந்த முயற்சி தொடர வேண்டும். வர்த்தகத்துறை இதனை நிறுத்திவிட முடியாது.

சமாதான கூட்டணிக்கான வர்த்தகத்துறை மற்றும் ஒரு சாதகமான வர்த்தகத்துறை முயற்சியாகும். பரஸ்பர ஒத்துழைப்பு, புரிந்துணர்வு மூலம் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் உருவாக்குவதற்கான வலையமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்பும் முயற்சியில் மோதல் நடைபெறும் இடங்களில் உள்ள வர்த்தக சங்கங்கள் உட்பட பல பிராந்திய வர்த்தக சங்கங்களை ஒன்றிணைந்து செயற்பட வைப்பதே இதன் நோக்கமாகும்.

இரு நிறுவனங்களும் சமாதானம் பற்றி எடுத்துக் கூறுவதன் மூலம் அபிவிருத்தி முயற்சிகள் மூலமும் தமது நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொள்வதும் முக்கியமானதாகும். இந்த வகையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அரசாங்கம், நன்கொடை சமூகம், இலங்கை மக்கள் ஆகியோர் தனியார் துறைக்கு உற்சாகத்தையும் ஊக்குவிப்பையும் வழங்குவது முக்கியமானதாகும். சமாதானம், சமமான அபிவிருத்தி ஆகியவற்றின் பலாபலன்களை துரிதமாக வழங்குவதன் மூலம் குறிப்பாக பொருளாதார ரீதியில் பின்தங்கிய வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு வழங்குவதன் மூலம் மாத்திரமே இலங்கையில் நிரந்தர சமாதானம், வறுமைக் குறைப்பு, செல்வ வளர்ச்சி ஆகியன குறித்து நம்பிக்கை கொள்ள முடியும். மக்கள் சுபீட்சமடைந்ததும் யுத்தம் என்பது இனிமேலும் ஒரு ஆர்வமுள்ள விடயமாக இருக்க மாட்டாது.

நீலா மரிக்கார்
தலைவி
ஸ்ரீலங்கா பெஸ்ட்

இலங்கை சமாதானத்தின் முகவராக வர்த்தகம் என்ற இந்த அறிக்கையானது இலங்கையில் மோதல் தவிர்ப்பு மற்றும் சமாதானச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புதற் பணியில் வர்த்தகச் சமூகம் தற்போது வகிக்கும் பங்கு தொடர்பான ஒரு ஆய்வின் அறிக்கையாகும். இந்த மதிப்பீட்டு ஆய்வில் பதில் அளித்தவர்களில் 63 வீதத்தினர் சிங்களவர்களாகவும், 12.7 வீதத்தினர் தமிழர்களாகவும், 24 வீதத்தினர் முஸ்லிம்களாகவும் இருந்துள்ளனர்.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்று வரும் போரும் வன்செயல்களும் வளர்ந்து வரும் ஆயுதக் கலாசாரமும், இனப்படுகொலைகளும் அனைத்து இலங்கை வாழ் மக்களையும் பன்முக வடிவில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கி அழித்துள்ளதோடு எதிர்கால வாழ்வையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது. பேச்சுக்களிற்கும் மோதல் தவிர்ப்புக்களிற்கும் பல முயற்சிகள் பலராலும் மேற்கொள்ளப்பட்ட போதும் எதுவுமே இன்று வரை முழு வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையில்தான் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இன்ர நசனல் அலர்ட் மற்றும் யு.என்.டி.பி யின் உதவியுடன் சமாதான முன்னணிக்காக வர்த்தக முயற்சிகள் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. இதன் நோக்கம் வர்த்தகத்தின் வழி சமாதானத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

மோதலின் பின்னர் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தக சமூகத்தினர் ஈடுபடுவது என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் ஓர் புதிய முயற்சியாகும். இருப்பினும் இவ் அமைப்பானது கடந்த சில வருடங்களாக பலரின் கவனத்தையும் ஈர்த்து வளர்ந்து வருகின்றது. கடந்த அரசு பதவியில் இருந்த போது மிகவும் சிறப்பாகவும், வேகமாகவும் செயற்பட்ட சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகள் என்ற அமைப்பு தொடர்ந்தும் செயற்பட்டுக்கொண்டே இருக்கிறது.

உலகளாவிய ரீதியில் போர் நடைபெற்ற நாடுகளில் போரின் பின்னர் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதில் வர்த்தக சமூகத்தினர் பெரும் பங்காற்றியுள்ளனர். இந்த முன்னுதாரணத்தை வைத்துக்கொண்டு இவ் அமைப்பு பல செயற்பாடுகளைச் செய்து இலங்கை வாழ் தமிழ், சிங்கள மக்களிடையே புரிந்துணர்வையும், நட்புறவையும் ஏற்படுத்தியுள்ளது.

வர்த்தக விஜயங்கள் - பிராந்தியப் பொருளாதாரச் செயற்பாடுகள் - சமாதானச் சந்திப்புக்கள் - அரச கொள்கை வகிப்போருடனான சந்திப்புக்கள் - சமாதானத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்கள் - தொழில் வாய்பையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் பயிற்சித் திட்டங்கள் - பயிற்சிப் பட்டறைகள் - போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனான சந்திப்புக்கள் - பேச்சுக்களுக்கான ஒருங்கிணைப்பாளராய்ச் செயற்படுதல் சர்வதேச வர்த்தக அறிவுப் பயணங்கள் - பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தக முதலீட்டுச் சந்தையை உருவாக்கல் சமாதான ஊக்குவிப்பு - கலாசார பகிந்துகொள்ளல் என்பவற்றின் வழி சமாதானப் பாலம் அமைக்கும் திட்டங்கள் - தொழில் கடனுதவித் திட்டங்கள் - பிராந்திய வர்த்தக விபரக்கொத்து தயாரித்தல் எனப் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

இந்ந அறிக்கையின் முதல் பகுதியான அறிமுகப்பகுதியானது இலங்கையில் நிலவும் மோதலையும், இம் மோதல் பொருளாதாரத்திலும் தனியார்துறையிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் விளக்குகின்றது.

இரண்டாம் பகுதியான இலங்கையின் வர்த்தகமும் சமூகமும் என்ற பகுதி சமாதானம் மற்றும் மோதல் பற்றி வர்த்தகத்துறையின் உள்ளூர் தகவல்களையும், மோதலுக்கான காரணங்கள், தீர்வுகள் வர்த்தகத்துறையின் சமாதானத் தலையீட்டுக்கான செயல் ஊக்கம் என்பன பற்றித் தெரிவிக்கின்றது. மூன்றாம், நான்காம் பகுதிகள் மிக முக்கியமான பகுதிகளாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்துறையின் முன்னெடுப்புக்களையும், முயற்சிகளையும் வர்த்தகத்துறையின் தகைமைகள் பற்றியும் தெரிவிக்கின்றது. இவ் ஆய்வறிக்கையைப் படிப்போர் மிகக் கவனத்துடன் படிக்க வேண்டிய பகுதி இதுவாகும்.

சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகள் என்ற இவ் அமைப்பின் செயற்பாடுகள் புரிந்துணர்வு இல்லாமையால் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் முடிவினைக் கொண்டு வந்து வர்த்தகத்தின் வழி சமாதானத்தை அடையும் காலம் மிக விரைவில் வரும் என எதிர்பார்ப்போம்.

சமாதானத்திற்கான வர்த்தகக் கூட்டணியின் அங்கத்தவர்

# இலங்கை

## அறிமுகம்: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில்[1] வர்த்தகத்துறையின் பங்கு

பனிப்போர் முடிவடைந்தது முதல் உலகெங்கிலும் 125 க்கும் அதிகமான மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் 7 மில்லியன் வரையிலான மக்கள் உயிரிழந்துள்ளனர்.[2] 1990 ஆம் தசாப்தத்தின் நடுப்பகுதி தொடக்கம், மோதல்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், சில சண்டைகள் தொடர்ந்து இடம்பெற்று பெரும் எண்ணிக்கையானோரின் உயிர்களைப் பலிகொண்டு வருகிறது. தேசிய மற்றும் பிராந்தியப் பொருளாதாரங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. குடிமக்கள் உயிரிழப்பதுடன், மனித உரிமை அத்துமீறல், ஜீவனோபாய இழப்பு, இடம்பெயர்வு ஆகியனவும் நிகழ்கின்றன. உலகெங்கிலும் யுத்தம் காரணமாக தற்சமயம் சுமார் 25 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.[3] பல சண்டைகளைப் பொறுத்தமட்டில் யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதான ஒப்பந்தம் ஆகியன வன்செயல்கள் காரணமாக முடிவுக்கு வந்துள்ளன. இந்நாடுகளில் மீண்டும் யுத்தம் ஏற்படும் ஆபத்து காணப்படுகிறது.

ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருதல், அவை மீண்டும் ஏற்படும் வேளையில் அதனை நிறுத்துதல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியன தொடர்ந்தும் பெரும் சவாலாகவே உள்ளன. இந்தப் பணிக்கு கூட்டுமுயற்சியும், ஆற்றல்களும், வளங்களும் மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களையும் சர்வதேசத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பட்ட தனிநபர்கள், அமைப்புகள் ஆகியவற்றின் திடசங்கற்பமும் தேவைப்படுகின்றன.

---

[1] இந்த வெளியீட்டுக்கான அறிமுக உரை அண்மைய இன்டர்நஷனல் அலர்ட் வெளியீடான (2006) உள்ளூர் வர்த்தகம், உள்ளூர் சமாதானம்: உள்ளூர் வர்த்தகத்துறையின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றல் என்னும் பிரசுரத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. பிணக்குகளால் பாதிக்கப்பட்ட 20 க்கும் அதிகமான சமூகங்களில் சமாதானத்திற்கான பங்களிப்பைச் செய்யும் பொருட்டு வர்த்தக சமூகத்தினர் மேற்கொண்ட தீர்க்கமான நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட அனுபவங்கள் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகியன பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2] Smith, D. (2003) *The Atlas of War and Peace* (London, UK: Earthscan).

[3] Human Development Report (2005) *International Co-operation at a Crossroads: Aid, Trade and Security in an Unequal World* (New York, US: UNDP).

ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசசார்பற்ற நிறுவனமான இன்டர் நஷனல் அலர்ட் உலகெங்கிலுமுள்ள பங்களிப்பாளர்ளினதும், உள்ளூர் அமைப்புக்களினதும் உதவியுடன் சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை மதிப்பீட்டை வெளியிடுகின்றது. கூட்டுமுயற்சியின் ஓர் அங்கமாக நிலையான சமாதானத்திற்கு உள்ளூர் தனியார்துறை மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பை சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை மதிப்பீடு எடுத்து விளக்குகின்றது. தகராறுகளுடன் வர்த்தகம் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது என்றும் அதேவேளையில், பல்வேறு மட்டங்களில் இவற்றுக்குத் தீர்வு காண்பதில் அது முக்கிய பங்கை வகிக்க முடியும் என்றும் இந்த மதிப்பீடு கூறுகின்றது. சண்டைகளால் பாதிக்கப்பட்ட 20 க்கும் அதிகமான நாடுகளில் உள்ள வர்த்தகத்துறையினரின் அனுபவங்களின் அடிப்படையில் உத்தியோகபூர்வ சமாதான நடவடிக்கைகளுக்கு வர்த்தகத்துறை மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பு, சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அது எடுக்கக்கூடிய முயற்சி, பிளவுபட்ட சமூகங்கள் குழுக்களிடையே இடைவெளியை கட்டியெழுப்புவதற்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு, பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வர்த்தகத்துறை செய்யக்கூடிய பங்களிப்பு, பெண் தொழில் முயற்சியாளர்களின் விஷேச பணி ஆகியன குறித்து இந்த மதிப்பீடு கவனம் செலுத்துகின்றது.

## மோதல் நடைபெறும் பிரதேசங்களில் உள்ளூர் தனியார்துறை

சண்டை நடைபெறும் வலயங்களில் தனியார் துறை சம்பந்தப்பட்ட இரண்டு பிரதான அம்சங்களாக சர்வதேச சிந்தனையும் கொள்கையாக்கமும் விளங்குகின்றன. அபிவிருத்திக் கொள்கை, உதவி, தீர்மானங்கள், மோதலுக்குப் பின்னரான புனர்நிர்மாண முயற்சிகள் ஆகியன இவற்றில் அடங்கியுள்ளன.

பனிப்போரின் பின்னர் அபிவிருத்தி சமூகம் தொடர்பாக முதலாவது கருத்தொருமைப்பாடு ஏற்பட்டது. யுத்தத்தின் பாதிப்பில் இருந்து மீட்சி பெற்றுவரும் நாடுகள் உட்பட பல நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு பாதையாக சுதந்திர சந்தை அடிப்படையிலான பொருளாதாரமும், தனியார்துறை தலைமையிலான பொருளாதார வளர்ச்சியும் விளங்குவது பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கோட்பாடு தற்பொழுது விரிவடைந்து அபிவிருத்தி நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட சமகால கொள்கை அறிக்கைகளிலும், ஆவணங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளது.[4] அபிவிருத்திக்கும், வறுமை ஒழிப்புக்குமான கருவியாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார்துறை முதலீடு முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வளர்முக நாடுகள் அவற்றின் கொள்கைகள் மூலம் ஊக்குவித்து வருகின்றன. யுத்தம் நடைபெறும் பிராந்தியங்களில் கூட இதுவே பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்து வறுமைக் குறைப்புக்கு வித்திடும் என்றும் இது சமாதானத்திற்கு பங்களிப்பைச் செய்யும் என்றும் தனியார்துறை இதில் முக்கிய பங்கை[5] வகிக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது.

---

[4] See for instance CIDA (2004) *Sustainable Development Strategy 2004-06: Enabling Change* (Ottawa, Canada: CIDA); Norad (2004) *Peacebuilding - A Development Perspective* (Oslo, Norway: Norad); Commission on Private Sector and Development (2004) *Unleashing Entrepreneurship: Making Business Work for the Poor* (New York, US: UNDP).

[5] DFID (2005) *Fighting Poverty to Build a Safer World: A Strategy for Security and Development* (London, UK: DFID); World Bank (2000) *Attacking Poverty: Opportunity, Empowerment and Security* (Washington DC, US: Word Bank); SIDA (2005) *Promoting Peace and Security through Development Co-operation* (Stockholm, Sweden: Edita).

சண்டை நடைபெறும் வலயங்களில் தனியார் துறை பற்றிய இரண்டாவது சர்வதேச சிந்தனைக் கோட்பாடு தனியார் துறையின் தாக்கம் பற்றியும் பொருளாதார செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. யுத்த பொருளாதாரங்கள் பற்றி இதில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சண்டை நடைபெறும் பல பிரதேசங்களில் இடம்பெறும் இலாபகரமான வர்த்தக நடவடிக்கைகள் பற்றி கடந்த தசாப்தத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.[6] கருத்து வேறுபாடுகளுக்கு இந்த செயற்பாட்டு அமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ள அதேவேளையில், யுத்தத்தினால் இலாபமடையும் ஆயுதக் குழுக்கள் குறித்தும் அதனை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவும் வர்த்தக முறைகள் பற்றியும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இரு பிரச்சினைகளிலும் இயற்கை வளங்கள் பிரித்தெடுக்கப்படுவது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது.[7] சில வகையான வர்த்தக நடவடிக்கைகள் சிவில் யுத்தத்தின் கால அளவையும் முனைப்பையும் தன்மையையும் நிர்ணயிப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் பெருமளவில் உள்ளன. இதன் காரணமாக இந்த அழிவுத்தன்மையை மட்டுப்படுத்துவதற்கு பரிகாரம் காண முயற்சி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தப் பொருளராதாரம் தொடர்பான ஆராய்ச்சியும் பதில் நடவடிக்கையும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு நெருக்கடிமிக்க புதிய அம்சத்தை தோற்றுவித்துள்ளன.

இந்த பகுப்பாய்வையும் கொள்கைப் போக்கையும் கருத்திற் கொண்ட சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை மதிப்பீடு, யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் சில வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றியும் இதன் சில பகுதிகள் பரந்த அரசியல் பொருளாதாரத்திலும் ஆட்சி முறையிலும் எவ்வளவு தூரம் பின்னிப் பிணைந்துள்ளன என்பது குறித்தும் சமாதானத்திற்கும், பாதுகாப்புக்கும் தனியார்துறை செய்யக்கூடிய பங்களிப்பு குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது. இந்த வினாவை ஆராய்ந்துள்ள இந்த மதிப்பீடு சமாதானத்தைக் கட்டியெழுபெப்புவது தொடர்பாக ஆய்வுக்கு உட்படாத அம்சத்திற்கு பரிகாரம் கண்டு உலகெங்கிலுமுள்ள வர்த்தக சமூகத்தினர் மத்தியில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான விழிப்புணர்வை மேலும் பரப்புவதற்கு உததேசித்துள்ளது.

ஒட்டுமொத்தமான மதிப்பீடு (இதில் இலங்கை பற்றிய ஆய்வு ஒரு பகுதி) ஆப்கானிஸ்தான், பொஸ்னியா, கொலம்பியா, கௌத்தமாலா, இஸ்ரேல்/பலஸ்தீனம், நேபாளம், சோமாலியா, இலங்கை, தெற்கு கோகஸஸ் ஆகியன பற்றிய 9 நாடுகள் அல்லது பிராந்தியங்கள் பற்றிய அறிக்கைகளையும் 21 குறுகிய மதிப்பீடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

---

[6] See, for example, Ballentine, K. and Sherman, J. (eds.) (2003) *The Political Economy of Armed Conflict: Beyond Greed and Grievance* (Boulder, US: Lynne Rienner); Fischer, M. and Schmelzle, B. (eds.) (2004) 'Transforming War Economies: Dilemmas and Strategies' *Berghof Handbook Dialogue Series* No. 3 (Berlin, Germany: Berghof Research Center for Constructive Conflict Management); and Collier, P. (2000) 'Doing Well Out of War: an Economic Perspective' in Berdal, M. and Malone, D. (eds.) *Greed and Grievance: Economic Agendas in Civil Wars* (Boulder, US: Lynne Rienner).

[7] See, for example, Le Billon, P. (2005) 'Fuelling War: Natural Resources and Armed Conflicts' *Adelphi Paper* No. 373, International Institute for Strategic Studies (London, UK: Taylor and Francis); Ross, M. (2003) 'Oil, Drugs, and Diamonds: The Varying Role of Natural Resources in Civil Wars' in Ballentine and Sherman, op. cit; Global Witness (2004) *Same Old Story: A Background Study of Natural Resources in the DRC* (London, UK: Global Witness); and Global Witness (1998) *A Rough Trade: The Role of Diamond Companies and Governments in the Angolan Conflict* (London, UK: Global Witness).

# மோதல் தொடர்பாக உள்ளூர் வர்த்தகத்துறையின் பதில் நடவடிக்கை - பின்காட்சித் தோற்றத்தை வரைதல்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் உள்ளூர் அமைப்பாக இருந்தாலும்சரி, சர்வதேச அமைப்பாக இருந்தாலும்சரி மோதல் தொடர்பாகவும், முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நல்ல புரிந்துணர்வைக் கொண்டிருப்பது அவசியமானதாகும். இது இல்லாத பட்சத்தில் சமாதானத்திற்கு உதவும் முயற்சிகள் பக்கச்சார்பானதாகவும், நன்மையைவிட அதிக தீங்கை விளைவிக்கக்கூடியதாகவும் அமையும்.[8] சமாதானத்திற்கு உள்ளூர் தனியார்துறையின் பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி புரிந்து கொள்வதற்கு மோதலிலும், சமாதானத்திலும் அதற்குள்ள முழு அளவிலான தொடர்புகள் பற்றி விளங்கிக்கொள்வது அவசியமானதாகும்.

வன்செயல், மோதல்கள் தொடர்பான வர்த்தகத்துறையின் பதில் நடவடிக்கைகள் பல்வேறு விதமான மூலோபாயங்களை உள்ளடக்கியது என்பதையும் மாறிவரும் செயல்திறன்கள், சூழ்நிலைகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றுக்கு பழக்கப்படுத்திக்கொள்ள கூடியதாக அமைய வேண்டி உள்ளது என்பதையும் ஒட்டுமொத்த மதிப்பீட்டு ஆவணம் (இலங்கை ஆய்வு உட்பட) புலப்படுத்துகின்றது. இந்தப் பல்வகை வர்த்தக பதில் நடவடிக்கை பின்காட்சி தோற்றம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒருபுறம் மோதலை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள், ஆயுதப் போராட்டம் தொடர்வதற்கு நிதியை வழங்கக்கூடிய சட்டவிரோத வர்த்தகம் ஒரு சமூக வர்க்கத்தினர் என்ற அடிப்படையில் கட்டமைப்புத் தொடர்புகள், வன்செயலுக்கான மூல காரணங்கள் ஆகியன இவற்றில் அடங்கியுள்ளன. மோதலின் நிலைமைகளுக்கும், சவால்களுக்கும் ஏற்ப வர்த்தகத்துறை அதனைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்கான மூலோபாயங்கள் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் சண்டையை நீடிக்கச் செய்வதற்கான அம்சங்களையும் தாக்கத்தைக் குறைப்பதற்கான அம்சங்களையும் கொண்டுள்ளன. இறுதியாக மோதலைக் குறைத்து சமாதானத்துக்கான வாய்ப்புக்களைப் பலப்படுத்துவதற்கான பதில் நடவடிக்கைகள், என்பவற்றை இந்த ஆய்வு சமாதான தொழில் முயற்சித் திறன் என விபரிக்கின்றது.

# சமாதானத்தைக் கட்டியெழுப்புவது என்றால் என்ன?

சமாதானத்தை வளர்ப்பதற்கான முயற்சிகள் நிச்சயம் சிக்கல் மிகுந்தவையாக உள்ளன. மோதலின் சிக்கல் தன்மையை இது பிரதிபலிக்கின்றது. மோதலுக்கான காரணங்கள் பலவாகவும், பல்தரப்பு தோற்றம் கொண்டவையாகவும், காலத்திற்குக் காலம் மாற்றமடையும் வகையிலும் அமைந்துள்ளன. சமூக, கலாசார, அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம், பூகோளவியல், சித்தாந்தவியல் அம்சங்களை உள்ளடக்கியதாக இவை அமைந்துள்ளன. மேலும், இவை பல்வேறு வகையான செயற்பாட்டாளர்களையும், கோட்பாடுகளையும், நிகழ்ச்சி நிரல்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்தப் பல்வேறு தோற்றமுடைய பிணக்குக்கு பரிகாரம் காண்பதற்கான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடு ஒரு நீண்டகால நடைமுறையாக விளங்குகின்றது. பல்வேறு செயற்பாடுகளை அது உள்ளடக்கியுள்ளது. சமாதானம், உறுதிப்பாடு, சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியனவற்றை ஏற்படுத்தக்கூடிய கட்டமைப்பு அபிவிருத்தி அரசியல் செயற்பாட்டு முறை ஆகியன இதில் அடங்கியுள்ளன. ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அல்லது தவிர்ப்பதற்கு உதவக்கூடிய வகையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை ஆயுதப் போராட்டத்தின் போது பயன்படுத்தலாம். அல்லது ஆயுதப் போராட்டம் ஏற்படுவதை தடுக்கும் முயற்சியாகப் பயன்படுத்தலாம்.[9]

---

[8] See Anderson, M. B. and Olson, L. (2004) *Confronting War: Critical Lessons for Peace Practitioners* (Cambridge, US: Collaborative for Development Action).

[9] Smith, D. (2004) *Towards a Strategic Framework for Peacebuilding: Getting their Act Together* (Oslo, Norway: Royal Norwegian Ministry of Foreign Affairs).

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையானது, ஒவ்வொரு பிணக்கினதும், விஷேச தன்மைக்கு ஏற்ப பல்வேறு மூலோபாயங்களையும், செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். இவற்றை நான்கு பிரிவுகளாக வகுக்கலாம். அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, நல்லிணக்கம். இந்தப் பிரிவுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகள் ஒன்றில் ஒன்று தங்கியதாக விளங்குகின்றது. உதாரணமாக, அடிப்படைப் பாதுகாப்பு இல்லாவிட்டால், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் வர்த்தகத்துறையில் நீண்டகால முதலீட்டு வாய்ப்புக்கள் ஏற்படும் சாத்தியம் இல்லை. ஆரோக்கியமான வியாபாரத்துறை ஒன்று இல்லாவிட்டால், நிரந்தர வேலைவாய்ப்புக்களைக் கண்டுபிடிப்பது ஒரு சவாலாக இருக்கும். மோதல் முடிவுக்கு வந்த பின்னர், பல போராளிகள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு உதவியாக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே, இந்தச் சகல மட்டங்களிலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு ஒரு தனி நபரால் அல்லது நிறுவனத்தினால் பரிகாரம் காண முடியாது என்பது தெளிவாகின்றது. உள்ளூர் மட்டத்திலும், சர்வதேச ரீதியிலும் பல்வேறு தரப்பட்டவர்களின் பங்களிப்பு இதற்கு அவசியமாகின்றது. இவர்கள் மேலதிகப் பணிகளை மேற்கொள்ளக்கூடியவர்களாகவும், அதற்கான ஆணையைக் கொண்டுள்ளவர்களாகவும் விளங்க வேண்டும்.

யுத்தத்தில் இருந்து மாற்றமடைந்து வரும் நடைமுறைகளுக்கு உதவுவதில் வெளிநாட்டு அரசாங்கங்கள், அரசாங்கங்களுக்கு இடையிலான நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற வெளி சக்திகள் முக்கிய பங்கை வகிக்க முடியும். ஆயினும், உள்ளூர் செயற்பாட்டாளர்களே சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படைச் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பது தொடர்பாக ஏகமனதாக இணக்கம் காணப்படுகிறது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாய அணுகுமுறை உள்ளூர் செயற்பாட்டாளர்களின் முதன்மை இடத்தை ஊக்குவிக்கின்றது. இதற்கு அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளில ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது. உள்ளூர் முயற்சிகளுக்கு வெளி உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக இது தேசிய எல்லைகளுக்கும் அப்பாற்பட்ட கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

தற்போதுள்ள வலையமைப்புகள், சங்கங்கள் ஆகியன ஊடாக சமூகத்தின் சகல மட்டங்களிலும் வியாபித்துள்ள உள்ளூர் தனியார்துறை தீர்க்கமான பங்களிப்பைச் செய்ய முடியும். வியாபாரிகளுடனும் ஏனைய குழுக்களுடனும் உள்ளூர் தனியார் துறை தொடர்புகளைக் கொண்டிருப்பதனாலேயே இது சாத்தியமாகின்றது.

## சமாதான தொழில்முயற்சித் திறன் - ஒரு கண்ணோட்டம்

பல்வேறு தரப்பட்ட சண்டை நிலைமைகளின் போது சமாதானத்தை வளர்ப்பதற்கு வியாபாரத்துறை மேற்கொள்ளும் பலதரப்பட்ட முயற்சிகள் பற்றி சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை வெளியீட்டுக்கென சேகரிக்கப்பட்ட மதிப்பீட்டு ஆவணம் மூலம் தெரிய வருகின்றது. பொருளாதார, பாதுகாப்பு, அரசியல் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு வர்த்தகத்துறை எவ்விதம் பங்களிப்பைச் செய்ய முடியும் என்பதை சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை சுட்டிக்காட்டுகின்றது.

## உத்தியோகபூர்வ சமாதான பேச்சுவார்த்தைகளில் உள்ளூர் வர்த்தகத்துறையின் பங்கு

உத்தியோகபூர்வமான அரசியல்மட்ட சமாதான நடவடிக்கை சம்பந்தப்பட்டமட்டில் வர்த்தகத்துறையினர் மோதலுக்குத் தீர்வு காணும் விடயத்தில் முக்கியமான ஒத்துழைப்பு பங்களிப்புகளைச் செய்துள்ளமை பற்றி (Track 1) இந்த மதிப்பீடு குறிப்பிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களின் அபிப்பிராயத்தை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லவும், ஆலோசனை வழங்கவும், சமாதானத்திற்கு ஆதரவு திரட்டவும், நிர்வாக மற்றும் பொருள் கட்டமைப்பு ரீதியான

உதவிகளை வழங்கவும் ஏதுவாக வர்த்தகர்கள் பேச்சுவார்த்தை நடத்தும் குழுவின் ஒரு அங்கமாக அல்லது வெளிநபராக பங்களிப்பைச் செய்துள்ளனர். வர்த்தகத்துறைத் தலைவர்கள் தேவையான மூலவளங்களையும், ஆற்றல்களையும் கொண்டு வந்துள்ளனர். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக அரசியல் கொள்கை வகுப்பாளர்களுடன் தமக்குரிய நெருங்கிய தொடர்புகள் மூலம் உதவியுள்ளனர். உடன்படிக்கைகளை அமுல் செய்வதற்கு இவர்களது மூலவளங்களும் ஆற்றல்களும் முக்கிய அம்சமாக உள்ளன. சமாதான பலாபலன்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் இவை உதவுகின்றன. முக்கிய மூலவளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மூலோபாயத்தில் தீவிர பங்கை வகிக்கக்கூடிய நிலையில் தனியார் துறை இருப்பதே இதற்குக் காரணமாகும்.

## உள்ளூர் வர்த்தகமும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் பொருளாதார கன பரிமாணங்களும்

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதில் வர்த்தகத்துறை முக்கிய பங்கை வகிக்கின்றது என்ற சராசரி அபிவிருத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூர் வர்த்தகத்துறை பொருளாதார ரீதியான பங்களிப்பைச் செய்ய முடியுமென பெரிதும் கருதப்படுகின்றது. ஆனால், இந்தப் பிரச்சினை மேலும் கவனமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. வர்த்தகத்துறை மோதலின் பின்னணியில் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகளை நீடிக்கச் செய்யக்கூடும். இது தெரியாமலேயே நடைபெறலாம். அதேவேளையில், பல மோதல்களுக்குக் காரணமாக உள்ள சமூக பொருளாதார மோதல்களுக்குத் தீர்வு காணும் ஆற்றலையும் கொண்டுள்ளதாக வர்த்தகத்துறை விளங்குகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவினருக்கு மூலவளங்கள், வேலைவாய்ப்புக்கள் மற்றும் ஏனைய வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்படுவதால், ஆத்திரம், அபிவிருத்திப் பின்னடைவு ஆகியன ஏற்பட்டு, அவை வன்செயலுக்கு வித்திடலாம். பொருளாதாரக் காரணங்கள் மற்றும் வன்முறைத் தகராற்றுக்கான காரணிகளுக்குப் பரிகாரம் காண்பதில் தீர்க்கதரிசனம் மிக்க வர்த்தகத்துறை எவ்விதம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதை இந்த மதிப்பீடு புலப்படுத்துகின்றது. பரந்த அளவிலான சமூகத் தொடர்புகள் வேலைத்தலங்களில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், ஆதரவு திரட்டும் முயற்சிகள், கூட்டுப்பொருளாதார முயற்சிகள் ஆகியன இவற்றில் அடங்கியுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் வர்த்தகத்துறை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கு பொருளாதார ரீதியான முக்கிய பங்களிப்பைச் செய்ய முடியும்.

## உள்ளூர் இணைப்பாளர்களாக வர்த்தகம்: மோதல்கள் தோன்றியுள்ள இடங்களில் உறவுகளைக் கட்டியெழுப்புதல்

வன்முறை மோதலினால் பிளவுபட்டுள்ள சமூகங்களுக்கு இடையிலான உறவுகள் பொதுவாக பாதிக்கப்பட்டிருக்கும். கடந்தகால அட்டூழியங்கள் காரணமாக இவர்கள் மத்தியில் நம்பிக்கையின்மை, ஆத்திரம் ஆகியன பெருமளவில் காணப்படும். சமூகத்தின் தலைவர்கள் என்ற வகையில் உள்ளூர் வர்த்தகத் துறையினர் மோதல்கள் காரணமாக பிளவுபட்டிருக்கும் சமூகங்கள் மத்தியில் சீர்குலைந்திருக்கும் உறவுகளைச் சீர்படுத்துவதற்கு பெரும் பணியாற்ற முடியும். இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்துதல், கூட்டுப் பொருளாதார நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அவற்றில் பங்குகொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் இதனை மேற்கொள்ள முடியும். பேச்சுவார்த்தை மூலம் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் ஒரு பொதுவான நிலைப்பாடு உருவாகலாம். இதன்மூலம் அவர்கள் மோதல்களைப் புதிய கண்ணோட்டத்தில் பார்க்கவும், அதற்கு அமைய தமது சொந்த இடங்களில் இது தொடர்பாக செல்வாக்கைப் பிரயோகிக்கவும் அவர்களால் முடியும். வர்த்தக நடவடிக்கைகள் சண்டையில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினருக்கிடையில் எஞ்சியுள்ள ஒருசில தொடர்புகளில் ஒன்றாக இருக்கலாம். மோதல் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஆரம்பமாகும் முதல் நடவடிக்கைகளில் ஒன்றாகவும் வர்த்தகத்துறை விளங்குகிறது. பல

சந்தர்ப்பங்களில் இத்தகைய தொடர்புகள் இலாபகரமானதாகவும், மற்றவர்களின் எண்ணங்களை ஈர்க்கும் வகையிலும் அமைந்துள்ளன. சமாதானச் செயற்பாடுகள் பரஸ்பரம் நன்மையளிக்கும் என்பதையும், அதுவே விரும்பத்தக்கது என்பதையும் இது எடுத்துக்காட்டும்.

## சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதில் உள்ளூர் வர்த்தகத்துறையின் பங்கு

மோதலின் போதும், மோதலுக்கப் பின்னரான காலப்பகுதியிலும் எதிர்நோக்கப்படும் பாதுகாப்பு ரீதியான முக்கிய சவால்களுக்குப் பரிகாரம் காண்பதிலும், உள்ளூர் வியாபாரத்துறை பங்களிப்புச் செய்ய முடியும். தேசிய மட்டத்திலான ஆயுதக் களைவு மற்றும் போராளிக் குழுக்களைக் கலைத்துவிடுதல் ஆகியவற்றுக்கான திட்டத்தின் ஓர் அங்கமாக முன்னைய போராளிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதில் உள்ளூர் வர்த்தகத்துறை உதவ முடியும். அல்லது சிறிய மற்றும் இலகு ரக ஆயுதங்களைக் கையேற்கும் திட்டங்களுக்கான நிதி மற்றும் பௌதிக வளங்களை வழங்கியும் உத்தியோகபூர்வ பாதுகாப்புக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தியும் உதவ முடியும். போராட்டங்கள் மீண்டும் ஏற்படுதல் மற்றும் சமூக மட்டப் பாதுகாப்பு சீர்குலைதல் ஆகியன பற்றிய தகவல்களை முன்கூட்டியே வழங்கி எச்சரிக்கை செய்யும் சாதனமாகவும் வர்த்தகத்துறை செயல்பட முடியும்.

நம்பகமான பாதுகாப்பு ஏற்பாடுகள் அல்லது அரச படைகளின் செயற்பாடுகள் இல்லாத நிலையில் வர்த்தகத்துறையினர் தங்களது சொந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளனர். தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் அல்லது விழிப்புக் குழுக்களின் உதவியுடன் அவர்கள் இதனை மேற்கொள்கின்றனர். இது முன்னைய போராளிகளுக்கு இராணுவ ரீதியற்ற வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு உதவியாக இருக்கும். அதேவேளையில், முழுமையான, நம்பகமான அரச பாதுகாப்புச் சேவை மேலும் சீர்குலைந்து போவதற்கும் இது வழிவகுக்கலாம். நீண்டகால அடிப்படையிலான ஸ்திரப்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்ய விரும்பும் வர்த்தகத்துறையினர் இந்தப் பிரச்சினைகளைக் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது.

## சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பெண் தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பு

பொருளாதாரத்துறையில் பெண்களின் பங்கைப் பலப்படுத்துவது குறித்து, குறிப்பாக சிறிய அளவிலான நிதி மூலம் அடிமட்டத்தில் அவர்களின் பங்கைப் பலப்படுத்துவது பற்றி பிரதான நீரோட்ட அபிவிருத்தியில் தற்பொழுது கவனம் செலுத்தப்படுகின்றது. சமாதானத்தை வளர்ப்பதிலும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்வதிலும் பெண்களின் பங்களிப்பு தொடர்பான அங்கீகாரம் தற்பொழுது அதிகரித்து வருகிறது. பல முக்கிய முயற்சிகளில் குறிப்பாக, மோதல் சம்பந்தப்பட்ட பால்நிலை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வர்த்தகத்துறையில் ஈடுபடும் பெண்கள் முன்னணி வகிக்கின்றார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. பல்வேறு இனப் பிரிவினரிடையே அடி மட்டத்தில் ஜீவனோபாயத்தை உருவாக்கும் பணியில் பெண்கள் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. மோதலில் சம்பந்தப்பட்ட இரு பகுதிகளிலும் அவர்கள் சிறு வர்த்தக முயற்சிகள் தொடர்பாக கூட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நல்லிணக்கத்தை வளர்க்கின்றனர்.

## சமாதான தொழில் முயற்சித் திறனுக்கு எது உந்துசக்தியாக உள்ளது?

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்களை வர்த்தகத்துறை பின்பற்றுவது எவ்விதம் சாத்தியமாகின்றது என்ற முக்கிய வினா குறித்தும் சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை மதிப்பீட்டில் சிறிது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சமாதானத் தொழில் முயற்சித் திறனுக்கு எது உந்துசக்தியாக விளங்குகின்றது? சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் வர்த்தகத்துறையின் பங்கு தொடர்பான நான்கு முக்கிய உந்துசக்திகள் பற்றி இந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

## மோதலினால் ஏற்படும் செலவு பற்றிய கணக்கீடு

மோதலினால் தனியார் துறைக்கு ஏற்படும் பாதிப்பே வர்த்தக சமூகத்தினரின் அடிப்படைப் பிரச்சினையாகவுள்ளது. பொருளாதார பின்னடைவு, முதலீட்டு வீழ்ச்சி, உட்கட்டமைப்பு அழிவு, மூலதனத்திற்கும் ஆளணிகளுக்கும் ஏற்படும் பாதிப்பு, வர்த்தக பங்காளிகளை இழக்கும் நிலை, செயற்படும் சுற்றாடலில் போதிய பாதுகாப்பு இன்மை, வளர்ச்சிக்கான வாய்ப்பு இல்லாமல் போதல் ஆகியன மோதல் காரணமாக வர்த்தகத்துறைக்கு ஏற்படும் நேரடித் தாக்கங்களில் சிலவாகும். இதுபற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு, ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகியன ஏனையவர்கள் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கான முக்கிய காரணிகளாக உள்ளன. பெரிய நிறுவனங்கள் ஏனையவர்களை சமாதானத்தை வளர்க்கும் நடவடிக்கையில் இணைந்து கொள்ளுமாறு வலியுறுத்துவதற்கு இதனைப் பயன்படுத்துகின்றன.

## தவிர்க்க முடியாத தார்மீகக் கடப்பாடு

சமாதானத் தொழில் முயற்சித் திறனை முற்றிலும் பொருளாதார ரீதியானது என குறைத்து மதிப்பிட முடியாது. இதில் சம்பந்தப்பட்டவர்களில் தவிர்க்க முடியாத தார்மீக கடப்பாடும் சம பங்கை வகிக்கின்றது. சமூகத்தின் பெரும் நலனைக் கருத்திற் கொண்டு துன்பங்களை நீக்கி சமாதானத்தை வளர்ப்பதிலுள்ள ஆர்வம் சமாதானத் தொழில் முயற்சித் திறனை ஊக்குவிப்பதற்கான பொருளாதார அக்கறைகளைப் பலப்படுத்த உதவுகின்றது. இந்த அம்சம் உள்ளூர் வர்த்தகத் துறையினருக்கும் அவர்களது வெளிநாட்டு முதலீட்டு பங்காளிகளுக்கும் இடையிலான முக்கிய வேறுபாட்டைப் பலப்படுத்துகின்றது. உள்ளூர் வர்த்தகத்துறையினர் மோதலினால் பாதிக்கப்படும் சமூகத்தின் ஒரு அங்கமாக விளங்குகின்றனர். எனவே, மோதல் காரணமாக தமது சொந்த சமூகங்களுக்கும், குடும்பங்களுக்கும் ஏற்படும் அவலநிலையையும் அழிவையும் அவர்கள் அனுபவபூர்வமாக அறிந்து கொள்கின்றனர்.

## ஏனையவர்களால் வழங்கப்படும் வாய்ப்புக்கள்

சர்வதேச அபிவிருத்தி அல்லது அமைதிகாக்கும் நிறுவனங்கள், ஆயுதக் குழுக்கள், உள்ளூர் சிவில் சமூகக் குழுக்கள், அவர்களின் சர்வதேச பங்காளிகள் ஆகியோரும் மோதல்கள் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக வியாபாரத்தை ஊக்குவிக்க தீவிர ஆர்வம் காட்டுகின்றனர் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் சம்பந்தப்படுகின்றனர். பேச்சுவார்த்தை, ஆய்வு, ஆகியவற்றுக்கு இடமளிக்கும் பங்காளிகள் மூலம் வர்த்தக முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படலாம். சமாதான நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களுடன் அரசியல் மற்றும் பாதுகாப்பு ரீதியான நன்மைகள் மற்றும் நிதியுதவி ஊக்குவிப்பு ஆகியன பரிமாற்றம் செய்யப்படலாம். பல சந்தர்ப்பங்களில் வர்த்தகம் ஒரு கவர்ச்சிகரமான வாய்ப்பாக விளங்குகின்றது. இதன் காரணமாக, சமாதானத்திற்கு ஆதரவான பங்காளிகளாகச் செயற்படுவதில் குறிப்பிட்ட தரப்பினர் ஆர்வம் காட்டுகின்றனர்.

## ஸ்தாபக சமூகப் பொறுப்புக்களை சர்வதேச மயப்படுத்தல் (CSR)

ஸ்தாபக சமூகப் பொறுப்பு மனப்பான்மை அதிகரித்து வரும் மற்றுமொரு போக்காக விளங்குவதை இந்த ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக, ஒரு குறித்த மட்டத்தை அடைந்துள்ள நிறுவனங்களுக்கு CSR எனப்படும் ஸ்தாபக சமூக பொறுப்பு முறை மோதல் தொடர்பான சில பிரச்சினைகளுக்கு நேரடிப் பரிகாரம் காண்பதற்கான ஒரு கட்டமைப்பாக அமைகின்றது. உதாரணமாக, ஊழல் அல்லது நியாயமற்ற தொழில் நடைமுறைகள் ஆகியன தொடர்பாக இந்த வரம்பு மூலம் நேரடிப் பரிகாரம் காண முடிகின்றது. அதேவேளையில், மோதல் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வர்த்தகத்துறையின் பாதகமான கோட்பாடுகளைத் திருத்துவதற்கான சக்திவாய்ந்த இயந்திரமாகவும் ஸ்தாபக சமூகப் பொறுப்பு முறையின் கொள்கைகள் விளங்க முடியும்.

## சமாதானத் தொழில் முயற்சித் திறனை எது வடிவமைக்கின்றது?

வர்த்தக முயற்சி ஊக்குவிக்கப்பட்டால் சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் மேலும் அக்கறை காண்பிக்கக்கூடும் என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது. அது பின்வரும் அம்சங்களைப் பொறுத்ததாக இருக்கும்.

## உள்நாட்டு அம்சங்கள்

### தலைமைத்துவம்

வர்த்தகத்துறையின் நடவடிக்கைகள் பற்றி இந்த மதிப்பீட்டில் ஆராயப்பட்டுள்ளது. சாதனைகள் சாத்தியமாவதற்கு வர்த்தகத்துறையினரே காரணமாகவுள்ளனர். சமாதானத்தைக் கட்டியெழுப்பும் எந்தவொரு நடவடிக்கையின் வெற்றி அல்லது தோல்வி அதற்குத் தலைமை தாங்குபவர்களின் தனிப்பட்ட பலம், திடசங்கற்பம் ஆகியவற்றிலேயே இறுதியில் தங்கியுள்ளது. அவர்கள் பொதுவாக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் தனியார்துறை பரந்தளவிலான பங்களிப்பைச் செய்ய முடியும் என்ற கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் இதில் சந்தேகமுள்ளவர்களையும் அதில் ஈடுபட வைப்பதற்கான ஆற்றல்மிக்கவர்களாகவும் விளங்குவார்கள். அவர்கள் தமது செல்வாக்கை அச்சமின்றியோ பின்விளைவுகள் பற்றிய பயமின்றியோ பிரயோகிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் பெருமளவில் சமூகத்தின் மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

### கூட்டு நடவடிக்கை

வர்த்தக சமூகத்தினர் அரசியல் சக்திகளுக்கு மேலாக ஆகக்கூடுதல் செல்வாக்கைப் பிரயோகிப்பதில் அல்லது யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பது வர்த்தக சமூகத்தினரின் முயற்சி வெற்றி பெறுவதற்கு அவசியமானதாகும். பல்வேறு துறையினரை ஒன்றிணைப்பதில் வர்த்தக சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் மிகவும் தீர்க்கமானவையாக விளங்குகின்றன. தனியார்துறையினருடன் செயற்படுவது ஒரு முயற்சிக்கு நம்பகத்தன்மையையும் சட்டபூர்வத் தன்மையையும் பலப்படுத்தி, தீர்க்கமான நிகழ்ச்சி ஒன்றை உருவாக்குவதற்கு வழிகோலும். கூட்டாக இனங்காணப்பட்ட குறிக்கோள் ஒன்றை அடைவதற்கு தனியார் துறையைச் சேர்ந்த போட்டிமிக்க சக்திகள் போதியளவு பரஸ்பர நலன்குறித்து இணக்கம் காணப்படுவது அவசியமாகும்.

### சட்டபூர்வத்தன்மை

ஏனையவர்களுடன் கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஒத்துழைப்பதற்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஏனைய

செயற்பாட்டாளர்களைப் போலவே தனியார் துறையினரும் நம்பகத்தன்மை, சட்டபூர்வத்தன்மை ஏனைய துறைகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும். சண்டையில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினரதும் பெருமளவு பொது மக்களினதும் அங்கீகாரத்தை வென்றெடுப்பதற்கு இது முக்கியமானதாகும். சண்டையை நீடிக்கச் செய்வதில் பங்கு வகித்த அல்லது பங்கு வகித்ததாகக் கருதப்படும் தொழில் நிறுவனங்கள் இதில் சம்பந்தப்பட்டால், தனியார் துறைக்கு சட்டபூர்வத் தன்மையைப் பெற்றுக்கொள்வது சவாலாக இருக்கும். வர்த்தக சமூகத்தை ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாதகமான கோட்பாடுகளுக்கு பரிகாரம் காணக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும்.

### சண்டை பற்றிய ஆய்வும் சுய பிரதிபலிப்பும்

சண்டைக்கான காரணங்கள் ஏனையவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக முன்கூட்டியே ஏற்படும் தப்பான எண்ணங்கள், எதிரான மனப்போக்குகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கலாம். இதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய தரப்பினருடன் பரந்த அளவில் பேச்சுவார்த்தை நடத்துதல் போன்ற தீவிர ஆய்வு ரீதியான அணுகுமுறை மூலம் தனியார் துறைக்குள் காணப்படும் பக்கச் சார்பான போக்குக்குத் தீர்வு கண்டு சண்டைக்கான காரணிகள் தொடர்பான விரிவான அபிப்பிராயம் ஒன்றை கட்டியெழுப்ப முடியும். சமூகத்தில் தனியார்துறை வகிக்கும் பங்கு மோதலின் உத்வேகத்துடன் அதற்குள்ள தொடர்புகள் ஆகியன பற்றி நல்ல புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். மோதல் சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளை தீர்க்கமான முறையில் கையாள்வதற்கு இவ்வாறான சுய பிரதிபலிப்பு முக்கியமானதாகும். தீர்வு காண்பதற்கான ஆரம்ப நுழைமுனைப்புக்களையும் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக, வாடகைக்கு அமர்த்தும் நடைமுறைகளை முன்னேற்றுவதன் மூலம் இதனைச் செய்ய முடியும்.

### தனியார் துறையின் அளவும் மாதிரியும்

ஒரு வர்த்தக முயற்சியின் அளவு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அதன் பங்களிப்பை வடிவமைக்கின்றது. சம்பந்தப்பட்ட வர்த்தக முயற்சி எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட இருக்கின்றது என்பதும் இதில் தங்கியுள்ளது. பெரிய நிறுவனங்கள் அரசியல் மட்டத்தில் சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்டுவது தொடர்பாக தமது செல்வாக்கைப் பயன்படுத்துவது சில முக்கிய உதாரணங்களாகும். எவ்வாறாயினும், சிறிய அல்லது மிகச் சிறிய வர்த்தக நிறுவனங்களின் தாக்கம் பெருமளவில் உள்ளூர் மட்டத்தைச் சார்ந்ததாக அமைகின்ற போதிலும் அவை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடைமுறையில் இருந்து விலக்கப்படுவதில்லை. மத்திய அரசாங்கத்தின் மீது இந்நிறுவனங்களின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால் அவற்றின் தாக்கம் பெரும்பாலும் உள்ளூர் மயப்பட்டதாக உள்ளது. எவ்வாறாயினும், இந்நிறுவனங்கள் பெரும்பாலும் மோதல் நடைபெறும் இடங்களில் அமைந்திருப்பதால் அவற்றின் பங்களிப்பு முக்கியமானதாகின்றது.

## வெளி சக்திகள்

### வர்த்தக சூழல்

ஒரு நிறுவனம் எத்தகைய சூழலில் இயங்குகின்றது என்பது சமாதானத்திற்கான பங்களிப்பைச் செய்வதில் அதற்குள்ள ஆற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அத்துடன், அந்நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளையும் அது வடிவமைக்கின்றது. மோதல் காரணமாக உருவாகும் நிச்சயமற்ற நிலை முதலீடு மற்றும் இலாபம் தொடர்பாக நம்பிக்கையின்மையை உருவாக்குகின்றது. எதிர்காலம் குறித்து வர்த்தகத் துறையினர் நம்பிக்கை கொள்ளாத பட்சத்தில் சமாதானத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவானதாகவே இருக்கும். அதேவேளையில், சண்டையினால் பாதிக்கப்பட்ட வர்த்தக சூழலில் ஏற்படும் விளைவுகள் வர்த்தகத்துறை வாய்ப்புக்களை வழங்குவதற்கு இடையூறாக இருக்கும். எல்லைகள் மூடப்பட்டிருத்தல், வர்த்தக உறவுகள் துண்டிக்கப்பட்டிருத்தல் ஆகியன வர்த்தகத்தைப் பாதிக்கும். இந்தத் தடங்கல்களை நீக்குவதற்கான பல முயற்சிகள் பற்றி இந்த ஆய்வில் விபரிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் நிலைமைகள்
சண்டை தொடர்பான பிரச்சினைகளுக்கு பகிரங்கமான முறையில் தீர்வு காண்பதற்கான அரசியல் ரீதியான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். பிரதான ஒப்பந்ததாரர்களில் ஒருவராக அரசாங்கம் விளங்கும் பட்சத்தில் வர்த்தகத்துறை சமாதானத்தில் பங்கை வகிப்பது கஷ்டமானதாக இருக்கும். சிறிய அளவில் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களின் குரல்களும் நலன்களும் பெரும்பாலும் கொள்கை வகுப்பாளர்களால் நிராகரிக்கப்படுகின்றன. இதனால் வர்த்தகத் துறையாளர்கள் சமாதானத் தொழில் முயற்சித் திறனை விருத்தி செய்ய முடியுமா? அவ்வாறாயின் எவ்வாறு அது சாத்தியப்படும்? என்ற கேள்விகள் இதனால் எழுகின்றன.

அதேவேளையில் சமாதான தொழில் முயற்சித் திறனானது தொடர்ச்சியாக விரிவடைந்து வரும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரடியாக சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற வழிமுறைகள் சாத்தியமற்றதாக இருக்கக்கூடும். இவ்வாறான சூழ்நிலைகளில் நீண்டகால அடிப்படைக்குப் பொருத்தமான மாற்று வழிகளை இனங்காண்பது அவசியமாகின்றது. வெற்றிகரமான மூலோபாயங்கள் வெளிச்சூழ்நிலை, மாற்றமடைந்து வரும் சூழ்நிலைகளும் வாய்ப்புக்களும் ஆகியவற்றை எதிர்கொள்ளக்கூடியதாக (முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக) அமைய வேண்டும். தளர்வான வழிமுறையைப் பின்பற்றுவது சமாதான தொழில்முயற்சித் திறனுக்கான நல்ல உதாரணமாகும். மாறிவரும் சூழ்நிலைகளை ஆழமாகப் புரிந்து கொண்டு பல்வேறு முனைகளில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்குப் பங்களிப்புச் செய்யக்கூடியதாக அது அமைய வேண்டும்.

## வெளி வசதிகளும் ஒத்துழைப்பும்
சர்வதேச நன்கொடை நிறுவனங்கள், அரசாங்கம், சிவில் சமூகம் ஆகியன உட்பட ஏனையவர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் வர்த்தகத்துறையின் பங்களிப்பு தீர்க்கமானதாக இருப்பதற்கு உதவியாக அமையும். உள்ளூர் தனியார்துறையுடன் எவ்வாறு வெளிச்செயற்பாட்டாளர்கள் தொடர்பு கொண்டு செயற்பட முடியும் என்பதையும் சண்டையினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக எவ்வாறான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதையும் சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை வெளியீட்டில் அடங்கியுள்ள விடயங்கள் புலப்படுத்துகின்றன. மோதல் தொடர்பாக தனியார்துறை கொண்டுள்ள சிக்கல் மிகுந்த பல்வேறுபட்ட தொடர்புகள் பற்றி புரிந்து கொள்வது முதலாவது முக்கிய நடவடிக்கையாகும். இதன்மூலம் அவர்கள் சமாதான நடவடிக்கைக்கு வழங்கக்கூடிய முக்கிய பங்களிப்பை மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும். சில பயனுள்ள பிரவேச முன்னெடுப்புக்கள் பின்வருமாறு:

**மோதல் தொடர்பான உணர்வுபூர்வமான பொருளாதார நடவடிக்கைகள்** இதுவரை பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள ஒருசில சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களே ஒருங்கிணைந்த மோதல் ஆய்வுகளையும் தமது நடவடிக்கைகள் தொடர்பான உணர்வுபூர்வமான அணுகுமுறைகளையும் கொண்டுள்ளன. மோதல் தொடர்பான உணர்வுபூர்வமான தன்மையற்ற நடவடிக்கைகள் பொருளாதாரத்திற்கும் மோதலுக்கும் இடையிலான தொடர்புகளில் கசப்புணர்வை ஏற்படுத்தி சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் குந்தகத்தை ஏற்படுத்துகின்றன. தனியார் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது தனியார்துறை அபிவிருத்தி மற்றும் சிறிய அளவிலான நிதி நடவடிக்கைகள் போன்றவை ஊடாக மேற்கொள்ளப்படும் தனியார் மயப்படுத்தும் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பாரிய மட்டத்திலான தேசிய பொருளாதார நடவடிக்கைகளாக இருந்தாலும் இத்தகைய நிலை ஏற்படுகின்றது.

**சமாதான தொழில் முயற்சியாளர்களை ஒன்றுசேர்த்தலும் அரங்கை ஏற்பாடு செய்தலும்** வர்த்தகத்துறையை ஏனைய துறைகளுடன் ஒன்றுபடுத்தி பொதுவான சவால்களையும், யோசனைகளையும் ஆராய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதில் வெளி நிறுவனங்கள் அளப்பரிய பங்கை வகிக்க முடியும் என்பதை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த ஒன்றுசேர்க்கும் ஆற்றலானது, வர்த்தகத்துறை அதன் சொந்த மதிப்பீடுகளையும், மூலோபாயத்தையும் வகுத்துக்கொள்வதற்கு இடமளிக்கின்றது. இதன்மூலம் வெளியாரால் திணிக்கப்படுவதிலும் பார்க்க தனியார்துறை

தனது சொந்த உணர்வுபூர்வமான அடிப்படையில் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வது உறுதிப்படுத்தப்படுகின்றது.

**விழிப்புணர்வையும் எல்லைகடந்து செயற்படும் தன்மையையும் அதிகரித்தல்** வர்த்தகத்துறையின் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்கள் பற்றி விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலம் ஒத்துழைப்புக்கான கூடுதல் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. ஏனைய போராட்ட சூழ்நிலைகளில் இருந்து பெறப்படும் அனுபங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் வர்த்தகத்துறையினர் அக்கறையான முறையில் இதில் ஈடுபடுவதற்கான யோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். CSR பற்றிய விழிப்புணர்வு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான தீர்க்கமான தேவைகளைப் புரிந்து கொள்வதற்கு ஒரு நேரடியற்ற வாய்ப்பை வழங்குகின்றது. மோதல் காரணமாக பொருளாதாரத்திற்கும் குறிப்பிட்ட வர்த்தகத் துறைகளுக்கும் ஏற்படும் பாதிப்பு பற்றி மேலும் கூடுதலாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் இதன்மூலம் கிட்டுகின்றது.

**பங்காளித்துவ முறைகளைக் கட்டியெழுப்புதல்** வர்த்தகத்துறை, சிவில் சமூகம், அரசாங்கம், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான பங்காளித்துவம் முயற்சிகளின் தாக்கத்தை அதிகரிக்கச் செய்ய உதவும். தனிப்பட்ட மற்றும் பரஸ்பர பலன்களின் அடிப்படையில் இது கட்டியெழுப்பப்படுகின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவது பல்வேறு முனைகளைக் கொண்ட ஒரு முயற்சியாகும். எனவே, சில குறிப்பிட்ட முயற்சிகளில் வளங்களையும், நிபுணத்துவத்தையும் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இந்த பங்காளித்துவம் வர்த்தகத்துறையினர் ஏனைய செயற்பாட்டாளர்களின் அங்கீகாரத்தையும் நம்பிக்கையையும் பெறுவதற்கு உதவும்.

**சாதகமான சூழ்நிலையையும் வர்த்தக வலையமைப்பையும் ஊக்குவித்தல்** பொருளாதார வளர்ச்சியை உத்வேகப்படுத்துவதற்கு வியாபார சூழல் முக்கியமானதாகும். சமாதானத் தொழில் முயற்சித்திறனிலும் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உட்கட்டமைப்புப் பிரச்சினைகள், நிருவாகக் குறைபாடுகள் ஆகியவற்றுக்குப் பரிகாரம் காண்பதில் வர்த்தகத்துறை வகிக்கக்கூடிய தீவிரமான பங்கை வெளிச்சக்திகள் அங்கீகரித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வர்த்தகச் சங்கங்கள் அல்லது குறிப்பிட்ட துறை சார்ந்த அமைப்புகள் சமாதானத் தொழில் முயற்சித் திறனுக்கு ஆதரவாக கூட்டான வர்த்தகத்துறை நடவடிக்கைக்கான வசதியைச் செய்து உதவ முடியும்.

**மோதல் நடைபெறும் சூழ்நிலையில் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவித்தல்** மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இடையில் ஒரு இணைப்பாளராகச் செயற்படுவதில் வர்த்தகத்துறைக்கு உள்ள ஆற்றலை வெளி உதவியுடன் ஆகக்கூடுதல் மட்டத்திற்கு அதிகரிக்கச் செய்ய முடியும். ஒத்துழைப்பு தொடர்பாக கட்டமைப்பு ரீதியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதன் மூலமும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலமும் பரிமாற்றத்திற்கான பாதுகாப்பான இடங்களையும் வாய்ப்புக்களையும் வழங்குவதன் மூலமும் மோதலின் போது இழக்கப்பட்ட வர்த்தகத் தொடர்புகளை மீண்டும் பலப்படுத்தவும் அல்லது புதிய துறைகளில் ஒத்துழைப்பை விருத்தி செய்யவும் முடியும்.

**நேரகாலத்துடன் திட்டமிடல்** சமாதானத் தொழில்முயற்சித் திறனை உத்வேகப்படுத்துவதற்கான சிறந்த வழி, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைப் பொறுத்ததாக இருந்தாலும் கூட இவ்வாறான சாத்தியங்கள் பற்றியும் சண்டையினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் வர்த்தகத்துறை ஆற்றக்கூடிய பணி பற்றியும் முன்கூட்டியே மதிப்பீடு செய்வது முக்கியமானதாகும். வர்த்தக நோக்கங்கள் தொடர்பாக முன்கூட்டியே திட்டமிட்டு அமுல் செய்வது இந்த முயற்சிகள் யதார்த்தமான முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும். சரியான ஆற்றல்கள் பற்றியும் தயார்நிலை பற்றியும் அறிந்து கொள்வதற்கு இது உதவும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூர் தனியார் துறைக்கு உள்ள ஆற்றல் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது அல்லது அதுபற்றி தவறான கருத்து நிலவி வந்துள்ளது. அதன் பணி முற்றிலும் பொருளாதார அடிப்படையிலானது என சர்வதேச சமூகத்தினாலும், சிவில் சமூகத்தினாலும், வர்த்தகத் துறையினாலும்கூட

விபரிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே, வளர்ச்சி, செல்வமீட்டுதல் ஆகியன குறித்தே பெரிதும் கண்ணோட்டம் செலுத்தப்பட்டு வந்தது. அண்மைக்காலத்தில் பாதகமான அடிப்படையிலேயே இது அணுகப்பட்டது. அதாவது, யுத்தப் பொருளாதாரத்தில் மோதலை நீடிக்கச் செய்யும் அதன் தன்மை குறித்தே கவனம் செலுத்தப்பட்டது. சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை எடுத்துக்காட்டுவது போன்று உள்ளூர் தனியார்துறை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஏனைய செயற்பாட்டாளர்களைப் போன்றே பல்வேறு வகைப்பட்ட விரிந்த அடிப்படையிலான பங்களிப்பை மேற்கொள்ள முடியும். பல்வேறு திறமைகள், ஆற்றல்கள், மூலவளங்கள் மூலம் அது பரந்த அளவிலான பங்களிப்பைச் செய்ய முடியும். உள்ளூர் வர்த்தகத் துறையினரின் அனுபவங்கள் பற்றி சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கவனிக்கப்படாத அம்சங்கள் பற்றி இது விபரித்துக் கூறுகின்றது. இந்த முயற்சிகள் பற்றிய விபரங்களும் அது பற்றிய ஆய்வுகளும் இந்த மதிப்பீட்டில் அடங்கியுள்ளன. இதன்மூலம் மோதலுக்குத் தீர்வு காண்பதில் வர்த்தகத் துறையாளர்களும் ஏனையவர்களும் செலுத்தக்கூடிய பங்களிப்பு பற்றி பல்வேறு தரப்பட்ட அனுபவங்களையும், யோசனைகளையும், சிபாரிசுகளையும் இந்த மதிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது. எதிர்காலத்தில் நிரந்தர சமாதானத்தை ஏற்பாடுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது போதிய தூண்டுதலை அளிக்கின்றது என்பதை இந்த மதிப்பீட்டு அறிக்கையை வாசிப்பவர்கள் அறிந்து கொள்வார்கள் என்று இன்டர்நஷனல் அலர்ட் அமைப்பு நம்புகின்றது.

# இலங்கை

# இலங்கை : சமாதானத்தின் முகவராக வர்த்தகம்

**மாக்கஸ் மேயர் மற்றும் மலீகா சாலிஹ்**

## 1. அறிமுகம்

பிணக்குகளைத் தடுப்பதிலும், மோதலுக்குப் பின்னரான நிலைமைகளில் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதிலும் வர்த்தகம் ஆக்கபூர்வமானதொரு பங்கை வகிக்க வேண்டுமென்ற கருத்தேற்பு வளர்ந்து வருகிறது. பிணக்கில் ஒரு கூறாக தனியார்துறை அடையாளம் காணப்பட்ட போதும், சமாதானச் செயற்பாடுகளை விரைவுபடுத்தி ஆதரவளிக்கும் நடவடிக்கைகளில் சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தக முயற்சியாண்மைகளை ஈடுபடுத்தும் முயற்சிகள் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.[1] இதற்குக் காரணம், சர்வதேச மற்றும் உள்ளூர் சமூகங்கள் பொருளாதாரச் செயற்பாடுகள் எதனால் நன்மை அடைகின்றனவோ அது குறித்து அல்லது பிணக்கு உருவாக்கத்திற்கும், அதிகரிப்புக்கும் பங்களிப்புச் செய்வது குறித்து வலியுறுத்துவதற்கான சந்தர்ப்பங்களை நாடுவதாகும். சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வர்த்தகத் துறையினர் அதிக ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்தார்கள் என்பதற்கான உதாரணங்கள் குறித்து போதுமான ஆய்வு இடம்பெறவில்லை.

இந்த அறிக்கையானது, இலங்கைச் சூழமைவில் வர்த்தகம் மற்றும் பிணக்கு தொடர்பாக, கிடைக்கக்கூடிய ஆக்கங்கள், இலக்கியங்களை ஆய்வு செய்கிறது. பரந்தளவிலான கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமையின் (கூ.ச.பொ) துணைக்கொண்டு, இலங்கையில் மோதல் தவிர்ப்பு மற்றும் சமாதானச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் வர்த்தகம் வகிக்கும் தற்போதைய பங்கு தொடர்பான ஆய்வின் அவதானிப்புக்களை இது முன்வைக்கிறது. கூ.ச.பொ என்பது ஒப்பீட்டளவில் இந்நாட்டுக்குப் புதியதொரு விடயமாகும். ஆனால், இது பெரும் அவதானத்தை ஈர்த்து வருகிறது. கடந்த சில வருடங்களில் கணிசமான உத்வேகத்தைப் பெற்றுள்ள வர்த்தகத்துறை தலைமையிலான இரு சமாதான முயற்சிகளை இது முன்வைக்கிறது. கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் பாரிய வர்த்தக முயற்சியாண்மைகளின் சமாதான முன்னெடுப்பு இயக்கமான ‘‘ஸ்ரீலங்கா பெர்ஸ்ட்’’ நாடளாவிய ரீதியில் வலைப்பின்னலாகச் செயற்படும் பிராந்திய வர்த்தக சபைகளின் ‘‘சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை’’ என்பனவே அவையாகும். மாகாண அடிப்படையில் செயற்படும் வர்த்தக சமூகத்தினர் மத்தியில் தொடர்புகளையும், நம்பிக்கையையும் ஏற்படுத்த இவை உதவுகின்றன.

இந்த விடயங்கள் மற்றும் சமாதானம், பிணக்கு தொடர்பான வர்த்தக சமூகத்தினரின் மனோபாங்கு ஆகியவற்றின் மூலம் பரந்த படிப்பினையை உருவாக்குவதற்காக அவசரமான அவதானிப்பு வேண்டப்படும் பரந்த சமூக விவகாரங்கள் மீதான வர்த்தக

சமூகங்களின் அபிப்பிராயத்தை மதிப்பிடுவதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வர்த்தக சமூகத்தின் மீது மோதல் ஏற்படுத்திய பாதிப்பு; இலங்கையில் சமாதானப் பணிகளுக்கு யார் பொறுப்பு; மற்றும் சமாதானத் தலையீடுகளை வர்த்தக சமூகத்தினர் மேற்கொள்ளத் தூண்டியது எது போன்றன அந்தச் சமூக விவகாரங்களாகும்.

இந்த ஆய்வானது, சம்பந்தப்பட்ட இரண்டாம்தர மூலங்களின் ஆரம்ப மீளாய்வின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் பெரிய நிறுவனங்களின் 20 பிரதிநிதிகள் மற்றும் காலி, கண்டி, திருகோணமலையைச் சேர்ந்த 10 பிரதிநிதிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட தகவலாளிகளிடம் தொடர்ச்சியான தரம் சார்ந்த மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, கொழும்பில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களின் உரிமையாளர்கள் அல்லது முகாமையாளர்களிடம் அளவு ரீதியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இந்த மதிப்பீட்டில் பதில் அளித்தவர்களில் 63.3% சதவீதமானோர் சிங்களவர்கள்; 12.7% சதவீதமானோர் தமிழர்கள் மற்றும் 24% சதவீதமானோர் முஸ்லிம்களாவர். ஒவ்வொரு வர்த்தக முயற்சிகளிலும் உள்ள தொழிற்படையின் அளவு ஒரு நிறுவனத்திற்கு சராசரியாக 4.3 தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஒன்றில் இருந்து 21 ஆகும். வர்த்தக முயற்சிகளின் வகைகள் சில்லறைக் கடைகள், தொடர்பாடல் மற்றும் வீடியோ நிலையங்கள், நகைக்கடைகள், சிறிய உணவகங்கள், ஜவுளிக்கடைகள், உற்பத்தியில் ஈடுபடும் கடைகள், சிறிய மருந்து விற்பனைக் கடைகள், இரும்புக்கடைகள் மற்றும் வழைமையற்ற சேவைகள் என பல்வேறாக உள்ளன. சிறிய வர்த்தக முயற்சிகளில் பணிபுரியும் 68% மானோர் உரிமையாளர்கள் சார்ந்திருக்கும் அதே இனத்தவர்களாவர். 25% மானோர் வேறு இரு சமூகத்தவர்களைப் பணியில் ஈடுபடுத்துகின்றனர். 7% சதவீதமானோர் மட்டுமே மூன்று சமூகத்தவர்களையும் பணியில் ஈடுபடுத்துகின்றனர். இறுதியாக ஆய்வை வளப்படுத்துவதற்காக பல பிரதான தகவலாளிகளின் பேட்டிகள் ஆய்வு முழுவதும் மேற்கொள்ளப்பட்டன. இந்த பிரதான தகவலாளிகள் மோதல் பற்றிய கற்கைகள், பிரசாரம் என்பவற்றில் கொண்ட ஈடுபாடு மற்றும் அவர்களது கல்விப் பின்னணிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை, இந்திய உபகண்டத்தின் தென்முனையில் அமைந்துள்ளது. 2004 இன்[2] தேசிய புள்ளிவிபரங்கள் இங்கு 19.4 மில்லியன் சனத்தொகை இருப்பதைக் காட்டின. இலங்கை சனத்தொகை 81.9% பெரும்பான்மை சிங்களவர்கள்; 9.4% சிறுபான்மை தமிழர்கள்; 8.1% சிறுபான்மை முஸ்லிம்கள் மற்றும் சிறிய சதவீதங்களில் வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற சில வருடங்களின் பின்னர், கல்வி அறிவு, ஆயுட்காலம், கருவள வீழ்ச்சி மற்றும் குறைந்த சிசு மரண வீதம் என்பனவற்றில் இலங்கை உயர் சமூகக் குறிக்காட்டிகளைக் கொண்டிருந்தமைக்காக புகழப்பட்டது.[3]

தற்போது இலங்கை உயர் அளவிலான வன்முறை மற்றும் நீடித்த அரசியல் ஸ்திரமின்மை ஆகிய தனிச்சிறப்புத் தன்மைகள் காரணமாக பல அரசியல் மற்றும் சமூக மோதல்களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. ஆயுதக் கிளர்ச்சிகள், திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதம், பிரிவினைவாதப் போராட்டம் என்பன நாட்டின் அபிவிருத்திச் சாதனைகளை அழித்துவிட்டு நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதற்கு மேலாக 2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதனால் 31,000 உயிர்கள் பலியானதுடன், 4,000 பேர் காணாமல்போனதாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் 550,000 பேர் வீடிழந்தனர். பாரிய அளவில் மனித அவலத்தை ஏற்படுத்திய சுனாமி இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பகுதிகளில் மிகப்பெரும் அளவில் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தது.

## 1.1 இலங்கையில் நிலவும் மோதல்

மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்று வரும் வன்முறை மோதலால் இலங்கை அச்சமுற்று இருக்கிறது. அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் 1971 இலும் மீண்டும் 1988 - 89 காலப் பகுதியிலும் மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி) சேர்ந்த கிராமப்புற சிங்கள

இளைஞர்கள் தலைமையில் இலங்கையின் தென் பகுதியில் இடம்பெற்றது. இதற்கு அரசு கொடூரமாகப் பதிலளித்தது. இதன் விளைவு ஏறத்தாழ 60,000 பேர் கிளர்ச்சி நடைபெற்ற காலத்தில் ''காணாமற்'' போயினர்.[4] பின்னர் ஜே.வி.பி அரசியல் நீரோட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், அது இப்போது காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகிறது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 1980 களின் ஆரம்பம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) பிரிவினைவாத போராட்டத்தை அரங்கேற்றினர். நியாயமற்றதும் பாகுபாடானதும் எனக் கருதப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்த கொள்கைகளின் விளைவாக அரசுக்கு எதிரான பிரதிபலிப்புக்களைக் காட்டுவதாக இவ்விரு மோதல்களும் இருந்தன.[5]

இருந்த போதிலும், அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ க்கும் இடையிலான மோதலானது, இனப் போராகவே குறிப்பிடப்படுகின்றது. 1957 இல் சிங்கள மொழியை உத்தியோகபூர்வ மொழியாக்கி, அதனை அரச தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கான நிபந்தனையாக்கியமை; வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகள் வழங்கப்பட்டு அரச உதவியுடன் சிங்களக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டமை; தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களின் எல்லைகள் மீள வரையப்பட்டமை; 1983 இல் எல்.ரி.ரி.ஈ யினால் 13 படை வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு அரசு உதவியமை என்பன தமிழ் குழுக்கள் ஆயுத வன்முறையில் ஈடுபடுவதற்கு வழிவகுத்த விடயங்களாகும்.[6]

இராணுவ அதிகாரச் சமநிலையினது அவசியம் அதிகரித்ததன் விளைவாக, இரு தசாப்தகாலமாக இடம்பெற்று வரும் மோதலுக்கு இராணுவத் தீர்வையே அரசு பிரதானமாக நாடியது. தற்போது, யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து வடக்கு கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பகுதிகள் எல்.ரி.ரி.ஈ யின் கட்டுப்பாட்டுக்குக் கீழும், அதேவேளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைத் தவிர்த்து கரையோரப் பிரதேசங்கள் அரசின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. 1990 களில் பலவந்தமாக இடம்பெயரச் செய்யப்பட்டதை அடுத்து முஸ்லிம்கள் அரசியல் ரீதியான முக்கியத்தைப் பெற ஆரம்பித்தனர். அத்துடன் அரசியல் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யவும் ஆரம்பித்தனர்.

நேரடி அரசியல் பேச்சுவார்த்தைகள் 1995 இல் தோல்வியுற்றன. ஆனால், நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் 2002 இல் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானது. எல்.ரி.ரி.ஈ யின் தலைமையின் கீழ் வடக்கிலும் கிழக்கிலும் இருக்க வேண்டிய சுயாட்சியின் விஸ்தீரணம் குறித்து ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக 2003 இல் சமாதானம் தேக்க நிலையடைந்தது. இரு தரப்பினராலும் யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றன. குறிப்பாக, எல்.ரி.ரி.ஈ இதனைச் செய்தது. அது, மீள ஆயுதம் தரித்ததாகக் கூறப்பட்டது. இந்தச் சவால்களுக்குப் புறம்பாக 2004 ஏப்ரலில் அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்ட வேளையிலும், இரு தரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்தனர்.

இதற்கு சற்று முன்னர் இயக்கத்தில் பிராந்தியப் பாகுபாடு காட்டப்படுவதாகக் கூறி கிழக்கு மாகாண தளபதியின் தலைமையில் இயங்கும் குழுவொன்று எல்.ரி.ரி.ஈ யில் இருந்து பிரிந்து சென்றது. இதனால், கிழக்கில் பதற்றம் அதிகரித்ததுடன் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் 2004 இல் இடையிடையே மோதல்களும் இடம்பெற்றன. கிளர்ச்சிக் குழு கலைக்கப்பட்ட போதும், கிழக்கு மாகாணமானது, இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகள், முன்கூட்டியே திட்டமிடப்படாத கொலைகள், கிரைனைட் வீச்சுக்கள், அவ்வப்போதான ஆயுத மோதல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வருகிறது.

2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சமாதானச் செயற்பாடு தொடர்பாக பரவலாக ஏற்பட்ட சீற்றத்தை மக்கள் முன்னணி (ம.மு) மற்றும் ஜே.வி.பி க்கு இடையிலான புதிய கூட்டணி அரசு தனது சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டதால் யுத்த நிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல் குறித்த தேசிய கடப்பாடு பலவீனமடைந்தது. அண்மையில் ஏற்பட்ட சுனாமியும் உதவிகளை விநியோகிக்கும் பொறிமுறை தொடர்பாக இடம்பெற்ற தீவிரமான கலந்துரையாடல்களும் அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ க்கும் இடையிலான உறவுகள் மோசமடைவதற்கு உதவியது. 2005 நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் முதல் இவ்வறிக்கை எழுதப்படும் வரை நிலைமையானது தொடர்ந்து மோசமடைந்து வருகிறது.

இரு மோதல்களும் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் துயரமும் அழிவும் ஏற்படுவதற்கு வழிவகுத்தன. மோதலுடன் தொடர்புபட்ட சம்பவங்களால் மக்கள் உணர்ச்சிபூர்வமாகவும், சமூகபூர்வமாகவும் தொடர்ந்தும் துன்புற்று வரும் வேளையில் இந்த அனுபவங்களின் பொருளாதார மற்றும் உலோகாயுத தன்மையானது துயரத்தின் முதன்மை மூலமாகவுள்ளது.[7] பாதுகாப்பின்மை பற்றிய உணர்வு புதிய பிரிவு மக்களின் அபிவிருத்தியின் விளைவாக ஏற்பட்ட இடையூறு மற்றும் ஊறுபடத்தக்க தன்மை, முன்னாள் குழுக்களுக்கு இடையூறு மற்றும் குழுக்களுக்கு இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்தல் மற்றும் பலவீனமாக்கல் என்பன ஊடுருவி பரவுவதன் மூலம் சமுதாய உறவுகள் பாதிப்பற்றுள்ளன.[8] மோதலால் அனைத்து இலங்கை மக்களினதும் அரசியல், சமூக, சட்ட உரிமைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.[9] இம்மோதல் பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்புச் சேதம்; பொருளாதார வாய்ப்புகள், இழப்பு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை நீக்குதல்; தேசிய நிதியானது அபிவிருத்திக்குப் பதிலாக இராணுவ நோக்கங்களுக்காக பாவிக்கப்படுதல் ; பயிரிடும் நிலம் மற்றும் ஏனைய வளங்களின் இழப்பு; அதிகமான மக்களின் இடப்பெயர்வு என்பனவற்றையும் ஏற்படுத்தியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் அனேகர் நிவாரணங்களையே நம்பி வாழ்கின்றனர்.[10]

2004 டிசம்பரில் முறிவடையும் நிலையில் இருந்த அரசாங்கத்திற்கு உதவி நிதியும், பொருட்களும் கிடைத்ததன் மூலம் சுனாமியானது அதிகார சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி, அரசாங்கத்தை ஸ்திரப்படுத்தியது.[11] சுனாமியால் வட கிழக்குப் பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டது. மரணமடைந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினரும், இடம்பெயர்ந்தோர்களில் 60 சதவீதத்தினரும் இப்பகுதியைச் சேர்ந்தோரே. இது மோதலின் நீண்டகால எதிர்மறை விளைவை மேலும் மோசமாக்கியது. சுனாமியால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட மொத்த பாதிப்பு சிறிதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும், வறுமை மற்றும் இழப்பானது பாதிக்கப்பட்ட மற்றும் அண்டிய பகுதிகளில் அதிகரிக்குமென எதிர்பார்க்க முடியும்.[12]

ஆகவே, வலுவற்ற யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு சுனாமி புதிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் - பாதிக்கப்படாத ஆனால் மிகவும் ஏழ்மையான, மோதலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அருகருகாக வாழ்ந்த போதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு முன்னுரிமை அளித்தமை; மற்றும் இரண்டாவதாக புனருத்தாபன முயற்சிகளை அரசும் எல்.ரி.ரி.ஈ யும் கையாளும் விடயத்தில் அதிகமாக மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாக முறைக்குத் திரும்பியமை என்பனவற்றால் இந்தப் புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய உத்தேச அரசியல் தேவைப்பாடான உள்ளூராட்சி மற்றும் பிராந்திய தகைமைகளைப் பலப்படுத்தும் கொள்கைக்கு இது மாற்றமாக அமைந்தது.[13]

# 1.2 இலங்கைப் பொருளாதாரம்

அரச கட்டுப்பாட்டிலான பொருளாதாரம் குறித்து ஏற்பட்ட பரவலான அதிருப்தியின் விளைவாக 1977 இல் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கைகளைச் சுவீகரித்துக்கொண்ட முதலாவது தெற்காசிய நாடு இலங்கையாகும்.[14] அரசாங்கம் வெளிநாட்டு வர்த்தகத்தையும் செலாவணிக் கட்டுப்பாடுகளையும் தாராளமாக்கியது; மற்றும் விலையிடல் முறைகளையும் வட்டிவீத வரம்புகளையும் நிர்வகித்தது. முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட போதும் மறுசீரமைப்பு செயற்பாடுகளானது திடீர்ச் செயற்பாடானதாகவும் அப்போது ஏற்படுத்தப்பட்டதாகவும் இருந்ததுடன், நீண்டகால திட்டமின்மையால் பாதிப்புக்குள்ளானது.

ஏற்றுமதியால் முன்னெடுக்கப்படும் வளர்ச்சி மாதிரியானது படிப்படியாக தனியார்துறை முன்னெடுக்கும் வளர்ச்சியாக 1977 - 1994 காலப்பகுதியில் மாற்றப்பட்டாலும், தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் பின்கூறப்பட்ட விடயத்திற்கு தெளிவான தொடர்ச்சியான சமிக்ஞை எதுவும் கிடைக்கவில்லை. நட்டத்தை ஏற்படுத்தும் பொது நிறுவனங்கள் மற்றும் உயர் ஆளும் வகுப்பு நிர்வாகம் போன்ற அடிப்படை விவகாரங்கள் குறித்து மிகக் குறைவாகவே கவனஞ் செலுத்தப்பட்டது. கொள்கை மறுசீரமைப்பின் தன்மை மற்றும்

விஸ்தீரணம் குறித்து தனியார்துறைக்குத் தெளிவான சமிக்ஞைகள் கிடைக்காதமை மற்றும் இந்தக் கொள்கைகளின் ஒருபடாத் தன்மையினது விளைவாக நிச்சயமற்ற சூழ்நிலை உருவாகியது. இதனால், ஊழியக்கிரயம் மற்றும் ஆக்கத்திறன் ஆகியவற்றில் எந்த மறுசீரமைப்பையும் ஏற்படுத்தாமல் இருப்பது மிக்க ஆபத்தானது என இலங்கை மத்திய வங்கி கருதியது.[15]

1995 முதல் தனியார் மயமாக்கல் மற்றும் மீள்கட்டமைப்பு மீது தொடர்ச்சியான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இது சர்வதேச உதவிகளை வழங்குவது தொடர்பான நிபந்தனைகள் ஊடாகவும் பகுதியளவில் பிரயோகிக்கபப்பட்டது. எனினும், தனியார் மயப்படுத்துவதற்கும் பொது நிறுவனங்களை மீள் கட்டமைப்பு செய்வதற்குமான முயற்சிகளுக்கு கடந்த ஐந்து வருடகாலமாக தொழிற்சங்கங்களால் சவால் விடப்பட்டது.

பேரினப் பொருளாதாரத்தைச் சுனாமி மாற்றியமைத்ததோடு, மீள் கட்டமைப்பு மற்றும் நிவாரணம் வழங்கலிலும் புதிய சவால்களை அது தோற்றுவித்துள்ளதை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது.[16]

சுனாமி பிரதானமாக மீன்பிடித்துறையையும் உல்லாசப் பிரயாணத்துறையையும் பாதித்ததில் 2005 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறெனும் சிறிய அளவில் பாதிப்பு ஏற்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவற்றின் பாதிக்கப்பட்ட பங்களிப்பானது அதிகரித்து வரும் மீள் கட்டமைப்புப் பணிகளால் பகுதியளவில் இழப்பீடு செய்யப்பட்டது. சுனாமியால் ஏற்பட்ட மொத்தச் சேதம் ஒரு பில்லியன் டொலர் (மொ.உ.உ இல் 4.9%) எனவும் அதேவேளை மூன்று வருடகால புனர் நிர்மாணத் திட்டங்களால் 1.8 பில்லியன் டொலர் (மொ.உ.உ இல் 8.9%) கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது.[17]

## 1.2.1 வருடாந்த மொ.உ.உ மற்றும் வருடாந்த வளர்ச்சி வீதம்

இலங்கையின் பொருளாதாரத்தில் 2004 ஆம் ஆண்டு மெய் மொ.உ.உ 5.4% மாக பதியப்பட்டது. 2003 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 6% மாக இருந்தது. அட்டவணை 1 ஐப் பார்க்க. ஏற்றுமதிகள், நுகர்வு மற்றும் முதலீடு, யுத்த நிறுத்தம் நீடித்தமை என்பன இதற்கு உதவின. 2003 ஆம் ஆண்டில் இருந்து வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுறக் காரணம் விவசாய துணைத்துறை மற்றும் மின் உற்பத்தியின் மந்தமான செயற்பாடு, மோசமான காலநிலை மற்றும் நாட்சென்ற உட்கட்டமைப்பு என்பனவாகும். 2004 ஆம் ஆண்டில் சராசரி பணவீக்க வீதம் 7.9 ஆக உயர்ந்தது.[18] பொருளாதாரத்தின் பிரதான துறைகளாக சேவைகள் கைத்தொழில் மற்றும் விவசாயத்துறைகள் இருக்கின்றன.

**அட்டவணை 1: மொ.உ.உ வளர்ச்சி வீதம் 1990 2004**

| 1990 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4.6 | 4.3 | 6.9 | 5.6 | 5.5 | 3.8 | 6.3 | 4.7 | 4.3 | 6.0 | -1.4 | 4.0 | 6.0 | 5.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, 2004

## 1.2.2 தொழிலும் தொழிற்படையும்

தொழிற்படையானது தொழில் புரியும் 7.3 மில்லியன் பேரையும் வேலையற்றிருக்கும் 0.7 மில்லியன் பேரையும் கொண்டது. வேலையற்றோர் சதவீதம் 8.5% ஆக இருக்கிறது.[19] பெண்கள் பிரதான ஏற்றுமதிகளான தேயிலை, தைத்த ஆடைகள் மற்றும் தொழிலாளர்கள் (வீட்டுப் பணிப் பெண்கள்) ஆகிய துறைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இந்தத் துறைகள் இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயில் 90% பங்களிப்பைச் செய்கின்றன.

2004 ஆம் ஆண்டு ஆண்கள் மத்தியில் வேலைவாய்ப்பின்மை 6.3% ஆகவும், பெண்கள் மத்தியில் 13.2% ஆகவும் இருந்தது.[20] 20 - 29 வயது பிரிவினருக்கு இடையிலான வேலையின்மை 19.7% ஆகவும் மற்றும் 15 - 19 வயதுப் பிரிவினருக்கு இடையில் 30.6% ஆகவும் இருந்தது. க.பொ.த (உ/த) மற்றும் அதற்கு மேல் கற்றவர்கள் மத்தியில் வேலையின்மை 18.2% ஆக இருந்தது.

இலங்கையில் 14 - 24[21] வயதிற்கும் இடைப்பட்டோர் மத்தியில் வேலைவாய்ப்பு இன்மை 71% ஆக இருக்கிறது. 15 - 29 வயதிற்கும் இடைப்பட்டோரில் அரைவாசிப் பங்கினர் வேலையற்று இருக்கிறார்கள் அல்லது வேலை தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.[22] இளைஞர் வேலைவாய்ப்புக் கொள்கைகளை விரைவாகவும், வினைத்திறனுடனும் அமுல் செய்வதிலேயே இலங்கையில் சமூக - அரசியல் ஸ்திரத்தன்மை தங்கியுள்ளது.

### 1.2.3 மொ.உ.உ வின் பிராந்திய ரீதியான பங்களிப்பு

2004 ஆம் ஆண்டில் மொ.உ.உ க்கு மேல் மாகாணத்தின் பங்களிப்பு 49% மாக இருந்தது. கடந்த தசாப்த காலத்திற்கான புள்ளிவிபரங்களை அட்டவணை இரண்டில் பார்க்கவும்.[23] மேல் மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகள் செறிந்திருப்பதற்குக் காரணம், சிறப்பான சமூக, பொருளார மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு என்பனவாகும். மொ.உ.உ பங்களிப்பில் நிலவும் பிராந்திய ரீதியான வேறுபாடானது, வீதிகள், மின்சாரம், தொலைத்தொடர்புகள் மற்றும் ஏனைய வசதிகள் ஆகியவற்றில் நிலவும் சமத்துவமின்மையுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. உண்மையில் மாகாண ரீதியான புள்ளி விபரமானது, மேல் மாகாணத்தின் ஆள்வீத வருமானம் 1,000 அமெரிக்க டொலர்கள் என்ற எல்லையைக் கடந்துள்ளது என்பதையும், சில மாகாணங்களின் ஆள்வீத வருமானம் 500 அமெரிக்க டொலர்களுக்குக் கீழ் இருப்பதையும் காட்டுகிறது.

**அட்டவணை 2: மொ.உ.உ யின் மாகாண ரீதியான பங்களிப்பு (1990 - 2000)**

| | 1990 | 1992 | 1994 | 1996 | 1998 | 2000 |
|---|---|---|---|---|---|---|
| Western | 40.2 | 41.4 | 41.9 | 43.5 | 45.0 | 49.4 |
| North-Western | 11.1 | 9.9 | 9.8 | 11.3 | 12.0 | 10.4 |
| Central | 12.1 | 11.8 | 11.7 | 10.6 | 10.3 | 9.9 |
| Southern | 9.5 | 9.6 | 9.6 | 8.9 | 9.2 | 9.3 |
| Sabaragamuwa | 8.1 | 7.6 | 7.8 | 9.1 | 6.7 | 6.7 |
| Eastern | 4.2 | 4.7 | 4.5 | 4.8 | 5.5 | 4.5 |
| Uva | 8.1 | 7.6 | 7.8 | 5.0 | 4.9 | 4.0 |
| North Central | 4.8 | 6.0 | 6.3 | 4.5 | 3.6 | 3.8 |
| Northern | 4.4 | 3.6 | 3.2 | 2.4 | 2.8 | 2.1 |

**மூலம்: சர்வானந்தன் 2005**

இவ்வாறான புவியியல் ரீதியான சமமின்மைகள் கடுமையான சமூக ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த வேறுபாடுகளும் கட்டமைப்பு பாகுபாடு பற்றிய தொடர்ச்சியான உணர்வுகளும், வட கிழக்கு மற்றும் தெற்கில் ஆயுத மோதலும் கிளர்ச்சிகளும் ஏற்படுவதற்குக் கணிசமான பங்களிப்பை செய்துள்ளன.[24]

## 1.3 பொருளாதாரத்தின் மீதான மோதலின் தாக்கம்

மொ.உ.உ க்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மேற்கொள்வதை, வட கிழக்கில் ஏற்பட்ட ஆயுத மோதல் மோசமாகப் பாதித்துள்ளது.[25] 1990 முதல் இரு மாகாணங்களும் அழிவூட்டும் பொருளாதாரத் தடைகளால் துன்புற்றன. உணவுப்பயிர்கள், கால்நடை மற்றும் மீன்பிடி என்பவற்றுடன் விவசாயத்துறையில் மேம்பட்டிருக்கும் இப்பிராந்தியத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருந்துகள், விவசாய உள்ளீடுகள் தொடர்பான செயற்பாடுகளை இத்தடைகள் கடுமையாகக் கட்டுப்படுத்தின. இதற்கு மேலதிகமாக எல்.ரி.ரி.ஈ யால் சட்டவிரோதமாக வரியும், கப்பமும் அறவிடப்பட்டதும், அரச கட்டமைப்புக்களில் நிலவும் ஊழலும் ஆக்கத்திறன் விழ்ச்சியுறுவதற்குப் பங்களிப்புச் செய்தன.

ஆயுத மோதலானது, தேசிய மட்டத்தில் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பாரிய பொருளாதார இழப்புக்கள் ஏற்பட வழிவகுத்தது, 2000 ஆம் ஆண்டு தூய பொருளாதார செலவினங்களின் அடிப்படையில் முறையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் 1996 ஆம் ஆண்டு வரை போருக்கான திரட்டப்பட்ட செலவானது, 1996 யின் விலைகளின்படி சுமார் 12 பில்லியன் டொலர்கள் என தூய பொருளாதாரச் செலவினங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. (1996 யின் மொ.உ.உ யில் 168.5%)[26] ஆய்வை மேற்கொண்ட போது, அதனை மேற்கொண்டவர்கள் நேரடி மற்றும் மறைமுகச் செலவினங்களையும் உள்ளடக்கி இருந்தார்கள்.

நேரடிச் செலவினங்களில் யுத்தம் புரியும் தரப்பினர்களின் இராணுவச் செலவினங்கள், இழக்கப்பட்ட உட்கட்டமைப்பின் செலவினங்கள் மற்றும் மனிதாபிமான நிவாரணப் பணிகளுக்காக அரசாங்கம் மேற்கொண்ட செலவினங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. மறைமுகச் செலவினங்களில் மூலதனம் வெளியேறியதால் ஏற்பட்ட வருமான இழப்பு, உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைவு, மனித முதலீட்டு இழப்பு (மரணம், காயம் மற்றும் இடம்பெயர்வு), வெளிநாட்டு முதலீடு இழப்பு மற்றும் வட மாகாணத்தின் வெளியீட்டு இழப்பு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மோதலினால் ஏற்பட்ட பொருளாதார சமூகச் செலவினங்களை மாற்றியமைப்பதற்கு வேறுபட்ட பங்காளிகளின் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது. இதுவொரு கூட்டுப் பொறுப்பாகும். மேலும் பொருளாதாரம் வளர்ச்சியுறுவதற்கான நிலைமைகளை அரசு உறுதி செய்யும் அதேவேளை, வளர்ச்சியின் பிரதான இயந்திரமாக இருக்கும் தனியார் துறையானது, இந்த வளர்ச்சிச் செயற்பாடுகளை ஆதரிக்க வேண்டும். எவ்வாறெனினும், தொடர்ச்சியான கொள்கைத் தந்திரோபாயங்கள் பற்றிய வரைவிலக்கணம் அரசியல் ஸ்திரமின்மையால் சிக்கலடைந்துள்ளது. தற்போது இரு வருட காலத்துக்குள் இரு தேர்தல்கள் இடம்பெற்றன (கொள்கைக்கான பொறுப்பு தொடர்பிலான மாற்றங்கள்). வர்த்தகம் செழிப்படைவதற்கு உகந்ததான கொள்கை ஸ்திரப்பாடு அல்லது செயலாற்றுவதற்குத் தக்க சூழல் ஏற்படுவதற்கான முன் அறிகுறி எதுவும் காணப்படவில்லை.

## 1.4 தனியார்துறை மீது மோதலின் தாக்கம்

இந்த அறிக்கைக்காக நேர்முகம் காணப்பட்ட கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் அதிகமான பெரிய வர்த்தக முயற்சியாண்மைகள், மோதலானது பல காரணங்களால் நீண்டகால வர்த்தக அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என அபிப்பிராயம் கொண்டுள்ளன. முதலாவதாக, அவர்களது தந்திரோபாயங்கள், நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்துகிறது. இது உலகளாவிய மற்றும் உள்ளூரளவில் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வர்த்தக நம்பிக்கை குறைந்து போனதால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல், இலங்கைப் பொருளாதாரம் பற்றிய எண்ணத்தை

இது எதிர்மறையாகப் பாதித்துள்ளது. அத்துடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிக ஆபத்து மிக்க நாடாக இலங்கையைக் கருதும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தலைநகரை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக முயற்சியாண்மைகளின் கருத்துப்படி மாகாணத் தொழில் முயற்சிகள், குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் உள்ளவைகள் - மோதலால் வேறுபட்ட விதங்களில் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் உத்தேச தொழில்நுட்ப பரிமாற்றங்களையும், பகிரப்பட்ட அபிவிருத்தியையும் இழந்தது மாத்திரமல்லாமல், மோதல் சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொண்டு வளர்ச்சியை அடைவதற்குப் பதிலாக, தப்பிப் பிழைத்து வாழும் விதத்தில் தமது நடவடிக்கை முறைகளை அமைத்துக் கொண்டார்கள். வீதித்தடைகள், சேதமுற்ற வீதிகள், பொருளாதாரத் தடைகள், வேகமான புரள்வுடைய நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியில் ஏற்பட்ட குறைவு என்பன மோதலால் பாதிப்புற்ற பகுதிகளில் உத்தேச வளர்ச்சியை குறைவடையச் செய்துள்ளன. இது, உள்ளூர் வர்த்தகங்களுக்கும் பொருத்தமானது.

மோதல் எவ்வாறு தமது செயற்பாடுகளைப் பாதித்துள்ளன என்பது தொடர்பில் தெற்கு மற்றும் கிழக்கில் உள்ள வர்த்தக முயற்சியாண்மைகள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளது எவ்வித வியப்பும் அற்ற விடயமாகும். தெற்கில் உள்ள வர்த்தக முயற்சியாண்மைகள், கட்சி சார்பான அரசியலால் ஆபத்து உருவாக்கப்படுவதாக கருதுகிறார்கள். அதேவேளை, மோதல் மற்றும் சமாதானச் செயன்முறைகளால் அவர்களது செயற்பாடுகள் மிக விரைவாக ஆபத்துக்குள்ளாகும் விதத்தில் அமைந்த கட்டமைப்பு விவகாரங்களை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். தமிழ் வியாபாரிகளை நடுநிலைமையுடன் நோக்காத பொலிஸ் மற்றும் இராணுவக் குழுக்களின் வித்தியாசமான நடத்துகையால், இவர்களது நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, நடுநிலைமையாக தமிழ் வர்த்தக முயற்சியாண்மைகள் நடந்து கொண்ட போதும், இனவாத தாக்குதல் காரணமாக, தமது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நட்டஈடு பெறுவதற்கு அவசியமான பொலிஸ் அறிக்கைகள் வழங்க மறுக்கப்படுவதால், அவர்கள் நட்டஈடு பெற முடியாமல் உள்ளது. இவ்வாறான நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக வன்முறையைக் கட்டுப்படுத்தவோ அல்லது தடுக்கவோ பொலிசார் எதுவுமே செய்யவில்லை. இதன் விளைவாக தமிழ் வர்த்தகர்கள் தொடர்ந்தும் அச்சத்துடனேயே வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இரு வர்த்தக சமூகங்களும் பிராந்தியப் பொருளாதார வளர்ச்சியில் (போதுமான கல்வி அறிவு இன்மை உட்பட) முதலீட்டுப் பற்றாக்குறை, இளைஞர்களிடையே அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் ஏமாற்றம், அதிகரித்து வரும் வன்முறை அபாயம் என்பன இன்னும் குறைவான முதலீட்டுக்கு வழிவகுப்பதை உணர்ந்து கொண்டுள்ளன. இது கிழக்கில் உள்ள வர்த்தகப் பிரதிநிதிகளால் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. திருகோணமலை கணிசமான அளவு வாய்ப்பு வளமிக்க வர்த்தக நிலையமாகவும் நாட்டின் மூன்றாவது பெரிய துறைமுகத்தைக் கொண்டதாகவும், பல்லின மக்கள் வாழும் நகரமாகவும் இருக்கிற போதும், கடந்த சில வருடங்களாக ஒரு வர்த்தகக் கப்பலேனும் அங்கு வரவில்லை என இந்தப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தின் பாகுபாடு மிக்க நடைமுறைகளின் விளைவாகவே முதலீட்டுப் பற்றாக்குறை நிலவுவதாகக் கருதப்படுகிறது. ‘‘போதுமான பணம் படைத்தவர்கள், மோதல் அபாயம் காரணமாக திருகோணமலையில் முதலிடுகிறார்களில்லை. அதேவேளை, திருகோணமலை வாழ் மக்கள் முதலிட விரும்பினாலும், முதலீட்டுக்கான பணத்தை அதாவது, கடன்களை அவர்களால் பெற முடியாமல் உள்ளது’’ என திருகோணமலையில் இருக்கும் ஒரு வர்த்தகர் கூறினார். மேலும் அவர், பதற்றம் தொடர்ந்து வருவதால், அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட திருகோணமலையில் முதலீடு செய்ய அஞ்சுகின்றனர் என்றார்.

## 1.5 மோதலில் தனியார்துறையின் பாத்திரம்

மோதல் காரணமாக சிலர் நன்மையடைந்தனர். இந்த மோதல் சூழமைவால் ஏற்பட்ட பொருளாதார வாய்ப்புக்கள் குறித்து குறைவாகவே அறியப்படுகிறது. எல்.ரி.ரி.ஈ யினர் தமது செயற்பாடுகளுக்கான நிதியைத் திரட்டுவதற்கு பலவிதமான தந்திரோபாயங்களை

வெற்றிகரமாகக் கையாண்டு வருவதாக ஒரு ஆய்வு தெரியப்படுத்துகிறது. தமிழ் குடும்பங்கள் மற்றும் வர்த்தகர்களிடம் இருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியான மற்றும் மறைமுகமாக பயமுறுத்தல் நடவடிக்கைகளையும் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்துடன் இருக்கும் சர்வதேச தொடர்புகளையும் பயன்படுத்துவதுடன், நீதி மருவிய மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளையும்[27] எல்.ரி.ரி.ஈ மேற்கொண்டு வருகிறது; எல்.ரி.ரி.ஈ க்குப் புறம்பாக சில வர்த்தக முயற்சியாண்மைகள் மோதலால் நன்மையடைந்து வருகின்றன. ஆயுதக் கொள்வனவு, ஏனைய உபகரணங்கள் அல்லது விமானக் கொள்வனவு ஆகியவை மூலமாக இவை நன்மையடைகின்றன. நிறுவப்பட்ட ஒழுக்க விதிமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றுக்கு அமைவாக வியாபாரங்கள் செயற்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் குறைவாக இருப்பதால், முறைசாராததும், சட்டத்திற்குப் புறம்பானதுமான செயற்பாடுகள் மோதல் சூழமைவில் செழிப்புற்று வருகின்றன.

வர்த்தக முயற்சியாண்மைகள் மோதலை உருவாக்குவதற்கு அல்லது அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதே பொதுவாக ஏற்றுக்காள்ளப்பட்டதாயினும், இலங்கையில் இந்தத் தொடர்புகளை அறிவதற்கான ஆய்வுகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. இதனால், இத்தகைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவது கடினமானதாகும். கட்டமைப்பு ஆற்றலைத் தெரியதாத்தனமாக பலப்படுத்துவதன் ஊடாகவும், வர்த்தக நடவடிக்கைகள் எவ்வாறு மோதலை உருவாக்க முடியும் என்பதில் பாகுபாடு போன்ற பொதுவான வியாபார நடைமுறைகள் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை கொழும்பில் உள்ள பெரும்பான்மையான நிறுவனப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதேநேரம் பாகுபாடானது பரந்தளவிலான ஓரங்கட்டுதலுடன் தொடர்புபட்டதாக சில மக்களால் புரிந்து கொள்ளப்படுகின்றது. வர்த்தகங்களானது, சமமான வாய்ப்புக்களை அனைவருக்கும் வழங்காவிட்டால், மோதலை அதிகரிக்கவும் அதனைச் சரிகாணவும் செய்யக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த மோதல் அல்லது சமாதானச் சூழலில் வியாபாரத்தின் அணுகுமுறை அல்லது செயற்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பொறுத்து சமூக பதற்றங்களை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும் என்பதையும் அவர்கள் ஏற்றுள்ளனர்.

கிழக்கில் உள்ள வர்த்தகப் பிரதிநிதிகள் இந்தப் பார்வையைப் பலமாக ஆதரிக்கிறார்கள். ஆனால், அவர்கள் இதனை சில துறைகளிலும் தொழில்களிலும் உள்ள குறிப்பிட்ட இனக் குழுக்களின் தனியுரிமையுடன் தொடர்புபடுத்துகிறார்கள். இதற்கு உதாரணமாக, இலங்கையின் கிழக்கில் உள்ள சில சிங்களவர்கள் தாம் கொழும்புடன் கொண்டிருக்கும் அரசியல் தொடர்பு காரணமாக, போக்குவரத்துத் துறையில் தனியுரிமை பெற்றிருப்பது குறிப்பிடப்படுகிறது. அதேவேளை, முஸ்லிம் சமூக அங்கத்தவர்கள் மாற்றுச் சேவைகளை அறிமுகப்படுத்தும் போது அவர்களது வாகனங்களை சிங்கள மக்கள் சேதப்படுத்துகிறார்கள். திருகோணமலையில் உள்ள முச்சக்கரவண்டி ஓட்டுநர்களில் தமிழர்கள் 80% மும் முஸ்லிம்கள் 15% மும் சிங்களவர்கள் 5% மும் இருக்கும் நிலையில், அங்கு முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவராக சிங்களவர் ஒருவரே இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. சிங்களவர்கள் பதவிக்கு நியமிக்கப்பட்டதற்குக் காரணம், பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் பேசுவதற்கு இலகுவாக இருக்கும் என்பதனாலாகும் எனக் கூறப்படுகின்றது. சமூகத்தின் ஒரு பிரிவினரின் வாக்குகள் கிடைப்பதை உறுதி செய்து கொள்வதற்காக அவர்களை அரசியல்வாதிகள் பாதுகாத்து உதவுவதாக அபிப்பிராயம் நிலவுகிறது. இதேவிதமான குற்றச்சாட்டு எல்.ரி.ரி.ஈ மீதும் சில குழுக்களால் முன்வைக்கப்படுகிறது. நாட்டின் சில பகுதிகளில் உள்ள வர்த்தகங்களை எல்.ரி.ரி.ஈ கட்டுப்படுத்தி வருகிறது.

# 2. இலங்கையில் வர்த்தகமும் சமூகமும்

## 2.1 இலங்கையில் கூட்டாண்மைகளின் சமூகப் பொறுப்பு

உள்ளூர் வர்த்தக முயற்சியாண்மைகள் மோதல் தொடர்பில் ஆற்ற வேண்டிய ஆக்கபூர்வமான பங்கு, அவை சமூகத்துடன் பரந்தளவில் கொண்டிருக்கும் உறவு மற்றும் பங்களிப்பு என்பவற்றின் மீது தங்கியுள்ளது. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் மற்றும் அவ்வாறு செய்வதாகக் கருதப்படும் வர்த்தக முயற்சியாண்மைகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்களாக சமூகத்தில் பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சாத்தியம் இருக்கிது. இதற்கு மாறாக, அவர்களது மதிப்பு கெட்டிருந்தால், அவர்கள் பரந்துபட்ட அளவில் மக்களின் நம்பிக்கையீனத்திற்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதுடன் அவர்கள் செயற்படுவதற்கான களம் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். இலங்கையில் கூட்டாண்மைகள் சமுதாயத் தொண்டு புரிந்து வந்ததற்கு நீண்ட வரலாறு உண்டு. அது பொது உறவுகள் மற்றும் சமூகப் பொறுப்புடைமைக் கொள்கைகள் என்பவற்றைவிட, தனி மனித நம்பிக்கையால் ஏற்பட்டதாகும். உலகளாவிய போக்குக்கு அமைவாக கடந்த சில வருடங்களில் இத்தகைய செயற்பாடுகள் "கூட்டாண்மை சமூகப் பொறுப்பு" (கூ.ச.பொ) என மீள் கருக் கொள்ளப்பட்டுள்ளது. கூ.ச.பொ பல்வேறு விதமாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள போதும் அதிகமான நிறுவனங்கள் எவ்வாறு தமது கூ.ச.பொ செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றன என்பது தெளிவில்லாமல் இருக்கிறது.[28] சட்ட ரீதியாக எந்தவிதமான கீழ்ப்படிதலும் வேண்டப்படாத நிலையில் நிறுவனங்களால் அறிவிக்கப்படும் கூ.ச.பொ செயற்பாடுகள் எந்தளவு அர்த்தபுஷ்டியாக மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து எவரும் நிச்சயமாகக் கூற முடியாது. சமூகப் பொறுப்புடைமை முதலீடு (ச.பொ.மு) மற்றும் பேரளவுச் சந்தையில் நன்னெறி முறைசார் நுகர்வு தொடர்பாக இதுபோன்ற முக்கியத்துவமின்மை இலங்கையில் நிலவுகிறது. கூ.ச.பொ கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகள் என்பவற்றை நிறுவனங்கள் கைகொள்ளச் செய்வதற்காக போதுமான அழுத்தங்கள் வழங்கப்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

எவ்வாறெனினும், கூ.ச.பொ என்ற பதம் அதிகமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. பிரதான நிறுவனங்களின் கூ.ச.பொ நடைமுறைகள் பற்றிய முழுமையான ஒரு பார்வை "தி லங்கா மந்த்லி டைஜஸ்ட்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. விளையாட்டு, சுற்றாடல் விழிப்பூட்டல் இயக்கம், ஆங்கில மொழி வகுப்புக்கள், கல்வி நிலையங்கள், வலதுகுறைந்த மற்றும் அங்கவீன மக்களுக்கு உதவுதல், கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை வளர்த்தல், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், இளைஞர் தொழில் முயற்சித் திட்டங்களுக்கும் உதவுதல் ஆகிய பரந்த செயற்பாடுகள் கூ.ச.பொ செயற்பாடுகளாக அது அடையாளம் கண்டுள்ளது. ஒரேயொரு நிறுவனம் மட்டுமே (சிறுவர் நட்பு வாய்ந்த முன்பள்ளிகளுக்கு உதவுதல்) நாடளாவிய அணுகுமுறையில் பங்கேற்றது. அத்துடன், ஒரு நிறுவனம் மட்டுமே குறித்த தொழில் கொள்கையில் (வலதுகுறைந்தோரை தொழிலில் ஈடுபடுத்துதல்) ஈடுபடுவது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.[29] 2004 இல் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய மதிப்பீட்டில் சமூக மேம்பாட்டிற்காக ஆற்றக்கூடிய பலவிதமான பங்களிப்புகள் குறித்து வர்த்தகத் தலைவர்கள் அடையாளம் காட்டியிருந்தனர்.[30] வறுமையைப் போக்குதல் மற்றும் சமூகசேவைகள் (32%) என்பவற்றில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆதரித்தல், வேலைவாய்ப்பு அல்லது தொழிற்பயிற்சி (22%) வழங்குதல் மற்றும் மதச் செயற்பாடுகளுக்காக நிதியிடல் (17.7%) என்பன பிரதான பங்களிப்புகளாக அடையாளம் காட்டப்பட்டன.

கூ.ச.பொ செயற்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதானது, இலங்கையர் சமூகம் எதிர்நோக்கும் அதிகரித்து வரும் பிரச்சினைகளுக்கு நேரடி பதிலளிப்பதாக அமைந்துள்ளது என முக்கியத்துவம் மிக்க கூட்டாண்மை நிறுவனத் தலைவர் ஒருவர் கூறினார். "தேசத்தைப் பீடித்துள்ள சமூக மற்றும் சுற்றாடல் குறைபாடுகள் அச்சமூட்டும் அளவில் இருப்பதன் காரணமாக, இலங்கையில் (கடந்த சில வருடங்களில்) கூ.ச.பொ

விடயத்தில் காட்டப்படும் ஆர்வம் பெருமளவில் அதிகரித்து வருகிறது.''[31] இது உண்மையானால், தற்போது ஒருங்கிணைக்கப்படாத விதத்தில் கூ.ச.பொ வைப் பாவிக்கும் நிறுவனங்கள் மோதலுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிப்பதற்கான ஒரு கருவியாகச் செயற்படலாம்.

## 2.2 சமாதானம் மற்றும் மோதல் பற்றிய வர்த்தகத்துறையின் உணர்தல்கள்

இந்த ஆய்வில் வர்த்தகம், மோதல் மற்றும் சமாதானத்துக்கு இடையிலான உணர்தல் பற்றிய தொடர்புகள் அவதானிக்கப்பட்டது. இதற்காக தற்போது இடம்பெற்று வரும் மோதலுக்கான காரணம் மற்றும் தீர்வுகள், சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் மோதல் தடுப்பு தொடர்பான எண்ணக்கருக்கள், மோதல் மற்றும் வர்த்தகம் மீதான பரஸ்பர பாதிப்புக்கள் மற்றும் நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதான குழுக்கள் என்பன பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டன. இவற்றுடன் வர்த்தக சமூகத்தினர் கொண்டுள்ள பரந்தளவிலான சமூக அக்கறைகள் குறித்த கேள்விகளும் இணைந்திருந்தன. நாம் கீழே விபரித்துள்ளவாறு, அடையாளம் காணப்பட்ட பல சமூக அக்கறைகள் மோதல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மீது குவிந்திருந்தன.

கொழும்பைத் தளமாகக் கொண்ட வர்த்தகங்களும் தெற்கு மற்றும் கிழக்கு வர்த்தகங்களும் தாம் அதிகமாக அக்கறை கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பெரும் வேறுபாட்டைக் கொண்டிருந்தன. வர்த்தகம் செயற்பட வேண்டிய குறிப்பான சூழமைவு தொடர்பாக ஒவ்வொன்றும் தமது எண்ணத்தைப் பிரதிபலித்ததுடன், வர்த்தகம் இறுகப்பிடிக்க வேண்டிய பரந்த விடயங்கள் குறித்தும் மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டிருந்தன.

### 2.2.1 அரசியல் ஸ்திரமின்மை

கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் பெரிய வர்த்தக நிறுவனங்கள் விசனம் கொள்ளும் பொதுவான ஒரு விடயமாக அதிகரித்துச் செல்லும் அரசியல் ஸ்திரமின்மை இருக்கின்றது. இந்த ஸ்திரமின்மையானது, நீண்டகால பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய எதிர்வுகூறல்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாக இருப்பதுடன், இவர்களது பொருளாதாரப் பங்குகள் பற்றி கலவையான சமிக்ஞைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் வர்த்தகர்களைப் பொறுத்தவரையில், பொருத்தமான சூழல் தொடர்ச்சியாக மாறி வருவதையே இந்நிலைமை குறித்து நிற்கிறது. இவர்கள் முழுமையாக முதலிடுவதையும், தமது விரிவாக்கல் திட்டங்களை விரைவாக முன்னெடுப்பதையும் இந்த ஸ்திரமின்மை அதைரியப்படுத்துகிறது.

இதற்கு மாற்றமாக தெற்கில் உள்ள வர்த்தகர்களைப் பொறுத்தளவில் அரசியல் ஸ்திரமின்மையானது, கிராம மட்டத்தில், அரசியல் கட்சிகளிடையே பதற்றத்தை ஏற்படுத்தி வருவதாகக் கருதப்படுகிறது. அரசியல்வாதிகள் நாட்டு நலனைப் புறக்கணித்து நடந்து வருவதுடன், சரியான தலைமைத்துவத்தை அளிக்கத் தவறிவிட்டதாக தெற்கு மற்றும் கொழும்பை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நெருக்கமாகத் தொடர்புபட்ட மற்றுமொரு விடயம், சமூகத்தில் அரசியல் பெற்றுள்ள முக்கியத்துவமாகும். ''சகலவற்றையும் அரசியல் மயப்படுத்துவது, சமூகத்தில் நிலவிய நியமங்களை கீழ்நிலைக்குக் கொண்டுவந்துள்ளதுடன், மேலும், பிணக்கை ஏற்படுத்துகிறது'' என கொழும்பைத் தளமாகக் கொண்ட வர்த்தகர் ஒருவர் கூறினார். தென் பகுதியைச் சேர்ந்த ஒருவர், இன்னும் கடுமையான குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். இரண்டு விதமான பாத்திரங்களை அரசாங்கம் வகிப்பதுடன், முக்கியமான பிரச்சினைகள் குறித்து அதன் அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தாமல் இருப்பதன் மூலம், விடயங்களைக் கைமீறிப் போகவிட்டு அதனை அபாயகரமானதாகவும், ஸ்திரமற்றதாகவும் மாற்றி வருவதாக அவர் கூறினார்.

## 2.2.2 அதிகரிக்கும் வன்முறைகளும் மோசமாகும் பாதுகாப்பும்

கிழக்கில் அனைத்து வர்த்தகத் தலைவர்களும் பிரச்சினை மிகுந்த அரசியல் பரிமாணங்களை, சீர்கெட்டுவரும் பாதுகாப்பு நிலைமைகளுடனும், அவர்களது பிராந்தியத்தில் அதிகரித்து வரும் வன்முறை மோதல்களுடனும் தொடர்புபடுத்தினர். எந்தவொரு தனி நபரையோ அல்லது குழுவையோ நடுநிலைமையானதாக ஏற்றுக்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் மறுத்து வருவது சுட்டிக்காட்டப்படுகிறது. திருகோணமலைப் பிராந்தியத்தில், அனேகமாக மோதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்காளிகளினதும் பிரசன்னம் இருப்பதனால், அனுகூலமாக இருக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளும் வர்த்தகத் துறையினரிடம் கோரிக்கை விடுக்கின்றன. இவர்கள் கோரும் ஆதரவானது, நிதியுதவிகள், அரசியல் கூட்டங்களை ஏற்பாடு செய்வது, நிறுவனத்தின் ஆதனத்தை மற்றும் ஏனைய சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக வரையறுக்கப்பட்டதாகவே அமைந்துள்ளது. வற்புறுத்தலின் காரணமாக ஏதாவது ஒரு தரப்பினரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டாலும், அந்த வர்த்தகத்தை ஏனைய தரப்பினர் வெறுப்புடனேயே நோக்குவர். தனி நபரை அல்லது குழுவை எதிர்மறையாகக் குறிப்பதுடன், தமது சொந்தக் கோரிக்கைகளையும் அதிகரிப்பர். இது, மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக சமூகங்களில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தும். அத்தகைய கோரிக்கைகள் எழுப்பப்படும் வேளையில் அல்லது தமது நடுநிலைத்தன்மை சமரசம் செய்யப்படும் நிலையில் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் வர்த்தகங்கள் குறைந்தபட்சம் பிராந்தியத்தில் இருந்து வாபஸ் பெறும் சௌகரியத்தைக் கொண்டுள்ளன.

கிழக்கிலுள்ள வர்த்தக சமூகத்தின் விசனத்தை அதிகரிக்கும் மற்றுமொரு பிரச்சினை ஹர்த்தால் அல்லது அரசியல் ரீதியான வேலைநிறுத்தங்கள் என்பவற்றுக்காக பலதரப்புக்கள் விடுக்கும் அழைப்புக்களின் அதிகரிப்பாகும். இவ்வழைப்புக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளின் அசைவைப் பாதிப்பதுடன், பொருளாதார ஆக்கத்திறனையும் குறைக்கும். மற்றுமொரு மேலதிக விடயமாக கிழக்கிலுள்ள சில சமூகங்களுக்குக் காட்டப்படும் ஆதரவு ஏனையவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதாகும். மீன்பிடித்துறையிலுள்ள சில இனக்குழுக்கள் தலைநகரில் உள்ள அமைச்சு மட்டத்திலான நபர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் வாயிலாக நன்மையடைந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சமூகங்களானது, ஏனைய சமூகங்கள் அவ்வாறான தொடர்புகளைப் பேணுவதைத் தடைசெய்து வருகின்றன. அத்துடன், குறிப்பிட்ட போக்குவரத்துத்துறை வர்த்தகத்தில் குறிப்பிட்ட இனத்தினர் மற்றும்/அல்லது பிராந்தியக் குழுக்கள் தனியுரிமை செலுத்துவதும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

## 2.2.3 "இனப்பிரச்சினை"

இனப்பிரச்சினையானது, வர்த்தக சமூகத்தின் விசனத்தை அதிகரித்து வரும் ஒரு விவகாரமாக கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் இரு நிறுவனங்கள் சுட்டிக்காட்டின. தென்னிலங்கையில் உள்ள எந்தவொரு நிறுவனமும் இதனைக் கூறவில்லை. எவ்வாறெனினும், தீவிரவாத தேசிய இயக்கங்களால் வெளிப்படுத்தப்படும் பொறுமையின்மை, மற்றும் பாகுபாடு அத்துடன், மதப் பிரிவினர்களுக்கு இடையில் நிலவும் பதற்றம் என்பவற்றை இனப்பிரச்சினையுடன் கொழும்பில் உள்ளோர்கள் தொடர்புபடுத்துகிறார்கள். 1983 இல் இடம்பெற்ற கலவரத்திற்குப் பின்னர் தமிழ் தொழில் வல்லுநர்களில் பலர் நாட்டைவிட்டு வெளியேறியதால், தொழிற்திறன் வாய்ந்த ஆளணி வளத்தில் பற்றாக்குறை உள்ளதாக ஒரு நிறுவனம் சுட்டிக்காட்டியது.

கொழும்பில் உள்ள சிறிய வர்த்தக முயற்சியாளர்களிடம் அவர்களது பகுதியில் சமூகங்களுக்கு இடையிலான வன்முறை மோதலுக்கு வழிவகுத்த பாகுபாட்டின் ஏதாவது ஒரு வடிவத்தைச் சந்தித்துள்ளார்களா எனக் கேட்கப்பட்டது. அதற்கு 36.7% மானவர்கள் 'ஆம்' எனவே பதிலளித்தார்கள். இனக் குழுவினருக்குச் சொந்தமான வர்த்தகளுக்கு எதிரான தீய செயல், போட்டி மற்றும் முறையற்ற ஆதரவு என்பன உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்டன. ஏறத்தாழ அரைவாசிப் பங்கினர் (49.3%) எதிர்காலத்தில் வன்முறை மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய பதற்ற நிலைமைகள் தமது பகுதியில் காணப்படுவதை அறிந்திருந்தனர். வன்முறை மோதலுக்கான அச்சுறுத்தலை அதிகரிக்கும் ஒரு சுட்டியாக உள்ளூர் மட்டத்தில், சாத்தியமான வர்த்தக உணர்வு நிலவலாம் என்பதை இது காட்டுகின்றது.

## 2.2.4 சட்டம் ஒழுங்கின் சீர்குலைவு

சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டிருப்பதும் ஊழல் அதிகரித்து இருப்பதும் பாரதூரமான பிரச்சினைகளாக கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர். இதேவேளை சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது எவ்வாறு தமது செயற்பாடுகளை பாதித்தது என்பதை அனேகர் தெளிவாக விளக்கிக் கூறவில்லை. நீதித்துறையின் வினைத்திறன் குறைந்ததாலும், சட்டத்தை நிலைநிறுத்துவது தோல்வியுற்றதாலும், வர்த்தகங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பு குறைந்ததுடன், அவர்களின் செலவினங்களை அதிகரித்ததாகவும் தெரிய வருகின்றது. விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாட்டால் பதிவு செய்யப்படாத வர்த்தக முயற்சிகள் மூலம் ஒருங்கிணைக்கப்படாத போட்டி நிலவுவதையும் பிராந்தியம் பற்றி சரியான பொருளாதாரத் தகவல்கள் கிடைக்காததையும் தென்பகுதி வர்த்தகர்கள் அவதானித்துள்ளார்கள். இது தென்பகுதியில் உள்ள சமூகத்தில் ஏமாற்றத்தையும், பதற்றத்தையும் அதிகரிப்பதற்கு வழி ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் உணர்கிறார்கள். சட்டமும் ஒழுங்கும் முறிந்து போனதால், ஏற்பட்ட மறைமுகமான பாதிப்பு இந்த முறைமையின் மீது ஏற்பட்ட நம்பிக்கையீனமாகும் என கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு நிறுவனம் தெரிவித்தது. அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்துக் கவலைப்படாது இருக்கும் அமைதியற்ற நிலைக்கு இலங்கையர்கள் மாறுவதற்கு இது வழிவகுத்தது. நிருவாகம் ஊழலில் ஈடுபடுவதாகவும், தமது செயற்பாடுகளில் இதனால் கேடான விளைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் சில வர்த்தகர்கள் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினர். எனினும், இதுகுறித்து அவர்கள் விபரிக்கவில்லை.

## 2.2.5 மோதல் : காரணங்களும் தீர்வுகளும்

கொழும்பு மற்றும் மாகாண தகவலாளர்களின் கருத்துப்படி கடந்த இருபது, இன்னும் கூறினால் அறுபது வருடகாலத்தில் முழுமையற்ற அரசியல் தலைமைத்துவமே மோதலுக்கான பிரதான காரணம் என்ற அபிப்பிராயம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நிலைமையையும், சமூகக் சூழமைவையும் அவை முதலில் தோன்றியவுடனே சரியாகப் புரிந்து கொள்ளத் தவறியமை, சமூகப் பிரச்சினைகளை உரிய வேளையில் கவனிக்கத் தவறியமை, பல்லின மக்கள் என்பதற்குப் புறம்பாக இலங்கையர் என்ற அடையாளத்தை சிங்கள பௌத்தர்கள் என்ற வகையில் சோடித்துக்காட்டுவதற்காக சிங்களம் மட்டும் கொள்கையைப் பாகுபாடான விதத்தில் அறிமுகம் செய்தமை, குறுகியகால அரசியல் நலன்கள் குறித்து அவதானம் செலுத்தியமை, ‘‘சரியானதைச் செய்வதற்கான’’ துணிச்சலின்மை என்பன தலைமைத்துவக் குறைபாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மோதலுக்கான காரணங்கள் பல வருட காலத்தில் மாற்றமுற்று அல்லது பரிணாமம் அடைந்து பழைய குறைகள் அகற்றப்பட்டு புதிய குறைபாடுகள் சேர்க்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற கருத்துக்கள் கொழும்பில் உள்ள சிறிய வர்த்தக உரிமையாளர்கள் மத்தியிலும் நிலவி வருகிறது. அரசியல் அல்லது அரசியல்வாதிகளே இலங்கை மோதலுக்கு பிரதான காரணம் என 56.5% மானோர் அபிப்பிராயப்படுகின்றனர். 30.5% மானோர் மோதலை அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட இனப் பாகுபாட்டுடன் தொடர்புபடுத்துகின்றனர். மற்றும் 3.4% மானோர் பொருளாதாரப் பிரச்சினைகள் மீது குற்றஞ்சுமத்துகின்றனர். இந்த மாதிரியில் இருந்து மோதலின் சமூகப் பொருளாதார அடிப்படைகள் குறித்த விழிப்புணர்வு அரிதாகவே இருக்கிறது.

தீர்வுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டவர்கள் சமமான உரிமைகள், சந்தர்ப்பங்கள் நாட்டிலுள்ள அனைத்துப் பிரசைகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்யவேண்டுமென மிக உறுதியாகக் கூறினார்கள். ‘‘நாம் எங்கிருந்து வந்தோம், எப்போது வந்தோம் என்பதல்ல பிரச்சினை’’ என்கிறார் ஒரு தகவலாளி. ‘‘இப்போது நாங்கள் இங்கிருக்கிறோம், ஆகவே ஒன்றாக இணைந்து வாழ்வதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?’’ இரண்டாவதாக முன்வைக்கப்படும் பிரதானமான தீர்வு நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், வேறுபட்ட குழுக்களுக்கு இடையில் நெருங்கிய உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்துதல் என்பனவாகும். பிணக்கைத் தீர்ப்பது குறித்து ஒரு தகவலாளர் பின்வரும் சிபாரிசைச் செய்கிறார்: ‘‘முதலில் இரு பிரதான கட்சிகளும் தம்மத்தியில் உள்ள வேறுபாடுகளைப் புதைத்துவிட்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அதன் பின்னர் அனைத்து (பங்காளிகளும்) ஒன்றாக அமர்ந்து (தனித்தனியாக ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதைத் தவிர்த்து) கூட்டு ஆலோசனையை முன்வைக்க வேண்டும். அது அனைத்துத் தரப்பினரதும் (தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்) நோக்கங்களை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். இது குறித்து பின்னர் நாட்டுடன் கலந்துரையாட

வேண்டும். இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்ட நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்ல அனைவரும் உறுதிபூண வேண்டும்'' தெற்கிலும் கொழும்பிலும் உள்ள சிலர் பலமான ஆனால், அமைதியான ஒரு சர்வாதிகாரமே மாற்றுத் தீர்வாக இருக்குமென ஆலோசனை வழங்கியது சுவாரஸ்யமளிக்கிறது.

## 2.2.6 சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான கருத்துருவம் குறித்து கொழும்பை அடிப்படையாகக் கொண்ட பல வர்த்தக முயற்சியாண்மைகள் உணர்ந்திருக்கும் வேளையில் மாகாண முயற்சியாண்மைகள் சமாதானத்தை மேம்படுத்த குறிப்பான செயற்பாடுகளைப் பிரஸ்தாபித்தன. கொழும்பை அடிப்படையாகக் கொண்ட அதிகமான தகவலாளிகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை வேறுபட்ட சமூகங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு, நம்பிக்கை, பற்றுறுதி, மதிப்பளித்து பொறுமைகாட்டுதல் என்பவற்றுடன் தொடர்புபடுத்துகிறார்கள். வேறுபாடுகளையிட்டு மக்கள் அச்சம் கொள்வதால், மாறுபட்ட கோட்பாடுகளைக் கொண்ட மக்கள் மத்தியில் இவற்றை ஏற்படுத்துவது அவசியமானதாகக் கருதப்படுகிறது. தென்பகுதியில் உள்ள வர்த்தக முயற்சிகள் நெருங்கிய தொடர்பையும் புரிந்துணர்வையும் உருவாக்குவதற்காக ஏனைய மக்களின் மொழியைக் கற்பதும் திட்டங்களைப் பரிமாறிக்கொள்வதும் சமாதானத்தைக் கட்டியெழுப்ப அவசியமானதாகக் கருதுகிறார்கள்.

''இது அறிவுபூர்வமான ஒரு சிந்தனையல்ல. ஆனால், மனமும் நிலையான ஆள்சார் வளர்ச்சியும் சம்பந்தப்பட்டதாகும்'' என ஒரு நிறுவனப் பிரதிநிதி கூறுகிறார். மதமும் இனமும் தனிச்சிறப்புப் பெறாத ஒன்றுபட்ட அடையாளத்தின் அபிவிருத்தியே சமாதானத்தைக் கட்டியெழுப்ப அவசியமாகும். இந்த வகையில், சகல இனங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்தோரை ''இலங்கையர்களாக'' மற்றும் இலங்கைப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் வேண்டுமென மற்றுமொரு பிரதிநிதி தெரியப்படுத்துகிறார். இலங்கையர்கள் முதலாவதாக இன ரீதியான சிந்தனையில் இருந்து திரும்பவும், இரண்டாவதாக வன்முறை நடத்தையில் இருந்து மீளவும், அதிகம் ''தெரிந்திருக்கவில்லை'' என்பது அவதானிக்கப்பட்டது.

பாகுபாடு மற்றும் ஓரங்கட்டுதலை இல்லாதொழிக்கும் வகையில் வளங்களையும், செல்வத்தையும் மீள் பகிர்வு செய்வதற்கு உதவக் கூடியதாக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியோடு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை கொழும்பைத் தளமாகக் கொண்ட அனேக பெரிய வர்த்தர்கள் (சிறிய வர்த்தகத்துறை போலன்றி) அடையாளம் கண்டுள்ளார்கள். மோதல், இந்த வகையில் மூன்று விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளது. அவையாவன, அதிருப்தி, பாகுபாடு, பிரிவு என்பனவாகும். ஒரு தகவலாளி கருத்துத் தெரிவிக்கையில், ஒவ்வொரு தனி நபரும் அவரது சொந்தத் தகைமைகள் மற்றும் வரையறைகளுக்கு ஏற்ப வெற்றியை எய்துவதற்கான சம வாய்ப்பு இருக்க வேண்டும் என்றார். சில பிரதிநிதிகள் இந்தக் கருத்தை வேறுபட்ட வகையில் எதிரொலித்தார்கள். சமாதானமானது, பல விடயங்களில் விளைவுப் பயனாகக் கருதப்படுகிறது. மிக முக்கியமாக சமூகத்திலுள்ள அனைத்துப் பிரசைகளும் நீதியாகவும், நடுநிலைமையுடனும் நடத்தப்பட வேண்டும். இதனைப் பலமானதும், சுதந்திரமானதுமான சிவில் முறைமையால் மட்டுமே உறுதி செய்யலாம். நீதி இல்லாது போனால் அல்லது குறைவாக இருந்தால், மக்கள் விவகாரங்களை தமது கைகளில் எடுக்கும் சாத்தியம் நிலவுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில தகவலாளிகள் ''போருமில்லை - சமாதானமும் இல்லை'' என்ற தற்போதைய நிலைமையைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள். சமாதானத்தை ஏற்படுத்துவது எவ்வாறு என்பது குறித்து சரியாகத் தெரிந்திராத போதும், பரந்த அளவிலான நோக்கு மற்றும் சமாதானத்தின் அர்த்தம் என்பவற்றை இலங்கை அபிவிருத்தி செய்ய வேண்டும் என வாதிடுகிறார்கள். வேறுபட்ட பிராந்தியங்களில் உள்ள வேறுபட்ட மக்கள் சமாதானம் என்றால் என்ன என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். கொழும்பில் உள்ள சிறிய வர்த்தக முயற்சியாளர்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கினர் (30.9%) சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை இனங்களுக்கு இடையிலான அமைதியை மேம்படுத்தும் ஒரு செயற்பாடாக விபரிக்கிறார்கள். அடுத்த பிரதானமான பதில்களாக போரை முடிவுக்குக் கொண்டுவருதல் (23.7%) மற்றும் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதை உறுதிப்படுத்துதல் (17.3%) ஆக உள்ளன.

## 2.2.7 மோதலைத் தடுத்தல்

எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பேதமின்றி அனேகமாக அனைத்து வியாபாரிகளும் மோதலைத் தவிர்த்தலை மூன்று கட்ட செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தினார்கள்: மோதலின் அடிப்படையிலான காரணங்கள் குறித்த உள்ளார்ந்த புரிந்துணர்வு, ஏற்படக்கூடிய மோதல் மற்றும் வன்முறைகளை நுண்ணறியக்கூடிய பொறிமுறை, அவை உச்சக்கட்டத்தை அடையும் முன்னரே அதனைச் சமாளிப்பதற்கு அல்லது அழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுதல் என்பனவாகும். மோதலை முன்னறியக்கூடிய பொறிமுறை மற்றும் அதனைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளானது, அனைத்து தனி நபர்களாலும் சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அவற்றை அணுகத்தக்கதாகவும் இருக்க வேண்டுமெனக் கூறுவதன் மூலம் கொழும்பைத் தளமாகக் கொண்ட தகவலாளிகள் இந்த மூன்று கட்ட செயற்பாடுகளையும் தகுதிப்படுத்துகிறார்கள். இதற்கு மேலதிகமாக, மக்கள் தமது நடவடிக்கைகள் மோதலை உருவாக்க அல்லது தணிக்கக்கூடும் என்பது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். தெற்கு மற்றும் கிழக்கைச் சார்ந்த அனேக வர்த்தகப் பிரமுகர்கள் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொலைகள் நிறுத்தப்படுவதை மோதல் தடுப்பு நடவடிக்கையின் மேலதிக உட்கூறாகக் குறிப்பிடுகின்றனர். கொலைகள் எனக் குறிப்பிடப்படுவது, ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இலக்கு வைத்தா அல்லது இரு சமூகங்களையும் இலக்கு வைத்தா கூறப்படுகிறது என்பது தெளிவாக இல்லை.

மோதலைத் தடுத்தலானது, பாகுபாடான நடைமுறைகளுடன் தொடர்புபட்டதாக இருக்க வேண்டும் என கிழக்கு வர்த்தகர்கள் உறுதியான ஆலோசனையைக் கொண்டுள்ளார்கள். அரசியல் மேலிடத்தால் குறிப்பிட்ட சமூகங்களுக்கு ஆதரவு அளிக்கப்படல் போன்ற வன்முறையைத் தூண்டுவதற்கான மறைமுக உதவிகளை இல்லாமல் செய்தல், தேர்தலின் போது இன உணர்வைத் தூண்டுவதை முதன்மையான அரசியல் தந்திரோபாயமாகக் கொள்ளப்படுவதற்கு முடிவுகட்டல், கிழக்கில் ஜனநாயக கலாசாரத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இவை உள்ளன. முதல் ஆலோசனைக்கு உதாரணமாக, திருகோணமலையின் மத்திய பகுதியில் புத்தரின் சிலை நிர்மாணிக்கப்பட்டதால் ஏற்பட்ட வன்முறைகளை ஒரு தகவலாளி குறிப்பிடுகிறார். சிலை அமைக்கும் விடயத்தில் பொலிசார் தலையிட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை, குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமது ஒழுங்கமைப்பாளர்களுக்குக் கொடுத்த உத்தரவின் விளைவாக இச்சிலை நிர்மாணிக்கப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார். அரசாங்க முகவரோ, நகர சபைத் தலைவரோ உள்ளூர் வாசிகள் அல்லர் என ஒரு வர்த்தகப் பிரதிநிதி தெரிவித்தார்.

கிழக்கில் நிலவும் தற்போதைய அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலைமையில் மோதலைத் தடுப்பதற்கான சாத்தியம் குறித்து ஒரு வர்த்தகப் பிரதிநிதி நம்பிக்கை இழந்துள்ளார். அனேகமாக எல்லாத் தகவலாளிகளுமே இராணுவத் தீர்வுக்குப் பதிலாக பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல் ஊடாக மோதல் தீர்வுக்கு சமாதான வழிமுறைகள் கைக்கொள்ளப்படுவதையே விரும்புவது ஊக்கமளிப்பதாக உள்ளது.

## 2.2.8 மோதலைத் தவிர்ப்பதற்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான பொறுப்புடைமை

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான முதன்மைப் பொறுப்புடைமை அரசாங்கம் மற்றும் எல்.ரி.ரி.ஈ போன்ற குழுக்கள் உள்ளடங்கலாக அரசியல் கட்சிகளிடமே இருப்பதாக அனைத்து தகவலாளிகளும் நம்புகின்றனர். எனினும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும், மோதலைத் தடுப்பதற்கும் தலைமை தாங்கும் தகைமை அரசிற்கு குறைவாக இருப்பதை ஒரு பிரதிநிதி அவதானித்துள்ளார். அரசின் மீதான நம்பிக்கை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளதால், இந்தப் பொறுப்பைப் பூர்த்தி செய்யும் அதன் திறன் குறைந்து போய் இருப்பதை மற்றும் ஒருவர் சுட்டிக்காட்டுகிறார். சமூகத்திலுள்ள ஏனைய குழுக்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஏற்கக் கூடிய பொறுப்பு கணிசமானது என்றாலும், முதன்மையானது அல்ல என்பதை பதிலளிப்பவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கிராம மற்றும் சமூகத் தலைவர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள் சிறந்த முறையில் வர்த்தகத்தை நடத்துபவர்கள் - அரச சார்பற்ற அமைப்புக்கள், கல்விசார் மற்றும் தொழில் வல்லுநர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் தர்ம நிதியங்கள் என்பன சமாதானத்தைச் செயற்பாட்டில் சில பொறுப்புக்களைக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், தென் பகுதியைச் சேர்ந்தோர் குறிப்பிடுகையில், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பக்கச்சார்பானவர்களாகக் கருதப்படுவதால், இலங்கையின் அனைத்து பாகங்களிலும்

வெளிப்படைத் தன்மையுடன் செயல்புரிவதன் வாயிலாக அவர்கள் தமது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றனர். இதேவேளை, மூன்று சமூகங்களைச் சேர்ந்த வர்த்தகர்களும் சமாதானத்தை உருவாக்குவதற்குப் பொருத்தமானவர்களாக கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் கருதுகின்றனர். சமாதானமான சமூகத்தை உறுதிசெய்வதில் மத முக்கியஸ்தர்களுக்கும் பொறுப்பு இருப்பதாகவும் கருதப்படுகிறது.

அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற உயர் எதிர்பார்ப்பானது, இந்த உணர்வு இலங்கையர் சமூகத்திற்கு இடையில் நிலவுவதாகக் கூறும் வேறு ஆராய்ச்சிகளை உறுதிப்படுத்துகிறது. மதத் தலைவர்களும், அதேபோல் ஊடகத்துறையினரும், கணிசமான முக்கியத்துவம் மிக்க செயற்பாட்டாளர்களாக சிறிய வர்த்தகர்கள் கருதுவதும் அவதானிக்கத்தக்கது. மறுபுறத்தில் பெரிய வர்த்தக முயற்சியாண்மைகள் குறைந்தளவு பொருத்தமானவையாகவே நோக்கப்படுகின்றன. சமாதானத்தைக் கட்டியெழுப்ப பெரிய முயற்சியாண்மைகள் அதிக பொறுப்பை ஏற்க முடியுமென சிங்கள அல்லது முஸ்லிம் பதிலாளிகளைவிட இரு மடங்கு தமிழ் பதிலாளிகள் குறிப்பிடுவது சுவாரஸ்யமானது.

மோதல் தடுப்புக்கான பொறுப்புடைமை தனியார், சிவில் சமூகக் குழுக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கம் ஆகிய அனைத்துச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் சமமாகப் பகிரப்பட வேண்டும் என சில நிறுவனப் பிரதிநிதிகள் கருதுகின்றனர். சமாதானமான சமூகத்தை உறுதி செய்ய வேறுபட்ட செயற்பாட்டாளர்களிடம் வேறுபட்ட பலன்கள் இருப்பதை ஒரு பிரதிநிதி விவரிக்கிறார்: தெரிவு செய்யப்பட்ட காரணத்தால் அரசும், வளங்கள் இருப்பதால் தனியார் துறையும், மக்கள் இன அடிப்படையிலான சிந்தனையில் இருந்து விடுபடுவதற்கு அவர்களுக்கு அறிவூட்டும் திறனைக் கொண்டிருப்பதற்காக சிவில் குழுக்களையும் அவர் இந்த வகையில் குறிப்பிடுகிறார். இந்தச் சிறிய குழுவின் கருத்துப்படி சமாதானத்தைக் கட்டியெழுப்புவது ஒரு கூட்டு முயற்சியாகும். ‘‘சமாதானத்தை உறுதி செய்வது அரசாங்கத்தினதும், அரசியல் கட்சிகளினதும் இராணுவத்தினதும் பணி என்றே கருதி செயற்படுகிறோம். ஆனால், இது அப்படியல்ல. இது எம் அனைவரதும் பணி’’ என்கிறார் ஒருவர்

## 2.3 சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்துறையின் ஈடுபாட்டை வலியுறுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

### 2.3.1வர்த்தகத்துறையின் சமாதானத் தலையீட்டுக்கான செயல் ஊக்கம்

வர்த்தகத் தலைவர்கள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபாடு கொள்வதற்கு செயல் ஊக்கமளித்த மிக முக்கியமான விடயம் மீது, எவ்வாறு சமூகப் பிரச்சினைகள் தாக்கம் செலுத்தின என்பதற்கான அங்கீகாரம் எதுவாகுமென கொழும்பு மற்றும் தென்னிலங்கையில் உள்ள அதிகமான வர்த்தக முயற்சியாண்மைகள் கூறின. வர்த்தக முயற்சியாண்மைகள் தமது சொந்த நலனுக்கு நன்மையளிக்குமாக இருந்தால் மட்டுமே சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை ஒரு தெரிவாகக் கருதும். அதிக வெளிநாட்டு முதலீட்டுடன் புதிய சந்தைகள் திறக்கப்படும் போது, வர்த்தகங்களின் பாவனைக்காக புதிய வளங்களும் உருவாகும். சமாதான முன்னெடுப்புக்ளில் ஈடுபடுவதானது, கூட்டாண்மையின் நன்மதிப்பைக் கட்டியெழுப்பும் விடயத்துடன் தொடர்புபட்டதாகும்.

உள்ளகப் பிராந்தியத் தொடர்புகளை விருத்தி செய்வதற்கான திறனையும், அதன்மூலம் தமது வர்த்தக வாய்ப்புக்களை விஸ்தரித்துக்கொள்வதும் சில தென்னிலங்கை வர்த்தகங்களைச் செயலூக்கப்படுத்தும் காரணியாகும். வர்த்தகத்தை விஸ்தரிப்பதற்கான தொடர்புகளைப் பேணுவதற்கு வேறுபட்ட குழுக்களுக்கு இடையே நம்பிக்கையையும் நட்புறவையும் ஏற்படுத்துவது அவசியமாகுமென ஒரு பதிலாளி கூறுகிறார். நீண்ட பிரிவுக்குப் பின்னர் பிராந்தியங்களுக்கு இடையிலான பொருளாதாரத் தொடர்புகள் நம்பிக்கையையும் நட்புறவையும் வளர்க்க உதவுமென பேட்டியளித்த மற்றும் ஒருவர் கூறுகிறார். செயலூக்கம் குறைவானதன் காரணமாக வர்த்தகங்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உணரப்படத்தக்க வகையில் ஈடுபடவில்லை எனவும் மிகவும்

சிக்கலானதும் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது, அரசியலில் ஆபத்து ஏற்படக்கூடியது அல்லது பிணக்குடன் தொடர்பான தலையீடுகளுக்கும் காரணமாக அமைவதனால், இந்தச் சமாதானச் செயற்பாட்டில் ஈடுபட அவை தயங்குகின்றன.

சில வியாபார முயற்சிகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் ஆர்வம் காட்டுவது தற்போதைய மோதல் சூழ்நிலையால் சுமத்தப்பட்டுள்ள சந்தர்ப்ப செலவு காரணமாகவேயாகும். உதாரணமாக, நுகர்வோருடன் அல்லது சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக முயற்சிகள், அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளின் வழமையான அசைவுகளில் தங்கியுள்ள வர்த்தகங்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்கை வகிக்கும் சாத்தியம் உள்ளது. சமாதானத்தை மேம்படுத்துவதில் உல்லாசப் பிரயாணத்துறை வர்த்தகங்கள் கணிசமான அக்கறையுடையவையாக தெற்கில் காணப்படுகின்றன. இதுபோல் அரச மற்றும் பாதி - அரச நிறுவனங்களும் மோதலைத் தடுப்பதில் பெரும் அக்கறை கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அதிக தகைமையுள்ளதாக சில வகை வர்த்தக முயற்சிகள் கருதப்படுகின்றன. உதாரணமாக, வங்கிகள், காப்புறுதி மற்றும் கல்வித்துறை என்பன வாடிக்கையாளர்களுடன் நீண்டகாலத் தொடர்பைப் பேணி வருவதால், வாடிக்கையாளர்களின் கருத்தை மாற்றியமைப்பதற்கு அவை போதிய வாய்ப்பைக் கொண்டுள்ளது. இதற்கு மேலாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வர்த்தக முயற்சிகள் மக்களின் மற்றும் அரசு மீது செல்வாக்குச் செலுத்தும் நிலையில் உள்ளன. மோதலால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலாபமடையும் நிறுவனங்கள் சமாதானச் செயற்பாட்டிற்குக் குந்தகமாக இருக்கும் என ஒரு பதிலாளி கூறுகிறார். எனினும், பெரிய வர்த்தக முயற்சிகள் கொழும்பில் இருப்பதாலும், பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பைச் செய்து வருவதாலும், அவை அரசாங்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் திறன் வாய்ந்ததாக இருப்பதை தெற்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்துப் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர்.

## 2.3.2 வர்த்தகங்களின் சமாதானத் தலையீட்டுக்கான இடர்க் காரணிகள்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும், மோதலைத் தவிர்ப்பதிலும் ஈடுபடும் வர்த்தகங்கள் அபாயத்தை எதிர்நோக்கி இருப்பதை அனைத்து நிறுவனங்களும் ஏற்றுக்கொள்கின்றன. ஏனெனில், மக்களின் அடையாளம் சம்பந்தப்பட்ட உணர்வு, நீதி மற்றும் ஒழுக்கம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புபட்ட பரப்பாக இருப்பதால், அவை, தவறாகப் புரிந்து கொள்ளப்படவும் திரித்துக் காட்டப்படவும் மற்றும் தவறாக பொருள்கொள்ளப்படவும் அதிக வாய்ப்பு உள்ளது. அரசாங்கத்தில் ஸ்திரமின்மை நிலவும் வேளையில் குறிப்பான அரசியல் பார்வைக்கு ஆதரவளிப்பதாக குற்றஞ்சாட்டப்படும் நிலைமைக்கு வர்த்தகங்கள் முகங்கொடுக்கலாம். மோதல் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரசன்னம் இருப்பதாலும், நடுநிலைத்தன்மை குறைவாக இருப்பதாலும், இப்பகுதிகளில் அதிகமான அபாயம் இருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுக் காரணமாக அரசாங்கத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ உள்ள குழுக்களால் நிறுவனம் அல்லது அதன் பிரதிநிதிகள் பௌதீக ரீதியாக இலக்கு வைக்கப்படுவதற்கு வழி ஏற்படும்.

வர்த்தக முயற்சிகளின் நோக்கங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளும் அரசாங்க அதிகாரிகள் நிர்வாக, பாதுகாப்பு மற்றும் அதிகார ரீதியான தடைகளை விதித்து அந்த வர்த்தக முயற்சிகள் செயற்படுவதைக் கடினமாக்கவும் கூடும். பொதுமக்கள் மத்தியில் இழுக்கு ஏற்படும் அபாயமும் உள்ளது. நிறுவனத்தின் நற்பெயருக்குச் சேதம் ஏற்படுத்துவதன் மூலம் தேசியவாதிகள், தீவிரவாதிகள் அல்லது ஆயுதக் குழுக்களின் சாபத்தைத் தூண்டவும் கூடும்.

சமாதான முன்னெடுப்புக்களை ஆதரிப்பதால் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் பிரச்சினைகள் குறித்துக் கேட்கப்பட்ட போது, அரசியல் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படும் சண்டியர்களின் தொல்லைக்கு உள்ளாக வேண்டிய அரசியல் பிரச்சினைகள் (42.9%) ஏற்படுமென கொழும்பில் உள்ள சிறிய வர்த்தக முயற்சியாண்மை சமூகம் கூறியது. அயலவர்களால் அல்லது அதிகளவு இன ரீதியான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ள ஏனைய வர்த்தகர்ளால் எதிர்மறை விளைவுகள் ஏற்படுமென மற்றும் 39.1% மானோர் அஞ்சுகின்றனர். ஏனைய (11.1%) பதிலாளிகளால் குறிப்பிடப்படும் ''வர்த்தகத்துடனான

பிரச்சினைகள்'' என்பது முதலிரு கூற்றுக்கள் மீதும் கவிந்துள்ளது. மேலதிகப் பொருளாதாரச் சுமைகளைச் சமாளிக்கச் சிரமப்படும் சிறிய நிறுவனங்கள் எதிர்மறை பிரசித்தமானது தமது வர்த்தக முயற்சிகளைப் பாதிக்கும் என்பதையிட்டு அதிக விசனம் கொள்கின்றன.

அபாயத்தைக் குறைப்பதற்கு அறிவார்ந்த முறையில் திட்டமிடவும் அதை சரியாகச் செய்யவும் ஒருவர் தவறுமிடத்து மட்டுமே அபாயங்கள் ஏற்படுவதாக இரு பதிலாளிகள் கூறினர். சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செய்திகள் நல்ல முறையில் சென்றடைகிறதா என்பதை தெரிந்து கொள்ள சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல், கூறப்பட்ட நிபந்தனைகளின்படி அணுகுமுறையையும் தந்திரோபாயத்தையும் திட்டமிடல், அத்துடன் செய்தியைப் பரப்புவதற்கான சரியான முறையை பாவித்தல் என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒருவரின் சொந்த நலனுக்காக இத்தகைய முன்னெடுப்புக்கள் பாவிக்கக்கப்படுவதாக தோற்றமளிப்பதை தவிர்க்க வேண்டுமென அவர்கள் சிபார்சு செய்கிறார்கள். ஏனெனில், இது தவறாக திரித்துக் கூறப்படலாம். கூட்டான முயற்சிகளை மேற்கொள்வது, வெளிப்படைத் தன்மையுடனும், ஒழுக்கமாகவும் இருப்பது மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செய்திகளை அனைவருக்குமான சமூக அபிவிருத்தியோடு பிணைப்பது என்பனவற்றின் மூலம் அபாயத்தைக் குறைக்கலாமென ஒருவர் குறிப்பிடுகிறார். சமாதானம் மிக முக்கியமானது. அதனால், அதனை உறுதி செய்வதற்கு பிரசைகள் சில அபாயங்களைச் சுமக்க வேண்டும் என கிழக்கில் உள்ள பல நிறுவனப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

## 2.3.3 ஏனைய காரணிகள்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் அல்லது மோதலைத் தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தக் காரணி துணைபுரியும் என்பதையிட்டு கொழும்பை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகர்கள் மற்றும் மாகாண வர்த்தகர்கள் மத்தியில் வேறுபட்ட அபிப்பிராயம் நிலவுகிறது. அவர்களது பதில்களில் அரசு முக்கிய இடம் வகிக்கிறது. சமாதான செயற்பாட்டிற்கான அரசின் தெளிவான அர்ப்பணிப்பு மிகப் பரந்தளவில் வேண்டப்படும் தேவைப்பாடாக இருக்கிறது. ''அனைத்து தரப்பினரும் சமாதானத்தின் தேவை குறித்து இணக்கம் கண்டால், அது, (சமாதான செயற்பாட்டையும் சமாதான நடவடிக்கைகளையும் நாம் ஆதரிப்பதற்கு) மிக இலகுவாக இருக்கும். ஆனால், அவர்களிடம் வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்கள் இருப்பின் அப்போது அது கடினமாக இருக்கும்'' என ஒரு பதிலாளி கூறினார். ஸ்திரமான அரசாங்கம் இருப்பதும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மோதலைத் தடுப்பதற்கும் வழிகாட்டும் ஸ்திரமான பணிப்புரைகள் இருப்பதும் அவசியமென பல வர்த்தகர்கள் விரும்புகின்றனர்.

வர்த்தக முயற்சிகள் இதில் சம்பந்தப்படுவதற்குப் பொருத்தமான பொறிமுறைகள் இருக்க வேண்டுமெனவும் அவை விரும்புகின்றன. அரசாங்கத்தாலோ அல்லது ஏதாவது ஒரு அரசியல் பிரிவாலோ, சமாதானத்தைக் கட்டியெழுப்பும் தமது முயற்சிகள் ''பயன்படுத்தப்படக் கூடாது'' என்ற உத்தரவாதத்தை நிறுவனங்கள் விரும்புவதாக ஒரு பதிலாளி கூறினார். போதுமான செயலூக்கம் தரப்படும் பட்சத்தில் மோதலால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் விஸ்தரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுமென சில தகவலாளிகள் நம்புகின்றனர். மோதல் தீர்வுடன் சம்பந்தப்பட்ட அபாயங்களை ஏற்க விரும்பும் வர்த்தக முயற்சிகளுக்கு அரசாங்கமானது அடிப்படைப் பாதுகாப்பை வழங்குவதால் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதன் மீது செலவிட்ட தொகைக்கு வரிவிலக்கு அளிப்பதை உறுதி செய்தால், இந்த அபாயத்தை வர்த்தகங்கள் ஏற்க முன்வருமென வேறு சிலர் கூறினர்.

வர்த்தகத் தலைவர்கள் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வதுடன் அரசின் ஸ்திரத்தன்மையோ அல்லது தலையீடோ இன்றி வர்த்தகங்கள் இதில் பங்கேற்க முடியுமென கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் சில நிறுவுனங்கள் உணருகின்றன. ''வர்த்தகர்கள் தமது சௌகரிகமான வலயத்தில் இருந்தால், அவர்கள் சுறுசுறுப்பாகச் செயற்படப் போவதில்லை. ஆனால், வர்த்தகங்கள் பாதிப்புற்றால் அவர்கள் ஏதாவது செய்ய முன்வருவார்கள்'' என ஒரு நிறுவனப் பிரதிநிதி கூறினார். போரின் சந்தர்ப்பச் செலவு அல்லது சமாதானத்தின் பொருளாதார நன்மைகளை உணர்தல் போன்ற நிதி ஊக்குவிப்புக்கள் பற்றிய அறிவு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் மோதலைத்

தவிர்ப்பதிலும் வர்த்தகங்கள் ஈடுபடுவதற்கு செயலூக்கம் தருவதாக அமையுமென அவர் மேலும் கூறினார்.

உள்ளடக்கப்பட்ட ஏனைய காரணிகள்: உயர் தீர்மானம் மேற்கொள்பவர்களை அணுகுதல், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கான ஊடகத்துறையின் ஆதரவு, அத்தகைய செயற்பாடுகளுக்கான பொதுமக்கள் ஆதரவு, வர்த்தகங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது பற்றிய திட்டங்கள், உயர்நிலையில் உள்ளவர்கள் பங்களிப்புச் செய்வதற்கு வழியமைத்தல், தற்போதைய நிலைமை பற்றிய மிகச் சரியான தகவல்கள் என்பனவாகும். செயற்பாட்டு மட்டத்தில் நிலவும் போக்குவரத்துச் சிரமங்கள், சில பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி கிடைப்பதில் உள்ள பிரச்சினைகள் என்பன தற்போதைய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை அமுல் செய்வதைப் பாதிக்கும் காரணிகளாகும் என ஒரு நிறுவனம் குறிப்பிடுகிறது. சிறிய மாகாண வர்த்தகங்களைப் பொறுத்தவரையில் வர்த்தகங்கள் நிலைத்திருப்பது முக்கிய பங்காற்றும். கிழக்கைப் பொறுத்தளவில் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஜீவாதாரமானதாகக் கருதப்படுகிறது.

## 2.3.4 விரும்பப்படும் பங்கேற்பும் தலைமைத்துவமும்

கொழும்பைத் தளமாக் கொண்ட கூட்டாண்மை நிறுவனங்களில் இருந்து பங்கேற்க வந்தவர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு தமக்கு இரு தளங்கள் இருப்பதாக நம்புகிறார்கள். வர்த்தகத் தலைவர்கள் தனிப்பட்ட நிலையில், ரொட்டரி கழக அங்கத்தவர்கள் என்ற முறையில் தர்ம காரியங்களை ஏற்கனவே கொண்டு நடத்துகிறார்கள். அதிகமாக செயற்பட விரும்பும் ஏனையவர்கள் இனவாதம், பாகுபாடு மற்றும் பொறுமை போன்ற விடயங்களில் நிலைப்பாடுகளை எடுக்க விரும்புகிறார்கள். ஒரு வர்த்தக செயற்பாடாகவன்றி, தனிப்பட்டமுறையில் சமாதான நடவடிக்கைளில் பங்கேற்க விரும்புவதாக பல தகவலாளிகள் தெரிவித்தனர். இதற்கு அவர்கள் தெரிவித்த காரணங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் பிடிப்பதும், விடயம் தவறாகப் போகுமானால் நிறுவனம் விழ்ச்சியடைவதில் இருந்து தடுப்பதுமாகும்.

கூட்டாண்மை நிறுவன அடையாளத்தின் ஊடாக சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வதால், தெளிவான அனுகூலம் இருப்பதாக கொழும்பைத் தளமாகக் கொண்ட பிரதிநிதிகளில் கணிசமான பங்கினர் நம்புகின்றனர். ஆனால், இதில் கவலை அளிக்கும் விடயம் என்னவெனில், அனேக நிறுவனங்கள் விருப்பம் இன்றி இருக்கின்றன. வர்த்தகத்துறையின் தலைமையிலான தலையீடானது அதிக நம்பகத்தன்மையை அல்லது செல்வாக்கைக் கொண்டிருப்பதுடன், கூட்டுமுயற்சியின் ஒரு அங்கமாக இருக்கும் எனவும் இது பரந்த அளவிலான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் கருதப்படுகிறது. இவை இரு வகையான செல்வாக்குப் பரப்புக்களை இணைக்கும் வழிகள் இருப்பதால், இரு தன்மைகளின் அடிப்படையிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என சிலர் கருதுகின்றனர். உதாரணமாக, வர்த்தக நிறைவேற்று அதிகாரிகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளுக்குத் தலைமைதாங்கி அல்லது அவற்றில் இணைந்துகொள்ள முடியுமான அதேவேளை, ஸ்தாபனத்தில் பிரிவினைவாத அல்லது போரை விரும்பும் கொள்கைகள் நிலவுவதைத் தடைசெய்யவும் முடியும்.

அதேநேரத்தில் வேறுபட்ட சமூகங்களின் கலை, கலாசாரம் ஆகியவற்றைக் கற்கும் குழுக்களுக்கு இடையில் பாரிய தொடர்பு ஏற்படுவதை ஊக்கப்படுத்தலாம். அத்துடன், விளையாட்டுக் குழுக்கள் மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளையும் ஏற்படுத்தலாம். எனினும், சமாதானச் செயற்பாடுகளில் தாம் ஈடுபட்டால் தனிப்பட்ட வகையிலும் வியாபாரத்திலும் பெரும் அபாயம் ஏற்படும் நிலைமை இருப்பதாக கிழக்கைத் தளமாகக் கொண்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தெற்கில் அதிகமாகக் காணப்படும் கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமை செயற்பாடுகள் வடக்கிலும் கிழக்கிலும் காணப்படவில்லை என அவர்கள் கருதுகின்றனர். இதற்குக் காரணம் இத்தகைய திட்டங்களை நடத்தும் அத்தகைய வர்த்தக முயற்சிகள் தமது பகுதிகளில் இருக்காததும் அத்துடன் இதனோடு இணைந்துள்ள அபாயமுமாகும்.

சமாதானச் செயற்பாடுகளில் அரசியல் கலக்கக்கூடாது எனவும் அது எப்போதும் சமூகத்தன்மை உடையதாக இருக்க வேண்டும் எனவும் தென்பகுதியில் உள்ள வர்த்தகர்களுக்கு இடையே அபிப்பிராயம் நிலவுகிறது. இலாப நோக்கானது சமாதானப்

பங்களிப்பைக் குறைவான தூய்மையுடையதாகவும் அதிக நிபந்தனை உடையதாகவும் மாற்றும். ஆகவே, தனிப்பட்ட அணுகுமுறையே சிறந்தது என்ற கருத்தை பலர் கொண்டுள்ளனர். பெரிய வர்த்தக முயற்சியாண்மைகளிடம் வளங்கள் இருப்பதாலும், அனைவரையும் சென்றடையக்கூடியதாக இருப்பதாலும் சமாதானத்தில் பங்களிப்புச் செய்யப் பொருத்தமான குழுக்களாக அவை அடையாளம் காணப்படுகின்றன.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மோதல் தவிர்ப்பு முன்னெடுப்புக்களில் வர்த்தக சமூகத்தை வழிநடத்திச் செல்வது யாரென்பதில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. வர்த்தகத்துறையில் உள்ள அதிகாரம் படைத்தோரால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டுமென கொழும்பைத் தளமாகக் கொண்ட பதிலாளிகள் கூறினர். அதேவேளை, இந்தத் தலைமைத்துவத்தை ஏற்க வர்த்தக சபையே சரியான தெரிவாகும் என வேறு சிலர் தெரிவித்தனர். பிரதான துறைகளான சேவை மற்றும் கைத்தொழில் துறைகள் நாட்டின் பொருளாதாரத்திற்குக் கணிசமான அளவு பங்களிப்பைச் செய்வதால், சமாதானச் செயற்பாடுகளில் பங்கெடுப்பவர்கள் மீது கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்தக்கூடியவையாக அவை உள்ளன. ஆகவே, இந்தத் துறைகள் இரண்டும் சமாதான முயற்சிகளில் தலைமை தாங்க வேண்டும் என வேறு சிலர் குறிப்பிடுகின்றனர். பல்தேசியக் கம்பனிகள் தமது சர்வதேச அனுபவங்களைப் பயன்படுத்த முடியும் என்பதால், அவையும் தலைமை தாங்குவதற்குச் சாத்தியமானவை எனக் குறிப்பிடப்படுகின்றன. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்க குறைந்த அளவு செல்வாக்குள்ள தனி நபர்களைப் பயன்படுத்துவது அதிக பயனளிக்குமென சிலர் ஆலோசனை தெரிவிக்கின்றனர். ஒருமைப்பாடு, சமாதானத்தில் நம்பிக்கை மற்றும் உறுதியான தலைமைத்துவம் கொண்ட எந்த நிறுவனமும் சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலையில் இருப்பதாக சில தகவலாளிகள் தெரிவிக்கின்றனர். குறித்த பிராந்தியங்களில் பலமிக்க வேறுபட்ட நிறுவனங்கள் ஐக்கியப்பட்டாலேயே நாடளாவிய ரீதியிலான முயற்சிகள் சாத்தியமாகும்.

சமாதானப் பங்களிப்புக்கு நேரமும் முயற்சியும் தேவைப்படுகிறது என்பது போதுமான ஆளணி வளத்தையும் மூலதன வளத்தையும் கொண்டிருக்கும் நிறுவனங்கள் மட்டுமே சமாதான முன்னெடுப்புகளுக்கு தலைமை தாங்கமுடியும் என்பதைப் புலப்படுத்துவதாக தெற்கைச் சேர்ந்த நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பரந்த வலைப்பின்னலைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் மட்டுமே தப்பாக புரிந்து கொள்ளப்படுவதை சமாளித்து நிற்கும் நிலையில் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உத்தேச தலைவர்கள் யார் என்பதை கிழக்கு வர்த்தகர்களும் அடையாளப்படுத்தி உள்ளனர். பெரிய தொழில் தருநர்கள், தேசிய சம்மேளனம் மற்றும் ஊடகங்கள் என்பவற்றை அதிகமாகக் குறிப்பிடுகிறார்கள்.

# 3. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்துறையின் முன்னெடுப்புக்கள்

மோதல் விவகாரங்களில் வர்த்தக சமூகத்தவர்களால் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகள், அபாயங்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றி ஆராய்ந்த நிலையில் அறிக்கையானது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் வர்த்தகத்துறை மேற்கொள்ளும் குறித்த இருவகை சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து விவரிக்க உள்ளது. அவற்றில் ஒன்று, கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் வர்த்தக முயற்சிகளை முன்னெடுக்கும் சமாதான ஆதரவு அமைப்பான ''ஸ்ரீலங்கா பெர்ஸ்ட்'' ஆகும். மற்றையது, பிராந்திய வர்த்தக சபைகளின் பங்களிப்புடன் நாடாளாவிய ரீதியில் வலைப்பின்னலை ஏற்படுத்தி நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ''பிஸ்னஸ் போ.ஃர் பீஸ் அலையன்ஸ்'' (சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகள்) ஆகும். அரசியல் மட்டத்தில் செல்வாக்குச் செலுத்த விரும்பும் பெரிய வர்த்தக முயற்சிகளாலும், அத்துடன், கொழும்பைத் தளமாகக் கொண்ட கொள்கைச் செயற்பாடுகளில் பிராந்திய குரலைப் பலப்படுத்துவதற்கு இனரீதியாக பிரிவுபட்டவர்களுக்கு உதவ விரும்பும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களாலும் வேறுபட்ட அணுகுமுறைகள் கைக்கொள்ளப்படுவதை உதாரணங்கள் தெளிவுபடுத்துகின்றன.

## 3.1 ஸ்ரீலங்கா பெர்ஸ்ட் (இலங்கை முதலில்)

மூன்று தசாப்த காலமாக நீடிக்கும் மோதல்களுக்கு மத்தியிலும் இலங்கை நீண்டகால உறுதியான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வந்துள்ளது. இதன் விளைவாக சமாதானச் செயற்பாட்டு முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என நிலையானதொரு அழுத்தத்திற்கு பெரிய வர்த்தக முயற்சிகள் உள்ளாகவில்லை. 2001 ஆம் ஆண்டில் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் மீது இடம்பெற்ற குண்டுத் தாக்குதலும், அதே வருடத்தில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியும் வன்முறைகளால் பிரதான வர்த்தகத்துறை அபாயத்திற்குள்ளாகும் நிலைமையை வெளிப்படுத்தியதை அடுத்து இந்தத் தன்மை மாற்றமுற்றது. இவ்விரண்டு நிகழ்வுகளினதும் ஒட்டுமொத்த தாக்கத்தால் பொருளாதாரத்தில் மொ.உ.உ வளர்ச்சி எதிர்மறையாக மாறியது. இந்த மாற்றமானது, போர் இடம்பெற்று வந்த இவ்வளவு காலத்தில் முதன்முறையாக நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மோதலின் பொருளாதார கிரயம் தெளிவாகத் தெரிய ஆரம்பித்ததால், ஏதாவது செய்ய வேண்டும் என்ற அழுத்தம் வர்த்தகத்துறை மீது அதிகரித்தது. முதல் தடவையாக, கொழும்பில் உள்ள கூட்டாண்மை நிறுவனத்தின் பிரதிநிதிகள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முன்னணியாக ஒன்று திரண்டார்கள். இந்த முயற்சிகளில் மிக முக்கியமானது ''ஸ்ரீலங்கா பெர்ஸ்ட்'' (SLF) ஆகும்.

ஆடைத் தயாரிப்பாளர்கள், தேயிலை, உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் சரக்கேற்றல் துறைகளில் உள்ள வர்த்தக சங்கங்கள் என்பவற்றால் SLF உருவாக்கப்பட்டது. இது, மோதலைத் தீர்ப்பதற்கும், பேச்சுவார்த்தை நடத்துவதற்குமான அழைப்புக்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாவது உயர் நிலையிலான ஒரு இயக்கமாகும். இலங்கையில் உள்ள பெரும் வர்த்தக முயற்சியாண்மைகள் அனைத்தும் அனேகமாக தலைநகர் கொழும்பில் நிலைகொண்டிருப்பதாயும் ஏற்றுமதிசார் வர்த்தகத்தில் மிகைத்திருப்பதாகவும் உள்ளன. கொழும்பு வர்த்தக சபை நாட்டிலுள்ள சுமார் 500 பெரிய நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்வதாக உள்ளது. இந்த நிறுவனங்கள் மொ.உ.உ இல் 40% பங்களிப்பைச் செய்கின்றன. SLF அமைப்பானது, 2001 ஆம் ஆண்டில் கொழும்பு வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் தோற்றம் பெற்றது. கொழும்பு வர்த்தக சபையானது, அரசாங்க மட்டத்தில் சில செல்வாக்கைக் கொண்டிருப்பதுடன் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கொடைகளை வழங்கும் கொடையாளிகளின் ஆதரவைத் திரட்டும் நிலையிலும் உள்ளது.

போரின் பொருளாதாரக் கிரயம் மற்றும் ''சமாதானத்தின் பங்கிலாபமான'' சமூக மற்றும் பொருளாதார நன்மைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளது விழிப்புணர்வு அதிகரிக்கப்படுவதை வலியுறுத்துவதாக SLF யின் பிரசார இயக்கம் அமைந்துள்ளது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை வர்த்தகங்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஆதரவு திரட்டும் சமாதானத்துக்கான பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள் பலவற்றை ஊடகத்துறையின் ஆதரவுடன் SLF முன்னெடுத்தது. ஆனால், மோதல் தீர்வுக்காக எத்தகைய அரசியல் நிலைப்பாட்டையும் மேற்கொள்வதில் இருந்து அது விலகி இருந்தது. அதன் முதல் முக்கியமான நோக்கு அனைத்துத் தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதாகும். பிரசாரம் நடத்தப்பட்ட வேளை முக்கியமானதாகும். அது 2001 டிசம்பரில் தேர்தல் நடைபெற இருந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. சமாதானத்தை ஆதரிக்கும் கட்சிகளையும் வேட்பாளர்களையும் ஆதரிப்பதற்கு வாக்காளர்களைத் தூண்டுவதற்கான விளம்பரங்களை சுவரொட்டிகள் மற்றும் பத்திரிகைகள் மூலம் செய்வதற்கு SLF அனுசரணை வழங்கியது. வர்த்தக முயற்சிகளின் தலைமையில் நடந்த ஆதரவளிப்பின் உதவியால் சமாதானத்தை ஆதரிக்கும் அரசாங்கம் பதவிக்கு வரும் நிலைமை ஏற்பட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை 2002 இல் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து SLF .ன் ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. அரசியல்வாதியின் கரங்களில் சமாதானச் செயற்பாடு விடப்பட்டது. ''போருமில்லை - சமாதானமும் இல்லை'' என்ற நிலைமையால் கடந்த சில வருடங்களில் ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டது. கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் வர்த்தக சமூகமானது தொடர்ச்சியாக செயற்பாட்டை மேற்கொள்வதற்கு அதிகம் தேவை இருப்பதாக உணரவில்லை. வர்த்தகத் தலைவர்களைக் கொண்ட குழுவினர் அரசியல் மட்டத்தில் மீண்டும் அழுத்தம் ஏற்படுத்தும் குழுவாகச் செயற்படுவதைத் தூண்டுவதற்காக அந்தத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கைக்கான தென்னாபிரிக்க வர்த்தக நிதியத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியை ''இன்டர்நெஷனல் அலார்ட்'' அமைப்பு அழைத்து வந்தது. இந்த விஜயமானது தென்னாபிரிக்க சமாதானச் செயற்பாடுகளுக்கு காரணமாக இருந்த நபர்களை சந்திப்பதற்காக SLF தென்னாபிரிக்கா செல்ல வேண்டும் என்ற கருத்தை ஏற்படுத்தியது. இந்த வகையில் SLF உம் ஏனைய 10 வர்த்தகத் தலைவர்களும் எவ்வாறு சமாதானச் செயற்பாடுகளை ஆதரிப்பார்கள் என்று அறிவதற்காக இவர்களுடன் இணைந்து பல தொடரான கூட்டு ஆய்வுகளுக்கு ''இன்டர்நெஷனல் அலார்ட்'' ஏற்பாடு செய்தது. இவற்றில் பங்கேற்றவர்கள் இரு பிரதான சவால்களை அடையாளம் கண்டனர்: சமாதானச் செயற்பாடுகளுக்கு அவர்கள் எவ்வாறு ஆதரவு தரமுடியும் என்பதைப் புரிந்து கொள்வது மற்றும் சமாதானத்திற்கு ஐக்கியப்பட்ட ஆதரவை எவ்வாறு காட்டுவது என்பனவே அவையாகும்.

தென்னாபிரிக்காவுக்கு 2004 மே மாதத்தில் விஜயம் செய்த பிரதிநிதிகள் குழுவில் அரசியல் செயற்பாட்டாளர்களும் செய்தியாளர்களும் இணைக்கப்பட்டிருந்தனர். செய்தியாளர்கள் பலமான ஆதரவைத் தருவதுடன் ஆலோசனை வழங்கும் பாத்திரத்தையும் வகிக்க முடியும் எனக் கருதப்பட்டது. தென்னாபிரிக்க சமாதானச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பல தலைவர்களை இக்குழு சந்தித்தது. தென்னாபிரிக்க அரசு தரப்பு சமரசப் பேச்சாளரான ரோல்ஃப் மேயர் மற்றும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பேச்சாளர் சிரில் ரமாபோசா மற்றும் ஆலோசனை வழங்கும் வர்த்தக இயக்கத்தின் தலைவர்களான தீனஸ் எலொஃப், கொலின் கோல்மென் உட்பட பல தலைவர்களையே இக்குழு சந்தித்தது. மேற்படி ஆலோசனை வழங்கும் வர்த்தக இயக்கம் சமாதானச் செயற்பாட்டிற்கு அவசியமான அரசியல்/அரசியலமைப்பு பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளித்தது. இந்தச் சந்திப்பானது மோதல் தீர்வில் தென்னாபிரிக்கா பெற்றிருக்கும் அனுபவத்தை மேலும் அறிந்துகொள்ளவும் இலங்கை சூழமைவில் இந்தக் கருத்துக்களை விருத்தி செய்யவும் வாய்ப்பு அளித்தது.

தென்னாபிரிக்க சமாதான செயற்பாடுகளுக்கு அங்குள்ள வர்த்தகத் தலைவர்கள் எவ்வாறு ஆதரவளித்தார்கள் என்பதை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பை இந்த விஜயம் வழங்கியதுடன், சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான கொள்கை மற்றும் திட்டங்களுக்கு அவர்கள் ஆதரவளிப்பதையும் ஊக்கப்படுத்துகிறது. முன்னர் மிக அபாயம் எனக் கருதப்பட்ட விடயங்களை கையாள்வதற்கான தன்னம்பிக்கையை இந்த விஜயம் இப்பிரதிநிதிகளுக்கு வழங்கியுள்ளதுடன்,

அவர்களுக்கு இடையில் விசுவாசத்தையும் ஏற்படுத்தி உள்ளது. ''(தென்னாபிரிக்காவில்) பெரும் பாடங்களைக் கற்றுக்கொண்டோம்.... கொழும்பில் அனைத்துப் பெரிய வர்த்தகர்களும் பிராந்தியம் குறித்து கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை திடீரென உணர்ந்து கொண்டார்கள். நடந்ததை மன்னித்து முன்னோக்கிச் செல்வதன் முக்கியத்துவத்தை நீங்கள் புறக்கணித்துவிட முடியாது. இது இலங்கைக்கு ஒரு பெரும் பாடம்'' என ஒரு பிரதிநிதி கூறினார். இக்குழுவினர் விஜயத்தை முடித்து திரும்பியதில் இருந்து ஐக்கியப்பட்டு இருந்ததுடன் வாராந்தம் சந்தித்துக் கொண்டனர். சமாதானச் செயற்பாட்டில் உள்ளடக்கப்படுவது அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. உறுதியான சமாதானச் செயற்பாட்டுக்கான பரந்த அரசியல் ஆதரவின் அவசியம் குறித்து தென்னாபிரிக்காவில் அவர்கள் கற்றுக்கொண்டார்கள்.

தமது தேவைகள் மற்றும் நிலைப்பாடுகளை நல்ல முறையில் புரிந்து கொள்ளச் செய்வதற்காக இக்குழுவினர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்தனர். இப்போது இவர்கள் ஏற்பாட்டாளர்களாகச் செயற்பட எண்ணுகிறார்கள். இதனால், திறத்தவர்கள் வழமையான சமாதானச் செயற்பாடுகள் மீதான வேறுபாடுகளை நல்லிணக்கத்துடன் தீர்ப்பதற்கு உழைக்க முடியும். இந்த விஜயமானது, வர்த்தகத் தலைவர்கள் எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்கு விஜயம் செய்தது உட்பட இலங்கையில் உள்ள பல்வேறு அரசியல் பங்காளிகளுடன் பல கலந்துரையாடல்களை மேற்கொள்ள வழிவகுத்தது. எனினும், அரசியல் தேக்க நிலையானது இருதரப்பும் உறுதியான பதிலைத்தர வழிவிடவில்லை. மோதலுக்கான மாற்றான ஒரு அக்கறை அல்லது அந்த மாற்றைத் தேடுவதற்கான அழுத்தம் இருந்தாலேயே அரசியல் தீர்வு வெற்றிடையும் என்பதைப் புலப்படுத்துவது போல் இத்தேக்க நிலை உள்ளது. இலங்கையில் இரு தரப்பினருமே சமாதானச் செயற்பாட்டிற்கான புதிய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதைவிட தமது உள் பிரச்சினைகளில் அதிக கவனம் செலத்தி வருகின்றனர்.

## 3.2 சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகள்

சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகள் (ச.மு.வ.மு) 2002 நவம்பரில் இன்டர்நெஷனல் அலார்ட் மற்றும் யூ.என்.டி.பி யின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. ச.மு.வ.மு ஆனது இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் 17 பிராந்திய வர்த்தக சபைகளினதும் மற்றும் இனத்துவ வர்த்தக சமூகங்களினதும் அங்கத்தவர்களைக் கொண்ட செயற்குழுவாகும். நல்லிணக்கம், இன ரீதியாக பிளவுபட்டவர்களிடையே வர்த்தக உறவை ஏற்படுத்தல் மற்றும் சமாதான செயற்பாட்டில் பிராந்தியங்களை உள்ளடக்குதல் என்பன அதன் நோக்கங்களாகும்.

தனிப்பட்ட சம்மேளனங்களுடன் நீண்ட ஆலோசனைகளை மேற்கொண்டமை, சரியான தனி நபர்களை அடையாளம் கண்டு கொண்டமை மற்றும் பங்குபற்றியவர்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியமை மூலம் இது தோற்றம் பெற்றுள்ளது. ''போர் நடைபெற்ற சமயத்தில் தெற்குடன் எமக்கு வர்த்தக ரீதியாகவோ, தனிப்பட்ட முறையாகவோ தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை'' என அவர்களின் முதலாவது கூட்டத்தின் போது ஒருவர் நினைவு கூர்ந்தார். வடக்கில் இருந்து வந்த அங்கத்தவர் ஒருவர் ''வடக்கு ஒருபுறம் இருக்கிறது, தெற்கு ஒருபுறம் இருக்கிறது. நாம் சந்தேகத்துடன் இருக்கிறோம். தேநீர் அருந்தும் போது சிறிய நட்பு இருக்கிறது. ஆனால், பகல் உணவை வேறு வேறாகவே உண்டோம். அந்த இரு நாட்களிலும் தெற்கில் இருந்து வந்த பலரைச் சந்தித்தோம். அதன் பிறகு விரைவில் நாம் நண்பர்களானோம். இது, உண்மையில் எமக்கு நல்லதொரு அனுபவமாக இருந்தது. முதன் முறையாக நாம் தெற்கைச் சேர்ந்தவர்களுடன் புழங்கினோம்''. ஆரம்ப தப்பெண்ணம் எவ்வாறு மெல்ல மெல்ல மறைந்து, பொதுத்தன்மை உருவாகியது என்பதை மற்றுமொரு அங்கத்தவர் விபரிக்கிறார். ''மற்றவர்களின் அனுபவங்களை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள காலம் எடுத்தது. அவர்கள் பயங்கரவாதிகள் என்ற உணர்வு எமக்கு இருந்தது. அவர்களது தோற்றம் எம்மைப் பயமுறுத்தியது. இந்த அழிவுகளுக்குக் காரணம் இந்த மக்கள்தான் என்ற கோப உணர்வு அப்போது இருந்தது.... ஆனால், பின்னர் ஒன்றாக அமர்ந்து கதைக்கலாம் என்பதைக் கண்டு கொண்டோம். சில வினாடிகளில் பொதுவான பிரச்சினைகள் இருப்பதை உணர்ந்து கொண்டோம்'' என்றார்.

சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகளின் அங்கத்தவர்கள் அவர்கள் செயற்படும் சமூகத்துக்கு மத்தியில் செல்வாக்கு உள்ளவர்களாகவும், அரசியல்வாதிகள், அதிகாரிகள், சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் தீர்மானத்தை மேற்கொள்பவர்கள் ஆகியவர்களை அணுகக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அடிமட்டத்தில் உள்ள மக்களையும், சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களையும் இணைக்கும் ஒரு வலைப்பின்னலாக இருக்கிறார்கள். அவர்கள் மோதலில் ஈடுபடும் தரப்பினர்களுடன் சமாந்தரமான தொடர்புகளையும் வைத்திருக்கிறார்கள்.

இன்டர்நெஷனல் அலார்ட், மற்றும் UNDP ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிரமமாக இரு மாதத்திற்கு ஒருமுறை கூட்டங்கள் நடைபெற்றதுடன், இலங்கையில் ஒவ்வொருவரினதும் சபைகளுக்கு இடையேயான விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டதானது, உறுதியான தோழமை உணர்வை ஏற்படுத்தியது. இதுவொரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும். கூட்டுமுயற்சி மற்றும் பிராந்தியங்களுக்கான தொழில்நுட்ப பரிமாற்றத்திட்டங்கள் என்பன பற்றிய கருத்தோட்டம் புதிய உறவுக் கட்டமைப்பு கொழும்பின் தலையீடு இன்றி வடக்கு மற்றும் தெற்கில் உள்ள வர்த்தகங்களால் பேணி வளர்க்கப்படுவதைக் குறித்துக் காட்டுகிறது.

ச.மு.வ.மு வானது நாட்டின் வேறுபட்ட பல பாகங்களிலும் பன்னிரெண்டு தடவைகள் கூடியுள்ளது. அத்துடன், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் தனியார்துறையின் அக்கறைகள் ஒன்றுசேர்க்கப்பட்ட தொடர் திட்டங்களை ஆரம்பித்தது.

- யாழ்ப்பாண வர்த்தக சபையும் நாட்டிலுள்ள ஏனைய சபைகளும் பரஸ்பர வர்த்தக விஜயங்களை மேற்கொண்டன. பிராந்தியத்திற்கு இடையேயான பொருளாதாரச் செயற்பாடு அத்துடன் சமூகம் மற்றும் தனி நபர்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஆகியவற்றை உருவாக்குவதை இந்த விஜயங்கள் நோக்காகக் கொண்டிருந்தன.

- ச.மு.வ.மு அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கிய நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்புக்களைப் பிரதி செய்வதாக இந்த சமாதான விடயங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு வியாபார மற்றும் சமாதான விஜயங்களை மேற்கொள்ள விரும்பும் பிராந்திய சபைகளின் அங்கத்தவர்களின் ஒருங்கிணைப்பாளராக ச.மு.வ.மு செயற்படுகிறது. முதலீட்டாளர்கள், விநியோகத்தர்கள் ஆகியோரின் துறைசார் பொருத்தங்களை தேடுதல் போன்ற வர்த்தக பரிமாணத்தை உள்ளடக்கியதாக இந்த விஜயங்கள் எப்போதும் அமைந்துள்ளன. அதேவேளை புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் அவை ஊக்குவிக்கின்றன.

- தொடர்பாடல் மற்றும் வெளிப்படுத்தும் தொழில்திறன், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் கூ.ச.பொ ஆகிய தலைப்புக்களில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

- பிராந்திய வர்த்தக விபரக்கொத்தைத் தயாரிப்பதில் ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொண்டமை. இந்த விபரக்கொத்து ச.மு.வ.மு வால் 2004 இல் விநியோகம் செய்யப்பட்டது. கொ.வ.ச, வர்த்தக மற்றும் இலங்கை கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவற்றுடன் சேர்ந்து இது நடத்தப்பட்டது.

- வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளூர் பேச்சுவார்த்தைகளுக்கான ஒருங்கிணைப்பாளராகச் செயற்படல். இப்பேச்சுவார்த்தை இரு பிராந்தியங்களினதும் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியை அடையாளம் காணும் முயற்சியாகும்.

- பிராந்தியங்களுக்கு இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டுச் சந்தை, சமாதானத்தை ஊக்குவிப்பதுடன் கலாசார மற்றும் உணவு, இசை என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளும் ''சமாதானப் பாலம்'' அமைத்தல்

- சுனாமியை அடுத்து உள்ளூர் மக்களை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சந்திக்கவும், மக்களின் தேவைகளைப் புனர்நிர்மாணம் மற்றும் திட்டமிடலுக்குப் பொறுப்பானவர்களிடம் தெரிவிக்கவும் ச.மு.வ.மு அங்கத்தவர்கள் ஆதரவு அளித்து வருகின்றனர்.

கொள்கை வகுப்பாளர்கள் குறிப்பாக பொருளாதார அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது அதிக செல்வாக்குச் செலுத்துவதற்குக் குரல் கொடுப்பவர்களாக மாற வர்த்தக சமூக அங்கத்தவர்கள் முடிவு செய்துள்ளனர். இந்தச் செயற்பாட்டில் ச.மு.வ.மு ஏற்கனவே சில வெற்றிகளை அடைந்துள்ளது. உதாரணமாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வங்கியை அரசாங்கம் ஆரம்பிக்க இக்குழு வெற்றிகரமாக அரசாங்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கான வங்கிக் கிளைகள் இப்போது காலி, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளன. மேலும், யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியில் மீன்பிடிக்கான மேலதிக வழி திறக்கப்படுவதற்கு அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் மீது ச.மு.வ.மு வெற்றிகரமாக செல்வாக்குச் செலுத்தியது. யாழ்ப்பாணத்துக்கான A9 பாதை பகல் வேளையில் மட்டுமன்றி 24 மணி நேரம் திறந்திருக்கும் விடயத்திலும் அது செல்வாக்குச் செலுத்தியது. எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டில் உள்ள இந்தப் பாதையானது வடக்குக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் தரை மார்க்கமான இணைப்பைக் கொண்டிருக்கும் ஒரேயொரு தரைவழிப்பாதையும் வடக்குக்கான பிரதான விநியோகப் பாதையுமாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் நிவாரணப்பணிகள் மற்றும் புனருத்தாபனப் பணிகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்த மாவட்ட மட்டத்தில் துரித செயற்பாடுகள் அரசால் அமைக்கப்பட்டன. இந்தத் துரித செயற்பாட்டில் காத்திரமான பங்களிப்பை வழங்குவதற்காக தனது பிரதிநிதிகளும் அழைக்கப்பட வேண்டும் என ச.மு.வ.மு (கொழும்பில் உள்ள பங்காளி வலைப்பின்னலாக ஸ்ரீலங்கா பேர்ஸ்ட் மூலம்) ஆதரவு திரட்டியது.

வெறுமனே ''வியாபாரத்தை நடத்துவது'' என்ற நிலைக்கு முன்னணி மாறிவிடலாம் என்ற அபாயம் உட்பட ச.மு.வ.மு பல அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. பிராந்தியங்களுக்கு இடையிலான வர்த்தகத் தொடர்புகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பது தொடர்பில் சாதகமானதாக இருப்பினும், தீர்மானிக்கப்பட்ட காலம் மற்றும் நிதிச்சுமைகள் என்பவற்றைப் பொறுத்தவரையில் சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சிகளின் அங்கத்தவர் பார்வையில் முன்னணியின் செயற்பாடுகளை போதுமான அளவில் நியாயப்படுத்துவதாக அமையாது. ச.மு.வ.மு ஆனது தான் பெற்ற ஆணையை சபைகள் அல்லது உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற ஏனைய சங்கங்களிடம் இருந்து வேறுபிரித்து அறியக்கூடிய விதத்தில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்க வேண்டும். இதனால் போட்டிக்குணம் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

பொருளாதார வாய்ப்புக்கள் தென்னிலங்கையில் உள்ள நிறுவனங்களுக்கே சிறப்புரிமை அளிக்கிறது, தமக்கு அல்ல என வடக்கில் பரந்த அளவில் நிலவும் அபிப்பிராயம் பற்றி முன்னணி கூருணர்வுடன் செயற்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். ''வெளியிடங்களில் உள்ளவர்களுக்கான சந்தை'' என்ற வடக்கின் அபிப்பிராயம் குறித்து உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். ச.மு.வ.மு வினால் அல்லது அதன் ஊடாக திட்டமிடப்படும் ஏதேனும் கூட்டு முயற்சிகளின் போது உள்ளூர்வாசிகளின் அத்தகைய அபிப்பிராயங்களை மறுதலிக்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். இதற்கு ச.மு.வ.மு மிகவும் காத்திரமான ஊடக தந்திரோபாயத்தை இணைத்துக்கொள்வது அவசியமாகும். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு என்பவற்றுக்கு இடையேயான வர்த்தகத் தொடர்புகளில் நிலவும் இத்தகைய ஆதிக்கம் பற்றிய அச்சத்தைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிக அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைமைத்துவத்தை முன்னையது கோருகிறது.

தொய்வான ஏற்பாடாக இருந்து வந்த விடயங்களை முன்னணி தற்போது நிறுவன மயப்படுத்தி வருகிறது. ச.மு.வ.மு வை ஒரு சட்டரீதியான ஸ்தாபனமாகப் பதிவு செய்ததுடன், உறுதியான சமாதனத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபட வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சித்திட்ட தொடர்பிலான நிதியளிப்புக்கு விண்ணப்பித்துள்ளதையும் இது உள்ளடக்கியதாகும். கொழும்புக்கு வெளியே உள்ள சிவில் சமூக கட்டமைப்பு பலவீனமாக உள்ள நிலையில் இது உள்ளூர் மட்டத்தில் நன்கு வேரோடிய வழைமைக்கு மாறான நவீனத்துவம் உள்ள குழுவாக இருக்கிறது. அதன் பலமானது குறிப்பிட்ட திட்டங்களை அமுல்படுத்துவதைவிட வலைப்பின்னல் மற்றும் உறவுகளை வளர்க்கும் தகைமைகளில் தங்கியுள்ளது. அத்துடன் இதன் அங்கத்தவர்கள் சிவில் சமூகத்தில் செயற்படுவதால் சமாதானப் பங்களிப்புக்கான மேலதிக வாய்ப்புக்களை ஆராய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது.

# 4. முடிவுகள்

2001 இல் கொழும்பு சர்வதேச விமான நிலையம் தாக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து, கூ.ச.பொ மற்றும் ஏனைய சமாதானப் பங்களிப்புப் பணிகள் குறித்து வர்த்தக சமூகத்தவர்களிடையே நிலையான பேச்சுக்கள் அதிகரித்தது. இதன் விளைவாக விவாதத்தில் கூ.ச.பொ திட்டங்களுக்கான அதிகளவு பரந்துபட்ட ஈடுபாடு மற்றும் மோதல் தொடர்பான தமது விசனத்தை, பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வர்த்தகத்துறையின் உரிமை மற்றும் பொறுப்பு என்பவற்றில் ஆரம்ப வெற்றிகள் சில கிடைத்தன. இந்த வகையில், மோதலைத் தடுப்பதற்காக ஸ்ரீ லங்கா பெர்ஸ்ட், சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை மற்றும் பல்வேறு தனிப்பட்ட முகவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுவது அவசியமாகும். எனினும், வர்த்தகச் செயற்பாட்டாளர்கள் பல்வேறு சவால்களுக்குத் தொடர்ந்து முகம் கொடுத்து வருவது பேட்டிகள் மூலம் புலனாகிறது. இந்தச் சவால்களை சமாதானம், அரசியல் மற்றும் கலாசார சூழ்நிலையைக் கட்டியெழுப்புவதில் ஈடுபடுவதற்கான வர்த்தகத்துறையின் தகைமைகளாக பரந்துபட்ட விதத்தில் வகைப்படுத்த முடியும்.

## 4.1 வர்த்தகத்துறையின் தகைமைகள்

### 4.1.1 கூ.ச.பொ மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சமூக ரீதியாக அறிவுறுத்தும் அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்தல்

சமூக சமத்துவமின்மை விடயத்தில் இலங்கையில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் பங்களிப்புத் தேவைப்படும் நிலையிலும் இந்தச் சமத்துவமின்மையை ஒரு கட்டமைப்புப் பிரச்சினையாக அவை கருதுவதாகத் தோன்றவில்லை. இந்த நிலைமைகளை அவை கொடையளிக்கும் தன்மையுடன் அணுக முயற்சிக்கின்றன. சமூகங்களைவிட தனிமனிதர்களுக்கு உதவுதல், அல்லது கட்டமைப்புக்களைவிட சமூகங்களுக்கு உதவும் வகையில் செயற்படுகின்றன. வேறு இடங்களில் இடம்பெறும் பரந்தளவிலான சமாதான வாய்ப்புக்களை முழுமையாக்குவதாக அமைந்துள்ளது. ஆனால் சிறிது சிறிதான அல்லது துண்டு துண்டான முறையில் அவை இவற்றைச் செய்கின்றன. இந்த வகையில் சமாதானத்தில் வர்த்தக முயற்சிகளின் பங்களிப்பானது மோதலுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை முறையாகப் புரிந்து கொண்டதன் மூலமோ அல்லது மோதல் வாய்ப்பை விஞ்சுவதற்கான மூலோபாய முயற்சியைக் கொண்டிருப்பதன் மூலமோ தோற்றம் பெறவில்லை. மோதலைத் தூண்டுவதற்கான முதன்மைக் காரணிகளான பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை என்பவற்றைக் கட்டமைப்புக் காரணங்களாக அனேகமான வர்த்தகங்கள் கருதும் நிலையில் இது ஆச்சரியம் அளிக்கக் கூடிய விடயமாகும்

இதை மனதிற்கொண்டு பின்வரும் விடயங்கள் சிபார்சு செய்யப்படுகின்றன:

- பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட சமூகத்தில் பாகுபாடு, சமத்துவமின்மை மற்றும் அதிகார ஆற்றல் என்பனவற்றின் கட்டமைப்புத் தன்மை குறித்து கூட்டாண்மைத் துறைக்குத் தகவல்களை வழங்குதல்/அறிவூட்டுதல். இவ்வாறான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் வர்த்தகத்துறைக்கு இடையில் அதிக தொடர்புகளை உருவாக்குதல்.

- சமூக மற்றும் அரசியல் நிறுவனங்களுக்கு தந்திரோபாயம் மற்றும் நிலைபேண் தன்மை ஆகிய விடயங்களில் உதவியளிக்க வர்த்தக முயற்சிகளை ஊக்குவித்தல். தனிப்பட்டவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சமூகங்கள்/கிராமங்கள் போன்றவற்றுக்கு உதவுவதைவிட அவையும் அவை வழங்கும் சேவைகளையும் பண்பு ரீதியாக மாற்ற இது உதவும். கூ.ச.பொ பற்றிய புதுமையான, பரந்த கருத்தோட்டத்தை வர்த்தக முயற்சிகளுக்கு வழங்குதல்; எதிர்பார்க்கப்படும் சமூக விளைவுகளை அடைந்து கொள்வதற்குப் பொருத்தமான நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கு உதவுதல்; இந்தப் பங்களிப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குதல் மூலம் அடைந்து கொள்ளலாம்.

- இதனை மோதல் விவகாரங்கள் மீதான தகவல்களின் மூலங்கள் மற்றும் உள்ளூர் மட்டத்தில் நிலவும் மோதல் வாய்ப்புக்கள், மற்றும் முன்னெச்சரிக்கைப் பொறிமுறையை அமைப்பதற்கு ஆதரவளித்தல் ஆகிய விடயங்களில் உள்ளூர் வர்த்தகங்கள் வகிக்கக் கூடிய பங்கு பற்றிய விழிப்புணர்வை வளப்படுத்துதல்.

## 4.1.2 கூட்டாண்மை நிறுவனங்களின் கூட்டுச் செயற்பாட்டைப் பலப்படுத்தல்

வர்த்தக சமூகத்தின் அக்கறையைப் பெருக்கக் கூடிய சமூக விடயங்களில் கூட்டான தந்திரோபாய நடவடிக்கை/பிரசாரத்தின் மேன்மை மற்றும் தகைமை குறைந்த அளவில் அமுல்படுத்தப்படுவதை ஆய்வு வெளிப்படுத்துகிறது. மாறுபட்ட தன்மையுள்ள ஒப்பீட்டளவில் இளம் வர்த்தகத் துறையானது, கொள்கை மாற்றத்துக்கான பிரசாரத்தைச் செய்வதில் அனுபவமற்று இருப்பதுடன், வினைத்திறன் மிக்க பிரசாரத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் பொறிமுறைகளில் குறைபாடுள்ளதாக இருக்கிறது. வர்த்தகங்களின் போட்டியிடும் தன்மையானது பிரிவுகளைக் கடந்து செல்லவும், ஒருமைப்பாட்டை வளர்க்கவும், பொதுவான அடித்தளத்தை இடவும் முடியாத நிலைமை ஏற்பட உதவியுள்ளது. இதன் தவிர்க்க முடியாத விளைவு வர்த்தகக் குழுக்கள் பலவீனமுற்றதுடன் தனிமைப்பட்டுப் போவதுமாகும். வர்த்தக முயற்சிகள் மூலம் மாற்றமடையும் மோதலானது ஆரம்ப அபாயங்களையும் உள்ளடக்கி உள்ளது. உத்தேச சமஷ்டி முறைமை போன்ற சர்ச்சைக்குரிய அரசியல் விடயங்கள் மீதான பொதுவான நோக்கைக் கொண்டதாக ஒற்றையாக ஐக்கியப்பட்ட வர்த்தக சமூகம் தோற்றம் பெற்றுள்ளது. எல்.ரி.ரி.ஈ இடைக்கால நிர்வாகம் குறித்து பேச அழைப்பு விடுத்துள்ளது. வர்த்தக சமூகத்தினர் மத்தியில் கருத்து ஒருமைப்பாடு ஏற்படுவதை அவசிய நோக்காகக் கொள்ளாது, பல்வேறுபட்ட பார்வைகளையும் அதன் அடிப்படைகளையும் பொதுவாகப் புரிந்து கொள்வதை ஊக்குவிப்பது அவசியமானதாகும். சிக்கலான விடயங்களைக் கையாளும் போது, வேறுபட்ட அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை மோதல் நிலைமாற்றம் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்படுவதற்கான பொறிமுறை கட்டியெழுப்பப்படுவதையும் உள்ளடக்கியதாக இது இருக்கிறது.

வர்த்தக சமூகத்தினர் மத்தியில் கூட்டுச் செயற்பாட்டுக்கான தகைமைகளைக் கட்டியெழுப்ப பின்வரும் சிபார்சுகள் முன்வைக்கப்படுகின்றன:

- பொதுவான சமூக விசனங்களை அடையாளம் கண்டு அதனைத் தீர்ப்பதற்கான மூலோபாயத் திட்டங்களை வர்த்தக அமைப்புக்களும் வலைப்பின்னல்களும் குறிப்பாக கொழும்பில் உள்ள பெரிய வர்த்தக முயற்சிகள் ஊக்கப்படுத்த வேண்டும். அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான திட்ட வழிமுறைகள் இதற்கு உதவலாம்.

- வர்த்தக முயற்சிகள் தாக்க மதிப்பீட்டுத் தகைமைகளை வளர்த்துக்கொள்வதை ஊக்குவித்தல். இதன்மூலம் வர்த்தக முயற்சிகளின் பங்களிப்பால் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பிட முடியும்.

- கூட்டுச் செயற்பாடுகள் மற்றும் பொது அபிப்பிராயத்தை மேம்படுத்துவதற்காக வர்த்தக முயற்சிகள் தமது வர்த்தக வலைப்பின்னலுக்கு அப்பால் சென்று செயல்படவும், சமூக உணர்வுள்ள குழுக்களுடன் அவை தொடர்புகளைப் பேணுவதற்கும் ஆதரவளித்தல். வேறுபட்ட அபிப்பிராயங்கள், அதிகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் ஆற்றல்களை வளர்த்தல் முதலியனவும் தனியாகப் பிரித்துப் பார்க்கப்படும் மற்றும் திரித்துக்கூறப்படும் அபாயத்தைத் தடுத்தல் என்பவற்றையும் இது கொண்டிருக்கும்.

- தமது விடயப்பொருள்கள் குறித்து அறிந்திருக்கும் மற்றும் வர்த்தக முயற்சிகள் அக்கறை கொள்ளும் அதே காரணங்களுக்காக பாடுபடும் தொழில்சார் குழுக்களுடன் சிறந்த தொடர்புகளைக் கொண்டிருத்தல். உதாரணமாக, ஆதரவு திரட்டும் குழுக்கள், பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிலையங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றன. இவை அரசியல் ரீதியாக நடுநிலையற்ற குழுக்களாக இருக்கலாம். ஆனால், பொது விடயங்களில் ஒருமைப்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் வர்த்தக முயற்சிகள் இத்தகையவர்களுக்கு உதவ முடியும். இவர்கள் மறுதலையாக வர்த்தக முயற்சிகளுக்கும் உதவ முடியும்.

- கூட்டாண்மையின் கூட்டுச் செயற்பாடு டெதாடர்பான வழிகாட்டுதல்களை அபிவிருத்தி செய்தல். உதாரணமாக, மூலோபாய செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் வெற்றிகரமான முயற்சிகளை ஆவணப்படுத்தல்.

## 4.1.3 ஒருவரின் நிறுவனத்துள் உள்ள சமாதான வாய்ப்பு வளத்தை அறிந்து கொள்ளுதல்

தொழில்சார் அபிவிருத்தி மற்றும் நெருக்கடி உதவி தொடர்பில் தமது ஊழியர்களைப் பயிற்றுவிப்பதில் கூ.ச.பொ வை செயற்படுத்தும் பல வர்த்தக முயற்சிகள், ஊழியர்கள் சமூக ரீதியாகப் பல்வேறு பிரிவாகவும், புவியியல் ரீதியாக பரந்து வாழ்பவர்களாக இருப்பினும், சிலரே தமது சொந்த நிறுவனத்தில் சமாதான கலாசாரத்தை மேம்படுத்தும் வாய்ப்பு வளம் குறித்து அறிந்தவர்களாக உள்ளனர். வர்த்த முயற்சிகள் தொழில் தருநர்கள் என்ற வகையில் சனத்தொகையில் கணிசமான பங்கினரை அணுகமுடியும் என்ற நிலைமையைப் பயன்படுத்திக் கொள்வதில் இருந்தும் தவிர்ந்து இருக்கின்றன. அலுவலக வளவிலும் அல்லது தொழில் நிலையங்களிலும் இந்தக் கலாசாரம் மேம்படுத்தப்பட்டால், அது பல் கலாசார சமூகத்துக்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பதாக அமையும். இது வேலையில் கணிசமான அளவு நேரத்தைச் செலவு செய்பவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதாக அமையும்.

நிறுவனங்களில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை உறுதி செய்ய பின்வரும் செயற்பாடுகள் சிபார்சு செய்யப்படுகின்றன.

- சமூக - கலாசார தொடர்புகளையும், பரிமாற்றங்களையும் முடிந்தவரை ஊக்குவித்தல். உதாரணமாக, இன, மத, சமூக வேறுபாடுகள் ரீதியாக பிரித்து வைப்பதைவிட பல்லினத்தன்மையைப் போற்றும் வகையில் பண்டிகை நாட்கள், தொழிற்சாலை ஏற்பாடுகள், விடுதி வசதி மற்றும் சிற்றுண்டிச்சாலை வாய்ப்புக்களைப் பயன்படுத்தல்.

- அலுவலக நடத்தை மற்றும் மனப்பாங்கு தொடர்பாக அறிவுறுத்தும் நடத்தைக் கோவையை உருவாக்குதல். சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அலுவலக நடத்தைக்காக பொதுவான குறைந்தபட்ச நியமங்களை நிறுவனங்களின் குழுமங்கள் ஏற்படுத்துவது, பெரும் பலனளிக்கும். பொதுவாக நடத்தைக் கோவைகள் ஊழியர்கள் எதனைச் செய்யக்கூடாது என கூறுகின்றன. (உதாரணம், பாலியல் ரீதியான பகிடிகள்) ஆனால், புறத்தூண்டுதலுக்குரிய அதிகார சக்தி மற்றும் ஏனைய கலாசார மற்றும் சமூகங்கள் மீதான அக்கறை போன்ற சமூக ரீதியான ஆக்கபூர்வ நடத்தை தொடர்பில் இக்கோவைகள் மக்களை வழிநடத்த முடியும்.

- சமூக ரீதியாக அறிவூட்டப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல். இனரீதியான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு உடன்பாடான நடவடிக்கை அணுகுமுறையைக் கைக்கொள்ள வர்த்தக முயற்சிகள் தயங்கினாலும், தனிப்பட்ட செயல்திறன் மதிப்பீடு மற்றும் அதிகப் பொருத்தமான நபர்கள் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான வேறு வழிமுறைகளை இணைத்துக் கொள்வதற்காக மரபு ரீதியான தகைமை நியமங்களுக்கு அப்பால் செல்வது சாத்தியமாகலாம். இலங்கையில் தரமான கல்வியைப் பெறுவதற்கான சமத்துவ வாய்ப்பு குறைவாகவே இருப்பதையும் கவனத்தில் எடுத்து இவ்வாறு செயற்படலாம்.

- மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளைச் சிறப்பாகப் பயன்படுத்தல். பல்லின சமூகம் பற்றிய பொது உணர்வு நிலையைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் வழிமுறைகளாவன: இலங்கையின் மாறுபட்ட தன்மை பற்றிய தோற்றத்தை மூன்று மொழிகளிலும் விளம்பரம் செய்தல்; ஊடக பிரசாரங்களில் கிராமிய, இன அல்லது மதக்குழுக்களை ஒரே விதமாகக் (Stereotypical) குறிப்பிடுவதைத் தவிர்த்தல்; சிறுபான்மை இனக் குழுக்கள் அல்லது புவியியல் ரீதியாக தூரமான மக்களின் யதார்த்தநிலை மற்றும் தேவைகள் பற்றிய கூருணர்வை உறுதி செய்தல்.

## 4.1.4 சமாதான சொல்ஜாலத்துக்கு அப்பால் செல்லல்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஈடுபாடானது, வர்த்தக முயற்சிகள் சமாதானத்துக்கான ஆதரவைத் திரட்டுவதைவிட அதிகமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதைத் தேவைப்படுத்துகிறது. அதிக அளவில் உறுதியான செயற்பாடுகள் தேவைப்படலாம். அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கூருணர்வு மிக்கனவாகத்

தோற்றமளிப்பதையிட்டு வர்த்தக முயற்சிகள் தயக்கம் காட்டுகின்றன. காத்திரமாகச் செயற்படாவிட்டால், கட்டமைப்பு நோக்கமற்றதாக கூ.ச.பொ திட்டங்கள் இருக்கத் தேவையில்லை எனவும் கொடைப் பண்புள்ளதாக "மட்டும்" அவை இருத்தல் போதும் எனவும் சிலர் கூறுகின்றனர். எந்தவொரு சமூகத்திலும் உள்ள அரசியல் சக்திகளின் உள்ளார்ந்த அரசியல் தன்மையைக் கருத்தில் எடுக்கையில், இலங்கை போன்ற அதிக அளவில் அரசியல் மயப்படுத்தப்பட்ட மற்றும் வன்முறைமிக்க நாட்டில் எவ்வித அபாயமும் இன்றி எவ்வாறு இதனைச் செய்யலாம் என எண்ணுவது சிரமமாகும். இலக்கு வைக்கப்பட்ட ஒரு குழுவுக்கு அல்லது தனிப்பட்டவர்களுக்குப் பங்களிப்புச் செய்தல் அல்லது அவர்கள் சார்பில் தலையிடுதல் என்பது "ஏனையவர்கள் கைவிடப்பட்டார்கள்" என்பதைக் குறிப்பிடுவதுடன், திரித்துக் கூறப்படலாம். ஆனால், பெரிய மாற்றத்தை அடைய வேண்டுமானால், இதுவொரு அவசியமான அபாயமாக இருக்கும்.

இந்தச் சூழலமைவில் பின்வரும் சிபார்சுகள் செய்யப்படுகின்றன:

- அனைத்து கூ.ச.பொ செயற்பாடுகளுக்கும் அரசியல் பரிமாணங்கள் இருப்பதை அனைத்து கூட்டாண்மை நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தல்.
- மோதலால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் மீண்டும் வர்த்தக முயற்சிகள் கொண்டுவரப்படுவதற்கான வாய்ப்புக்களைத் தேடுதல், நிலவக்கூடிய பாதுகாப்பு அபாயங்களைக் கருத்தில் எடுக்கையில், குறைந்த அபாயமுள்ள தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை விவசாய மற்றும் மீன்பிடி போன்ற பிராந்திய வர்த்தகங்களில் ஏற்படுத்துவதற்கான கூட்டுமுயற்சி மற்றும் ஆதரவினை வழங்குவதுடன், சிறப்பான நிதியளிப்பு வாய்ப்புக்களை அளிப்பதன் மூலம் இதனை ஆரம்பத்தில் எய்தலாம்.
- மோதல் நடைபெறும் பிராந்தியங்களில் செயற்படும் வர்த்தக முயற்சிகளுக்கு தற்போது அங்கு நிலவும் அபாயங்களை அடையாளம் காணல். அந்தப் பிராந்தியங்களில் ஒப்பீட்டளவில் பாதுகாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள் கட்சி அரசியலுடன் சம்பந்தப்படாத ஆனால், அனைவருக்குமான சமுதாய நிதியை அடைந்து கொள்வதற்கான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதற்கான வழிகளை ஆராய்தல்.
- கணக்கியல் நிலையங்கள் போன்ற பிராந்திய விசேடத்துவத் தகைமைகளை அபிவிருத்தி செய்தல். அங்கு பிராந்தியத்தில் உள்ள மக்களும் முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்கள் மூலம் பலனடைவர்.

## 4.2 அரசியல் சூழ்நிலையும் கலாசாரமும்

### 4.2.1 அரசியல் ஸ்திரமின்மையைப் போக்குதல்

மோதலின் மிக முக்கியமான கூறு இலங்கையில் அரசியல் ஸ்திரமின்மை நிலவி வருவதாகும். அனேகமான வர்த்தக முயற்சிகளும் பொதுமக்களும் இதுகுறித்து வருந்தினாலும், அரசியல் ஸ்திரமின்மை ஏற்படுவதற்கான காரணத்தை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து புரிந்துகொள்ளச் சிலரே நாட்டம் கொள்கிறார்கள். தமது வர்த்தக விஸ்தரிப்பு மீது நேரடி தாக்கத்தை அது கொண்டிருப்பினும், நீண்டகால பொருளாதார திட்டமிடல் நிகழ்ச்சி நிரலைக் கோருவதற்கு அல்லது தனியார்துறை தொடர்பாக ஏற்பட்டுள்ள எதிர்மறை கருத்தை அழிப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுவதற்கு தைரியமற்றவையாக கூட்டாண்மை நிறுவனங்கள் உள்ளன. சிபார்சுகள் வருமாறு:

- கொள்கையற்ற வர்த்தக நடைமுறைகள் குறித்த பொதுமக்கள் விசனத்தைப் போக்கல். கூட்டாண்மை நிர்வாக விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டல், அதிக வெளிப்படைத்தன்மை மிக்க விலையிடல் பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கும் கூட்டாண்மைத் துறைக்கும் இடையில் அதிக இடைவெளியை ஏற்படுத்துதல் என்பவற்றை வர்த்தக முயற்சிகள் செய்ய முடியும்.

- கொள்கை வகுப்பில் தனியார் துறைக்கு பங்குகோரும், அத்துடன் வர்த்தக வளர்ச்சி மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பில் ஒத்திசைவான மற்றும் நிலைமாறாத கொள்கைக்கான அழைப்புவிடும் எதிர்பார்ப்புடன் அனைத்து அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடல்.

- மோதலால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் மற்றும் வளர்ச்சிக்கான வரையறைகள் குறித்து மக்களுக்கு அறிவூட்டல். சமூக நன்மைக்காக இதனைச் சுட்டிக்காட்டலாம்.

- பதற்றம் அதிகமாக உள்ள பிராந்தியங்களிலும் சட்டம், ஒழுங்கு மோசமாகச் சீர்குலைந்துள்ள பகுதிகளிலும் இச்செயற்பாடுகளை மேற்கொள்வது அதிக சிரமமானது என்பதை அடையாளம் கண்டு கொள்ளல்.

## 4.2.2 அனைத்தையும் அரசியல் மயப்படுத்தல்

இலங்கையில் அனைத்து விடயங்களும் செயற்பாடுகளும் அரசியல் மயப்படுத்தப்படுவது அதிகரித்து வருவதை வர்த்தக முயற்சிகள் ஏற்றுக்கொள்கின்றன. இது நீதி மற்றும் சமத்துவத்தை ஆதரிக்கின்ற, சகியாத்தன்மை மற்றும் தீவிரவாதச் சக்திகளுக்கு எதிராகப் போராடச் செய்யும் சமூக உணர்வுள்ள குழுக்களின் செயல்பரப்பைத் தவிர்க்க முடியாத வகையில் கட்டுப்படுத்தும். இந்த விடயம் வர்த்தக முயற்சிகளை நேரடியாகப் பாதித்த போதும், இதனைத் தீர்க்க அவை விருப்பமின்றி காணப்படுகின்றன. இந்த விடயங்களை நேரடியாகக் கையாளாமல், அதன் அடிப்படைக் காரணிகளையும் அதற்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளையும் தீர்ப்பது சாத்தியமானதாக இருக்கும்.

தற்போதைய அரசியல் மயப்படுத்தும் போக்கை அகற்றுவதற்கு பின்வருவன உதவலாம்:

- ஊடகவியலாளர்களுக்கான பொருத்தமான பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்ய உதவுதல். அத்துடன், நெறிமுறை வாய்ந்த ஊடகவியலை அறிமுகம் செய்தல்/ஊக்குவித்தல்.

- பரபரப்பு ஊட்டாத அத்துடன் நடுநிலை பேணுகின்ற வகையிலான அறிக்கையில் நியமங்களை ஊடகங்கள் பேணுவதற்கு வர்த்தக முயற்சிகள் தனது சக்திகளைப் பாவித்து அழுத்தம் தரல்.

- சிறப்பான ஆட்சிமுறை குறித்து மக்களுக்கு அறிவூட்டல்.

- அரசியல் முதிர்ச்சியுற்ற மக்களுக்கு அறிவூட்ட பகிரங்க தகவல் திரட்டுக்களை அபிவிருத்தி செய்தல். கொள்கையற்ற அரசியல்வாதிகளின் குறுகியகால நிகழ்ச்சி நிரலைத் தவிர்க்க இதன்மூலம் இயலுமானதாக இருக்கும்.

## 4.2.3 வன்முறையின் பரிமாணம்

அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் ஊழியர்களுக்கும் ஆதனங்களுக்கும் அச்சுறுத்தல் நிலவுவதை அநேக வர்த்தக முயற்சிகள் ஏற்றுக்கொள்கின்றன. இது மோதல் பாதிப்புக்கு உள்ளான வர்த்தக முயற்சிகளில் அதிகரித்த நிலைமையில் காணப்படுகிறது. ஏனெனில், அரசியல் ரீதியாக சுறுசுறுப்பாக செயற்படுவதனால் அல்லது அபிவிருத்தி/சமாதான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் வர்த்தக முயற்சிகளுக்குப் பாரிய விளைவுகள் ஏற்படலாம்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தக முயற்சிகள் வெளிப்படையற்ற அல்லது கூட்டு முயற்சி மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய வழிமுறையை நிறுவுவது அவசியமாகும். வர்த்தக முயற்சிகளும் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் கூட்டாண்மை துறைசார் தனி நபர்களால் நிர்வகிக்கப்படும் சமாதான மன்றமும் இணைவது ஒரு ஆலோசனையாகும். இதனை வடக்கிலும் கிழக்கிலும் மூலோபாய ரீதியாகப் பயன்படுத்தலாம். குறைந்த செல்வாக்குடனான குறுகியகால செயற்பாடுகள் இதற்கு அவசியமாகும். இதில் ஈடுபடுவதை சில வர்த்தக முயற்சிகள் விரும்பாத போதும் சில விரும்புகின்றன.

முடிவாக இலங்கை வர்த்தக முயற்சிகள் சமூகப் பொறுப்புடைமைக்கான ஆணையை ஏற்கவும் நடைமுறைப்படுத்தவும் விரும்புகின்றன. பல்வேறுபட்ட காரணங்களுக்காக தமது செயற்பாட்டுப் பரப்புக்குள் நின்று இதனைச் செய்ய எண்ணுகின்றன. இவை வர்த்தக விஸ்தரிப்புக்காக பாரிய வாய்ப்புக்களை உருவாக்கல், மோதலால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களை ஈடு செய்தல், வர்த்தக முயற்சிகள் சமூக/கொடைப் பண்புள்ள பணிகளில்

நம்பிக்கை வைத்தல், கூ.ச.பொ எண்ணக்கருவை பொதுத் தொடர்புக் கருவியாகப் பாவித்தல் என்பனவாகும். சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது மோதலைத் தடுப்பதற்கு என நம்பப்படும் செயற்பாடுகளில் தற்போது பல வர்த்தக முயற்சிகள் ஈடுபட்டு வருகின்றன. இவை பல்லினத்தன்மை வாய்ந்ததாகவும் பிரதானமான வர்த்தகச் செயற்பாடுகள், சமூக முதலீடு மற்றும் கொள்கை பேச்சுக்கள் உள்ளடங்கியதாகவும் இருக்கின்றன.

# முதலெழுத்துப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ச.மு.வ.மு | சமாதான முன்னணிக்கான வர்த்தக முயற்சியாண்மை |
| 2. | கொ.வ.ச | கொழும்பு வர்த்தக சபை |
| 3. | கூ.ச.பொ | கூட்டுறவு சமூக பொறுப்புடைமை |
| 4. | மொ.உ.உ | மொத்த உண்ணாட்டு உற்பத்தி |
| 5. | ச.தொ.அ | சர்வதேச தொழிலாளர் அமைப்பு |
| 6. | ச.அ.சா.அ | சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் |
| 7. | ஜே.வி.பி | மக்கள் விடுதலை முன்னணி |
| 8. | எல்.ரி.ரி.ஈ | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| 9. | ம.மு | மக்கள் முன்னணி |
| 10. | யூ.என்.டி.பி | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் |
| 11. | ஐ.தே.க | ஐக்கிய தேசியக் கட்சி |

# உசாத்துணைகள்


அருணாதிலக, என்., ஜயசூரிய, எஸ். மற்றும் கெலேகம, எஸ்.(2000) ‘‘இலங்கையில் யுத்தத்திற்கான பொருளாதார செலவுகள்’’ (கொழும்பு, இலங்கை: கொள்கை கற்கைகளுக்கான நிறுவனம்).

இலங்கை மத்திய வங்கி (2005) ஆண்டறிக்கை 2004 (கொழும்பு, இலங்கை: இலங்கை மத்திய வங்கி).

இலங்கை மத்திய வங்கி (1998) ‘‘சுதந்திர இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி’’ (கொழும்பு, இலங்கை: இலங்கை மத்திய வங்கி).

குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் (2004) தொழிற்படை புள்ளிவிபரம் பற்றிய அதிகாரபூர்வ அறிக்கை, 3 ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டு (கொழும்பு, இலங்கை: குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்).

குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் (2004) கைத்தொழில்களின் மதிப்பீடு (கொழும்பு, இலங்கை: குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்).

குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக்களம் (2003) இலங்கை புள்ளிவிபரவியல் தகவல் அறிக்கை (கொழும்பு, இலங்கை: குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்).

இலங்கை வர்த்தக சபைகள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்களின் சம்மேளனம் (FCCI) (2005) பிராந்திய வர்தத்க விபரக்கொத்து (கொழும்பு, இலங்கை: FCCI).

பேர்டினன்ஸ், ரி. (2004) ‘‘முக்கியமான தருணத்தில் இலங்கையின் சமாதானச் செயற்பாடு; பாடங்கள், பேச்சுவார்த்தை மற்றும் மோதல் உரு நிலைமாற்றத்திற்கான வாய்ப்புக்களும் கருத்துக்களும் (கொழும்பு, இலங்கை: பேர்க்கொப் மன்றம்)

கலப்பத்தி, ஏ. மற்றும் சாலிஹ், எம். (2003) ‘‘யுத்த வலயங்களில் வறுமைக் குறைப்பு மற்றும் உளவியல் சமூக ஒத்துழைப்பு தலையீடுகளை ஒருங்கிணைத்தல்’’: புதிய அனுபவ உட்பார்வைகளை நோக்கி. வறுமை ஆய்வு தொடர்பான மூன்றாவது வருடாந்த மாநாட்டின் செயற்பாடுகள், (கொழும்பு, இலங்கை: CEPA/IMCAP/SLAAS).

இலங்கை அரசு (GoSL) (2003) ‘‘இலங்கையை மீளப்பெறல்: ‘‘துரித அபிவிருத்திக்கான நோக்கும் தந்திரோபாயமும்’’ (கொழும்பு, இலங்கை: GoSL).

குணரத்ன, ஆர். (2003) ‘‘இலங்கை: தமிழ்ப் புலிகளைப் பேணி வளர்த்தல்’’ பெலன்டைன். கே. ஹெர்மன். ஜே (ஆசிரியர்கள்) ஆயுத மோதலின் அரசியல் பொருளாதாரம்: பேராசைக்கும் மனக்குறைக்கும் அப்பால் (நியூயோர்க், ஐ.அமெ: லைன் ரீனர்)

குணதிலக, ஜீ. (2001) ‘‘யுத்தச் செலவுகள் : இலங்கையில் யுத்தத்திற்கான பொருளாதார, சமூக மற்றும் மானுட செலவுகள்’’ (கொழும்பு, இலங்கை: மார்கா நிறுவனம்)

ஹெட்டிகே, எஸ்.டீ, மேயர், எம். மற்றும் சாலிஹ், எம். (2004) இலங்கை இளைஞர்களின் வேலை நிலை மாற்றத்துக்கான பாடசாலை (ஜெனீவா, சுவிச்சர்லாந்து: சர்வதேச தொழிலாளர் சங்கம்).

ஹொப்கின்ஸ், எம். மற்றும் குரோவ், ஆர். (2004) கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமை: இது வர்த்தகம் சம்பந்தப்பட்ட விடயமா? (இலண்டன், யூ.கே: பட்டயக் கணக்காய்வு நிறுவனம்)

இன்டர்னேஷனல் அலர்ட் (2005) ‘‘இலாபத்தினுடான சமாதானம்: இலங்கையில் கூட்டாண்மை சமூக பொறுப்புமைடைமையின் தோற்றப்பாடு’’ (கொழும்பு, இலங்கை: இன்டர்னேஷனல் அலர்ட்):

கொள்கை கற்கைகளுக்கான நிலையம் (IPS) (2003) ‘‘இலங்கை : பொருளாதார நிலையம்’’ (கொழும்பு, இலங்கை: IPS).

ஜயசூரிய, எல்.. (2000): இலங்கையில் நலன்புரிக் கோட்பாடும் அரசியலும்: மூன்றாம் உலக நலன்புரி அரசின் அனுபவங்கள் (பேர்த் அவுஸ்திரேலியா: மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம்)

கீவெலிட்ஸ், யூ மற்றும் ஷெல் - பவுகன், எஸ். (2005): ''மோதல் அபாயமிக்க அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் விரைவான கடும் தாக்குதல் அவசர நிலைமைகளில் மோதல் கூடுணர்வு மிக்க மனிதாபிமான செயற்பாடு: இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் சுனாமி பேரனர்த்தமும் நிவாரண பதில் அளிப்புகளும்'' வெளியிடப்படாத, BMZ சார்பாகவும் DAC-CPDC க்காகவும் GTZ ஆல் தயாரிக்கப்பட்ட குறிப்பு.

கில்லிக், என்., ஸ்ரீகாந்தா, வி.எஸ். மற்றும் கண்டுஸ், சி. (2005) ''சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூர் வர்த்தகங்களின் பங்கு'' (பெர்லின், ஜேர்மனி: ஆக்கபூர்வ மோதல் முகாமைத்துவத்துக்கான பெர்கொ.ஃ.ப் ஆய்வு நிலையம்)

லக்ஷ்மன், W.D. (2002) ''இலங்கையில் இளைஞர் தொழிலின்மை மீதான முழுமையான நோக்கு'' ஹெட்டிகே எஸ்.ரி. மற்றும் மேயர், எம் (ஆசிரியர்கள்) ''இலங்கை இளைஞர்கள்: சவால்களும் பதிலளிப்புகளும் (கொழும்பு, இலங்கை: பிறீடிரிச் ஈபர்ட் ஸ்டி.ஃ.ப்டுங்)

லவ்மேன், எம் (1988) அதிக அபாயமிக்க கூட்டுச் செயற்பாடு: சிலி, உருகுவே மற்றும் ஆர்ஜென்டீனாவில் மனித உரிமைகளைக் காத்தல், அமெரிக்க சமூகவியல் செய்தித்தாள், பாகம் 104, இல.2

மேயர், எம்.. (2004) ''இலங்கையில் இனங்களுக்கு இடையிலான பதற்றத்தை மீள் பொருள்கோடல் செய்தல்: இளைஞர் மற்றும் வன்முறை மோதலின் மீது சமூக பாகுபாட்டின் தாக்கம்'' ஹுஸைன், ஏ. (ஆசிரியர்) இனம்: தென் ஆசிய கண்டத்தில் அடையாளம், சாதி, மற்றும் மோதல் (கொழும்பு, இலங்கை: இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்)

மேயர், எம். (2002) ''இலங்கையில் வன்முறைமிக்க இளைஞர் மோதல்கள்: யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் இருந்து ஒப்பீட்டு முடிவுகள்'' ஹெட்டிகே, எஸ்.ரி. மற்றும் மேயர், எம். (ஆசிரியர்கள்) இலங்கை இளைஞர்கள்: சவால்களும் பிரதிபலிப்புகளும் (கொழும்பு, இலங்கை: பிரிடரிகஎபர்ட் ஸ்டிப்டங்)

மேயர், எம். ராஜசிங்கம் - சேனாநாயக்க, மற்றும் தங்கராஜா, வை. (ஆசிரியர்கள்) (2002) சமாதானத்திற்கான உள்ளூர் ஆற்றலை வளர்த்தல்: இலங்கையில் மோதல் மற்றும் அபிவிருத்தி பற்றிய மீள் சிந்தனை (நியூடெல்லி, இந்தியா: மெக்மிலன்)

பெரேரா, எஸ். (1999) ''பிழைத்து வாழ்பவர்களின் கதை'': பயங்கரவாதத்திற்குப் பின்னரான தென்னிலங்கையில் பெண் தலைமையிலான குடும்பங்களின் சமூக - பொருளாதார சூழமைவு: பாகம். 1 (கொழும்பு, இலங்கை: பெண்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம்)

சமரசிங்க, ஜீ. மற்றும் கலப்பத்தி, ஏ. (1999) பி.எஸ்.சி மதிப்பீடு அத்துடன் போர் அதிர்ச்சி மற்றும் உள - சமூக ஆதரவுத் திட்டத்தின் ஆய்வுக்கூட்டம் மீதான வெளியிடப்படாத அறிக்கை. சர்வதேச போர் அதிர்ச்சி மற்றும் மனிதாபிமான தலையீட்டு நிதியம், இலங்கை)

சர்வானந்தன், எம். (ஆசிரியர்) (2005) ''இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு: 1977 க்குப் பின்னரான காலப்பகுதி'' (கொழும்பு, இலங்கை: இனத்துவ கற்கைச் சர்வதேச நிலையம்)

ஸ்டீல், பீ. (2005) ''சாம்பலில் இருந்து பீனிக்ஸ்? சுனாமிக்குப் பின்னரான இலங்கை பொருளாதாரக் கொள்கை கற்கைகளுக்கான நிலையம்'' (கொழும்பு, இலங்கை: IPS).

தங்கராஜா, வை (2003) ''இலங்கையின் வட கிழக்கில் அதிகாரப் பகிர்வு விவாதத்தினை இனமயப்படுத்தலும் சிவில் சமூகத்தை இராணுவ மயப்படுத்தலும்'' மேயர், எம் ராஜசிங்கம் - சேனாநாயக்க, டீ,. மற்றும் தங்கராஜா, வை. (ஆசிரியர்கள்) சமாதானத்துக்கான உள்ளூர் ஆற்றலை வளர்த்தல்: இலங்கையில் மோதல் மற்றும் அபிவிருத்தி பற்றிய மீள் சிந்தனை (புதுடில்லி, இந்தியா: மெக்மிலன்)

உலக வங்கி (2002) ‘‘இலங்கை வறுமை மதிப்பீடு’’ (கொழும்பு, இலங்கை: வறுமைக் குறைப்பும் பொருளாதார முகாமைத்துவத் துறையும், தெற்காசியா)

# அடிக்குறிப்புக்கள்

இந்தச் செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்யவும், இறுதி ஆவணத்தைத் தயாரிக்கவும் உதவிய பின்வருவோருக்கு ஆசிரியர்கள் நன்றி கூற விரும்புகின்றனர்:

செயற்றிட்டத்தை ஒன்றிணைக்கவும், நிர்வாகம், நிதி நிர்வாகம் மற்றும் செயலக முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யவும் மிகவும் தொழில்சார் தன்மையுடனும் மகிழ்ச்சியுடனும் அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொண்டமைக்காக ஜெனிஸ் ஹெகல் ரணசிங்கவுக்கு நன்றிகள். இவரது உதவியும் அர்ப்பணிப்பும் இல்லாமல் இந்த ஆய்வு சாத்தியமாகி இருக்காது. பல நேர்காணல்களையும் நடத்தி முழுக் குறிப்பையும் எழுதிக்கொண்ட ரொஷல் ஹெகல் ரணசிங்க, அளவு மதிப்பீட்டுக் குழுவை வழிநடத்தி ஒருங்கிணைத்ததுடன், அளவு மதிப்பீட்டுத் தரவுகளைப் பதிந்து ஆராய்ந்த சாகர சந்திரசேகர, அத்துடன் இலங்கையில் வர்த்தக முயற்சிகள் மற்றும் சமாதானப் பங்களிப்பில் ஆய்வு நடத்த வாய்ப்பளித்த ''இன்டர்நெஷனல் அலார்ட்'' அமைப்பினர் ஆகியோருக்கும் நன்றிகள்.

இறுதியாக இந்த ஆய்வில் பங்கேற்ற நிறுவனங்கள், குறிப்பாக ஆய்வுக்குழுவுடன் தமது அனுபவத்தையும், அபிப்பிராயங்களையும் பகிர்ந்து கொள்வதற்காக தமது நேரத்தை ஒதுக்கித் தந்த பிரதான பிரமுகர்களுக்கு தமது நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசிரியர்கள் விரும்புகின்றனர். பங்கேற்ற அனைவரும் விரும்புகின்றவாறு, சமாதானச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்துப் பங்காளர்களினதும் கூட்டிணைக்கப்பட்ட முயற்சியை அடைந்து கொள்வதற்கு அவதானிப்புக்களும் சிபார்சுகளும் உதவுமென நாம் நம்புகிறோம்.

[1] இன்டர்நெஷனல் அலார்ட் (2005): ''இலாபத்தின் ஊடாக சமாதானம்'' : இலங்கையில் கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமையின் தோற்றப்பாடு (கொழும்பு, இலங்கை: இன்டர்நெஷனல் அலார்ட்); கில்லிக், என்.சிறிகாந்தா, வி.எஸ் மற்றும் கண்டஸ், சி. (2005) சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ளூர் வர்த்தகர்களின் பங்கு (பெர்லின், ஜேர்மனி: ஆக்கபூர்வ மோதல் முகாமைக்கான பெர்கொ.்.ப் ஆய்வு மையம்)

[2] இலங்கை மத்திய வங்கி (2005) வருடாந்த அறிக்கை 2004. (கொழும்பு, இலங்கை: இலங்கை மத்திய வங்கி)

[3] ஜயசூரிய, எல். (2000): இலங்கை நலன்புரிக் கோட்பாடும் அரசியலும்: மூன்றாம் உலக நலன்புரி அரசின் அனுபவங்கள் (பேர்த் அவுஸ்திரேலியா: மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம்)

[4] பெரேரா, எஸ். (1999) : ''பிழைத்து வாழ்பவர்களின் கதை'' : பயங்கரவாதத்திற்குப் பின்னரான தென் இலங்கையின் பெண் தலைமையிலான குடும்பங்களின் சமூக - பொருளாதார சூழமைவு. பாகம்.1 (கொழும்பு, இலங்கை: பெண்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம்)

[5] மேயர், எம் (2002) ''இலங்கையில் வன்முறைமிக்க இளைஞர் மோதல்கள்: யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் இருந்து ஒப்பீட்டு முடிவுகள்: ஹெட்டிகே, எஸ்.ரி மற்றும் மேயர், எம் (ஆசிரியர்கள்) இலங்கை இளைஞர்கள்: சவால்களும் பிரதிபலிப்புக்களும் (கொழும்பு, இலங்கை : பிரிடிரிக் பெர்ட் ஸ்டிப்டுங்)

[6] தங்கராஜா, வை (2003) ''இலங்கையின் வட கிழக்கில் அதிகாரப் பகிர்வு விவாதத்தினை இனமயப்படுத்தலும் சிவில் சமூகத்தை இராணுவ மயப்படுத்தலும்'' மேயர், எம்.ராஜசிங்கம் - சேனாநாயக்க, டி,. மற்றும் தங்கராஜா, வை. (ஆசிரியர்கள்) சமாதானத்துக்கான உள்ளூர் ஆற்றலை வளர்த்தல்: இலங்கையில் மோதல் மற்றும் அபிவிருத்தி பற்றிய மீள் சிந்தனை (புதுடில்லி, இந்தியா: மெக்மிலன்)

[7] சமரசிங்க, ஜீ மற்றும் கலப்பத்தி, ஏ, (1999) பி.எஸ்.சி மதிப்பீடு அத்துடன் போர் அதிர்ச்சி மற்றும் உள - சமூக ஆதரவுத் திட்டத்தின் ஆய்வுக்கூட்டம் மீதான வெளியிடப்படாத அறிக்கை, சர்வதேச போர் அதிர்ச்சி மற்றும் மனிதாபிமான தலையீட்டு நிதியம், (IWTHI) இலங்கை: மற்றும் கலப்பத்தி, ஏ. மற்றும் சாலிஹ் எம். (2003) ''மோதல் வலயங்களில் வறுமைக்குறைப்பு மற்றும் உளவியல் - சமூக ஆதரவு தலையீட்டை ஒருங்கிணைத்தல்'' இலங்கையில் வறுமை ஒழிப்பு: புதிய அனுபவ உட்பார்வைகளை நோக்கி, வறுமை ஆய்வு மீதான மூன்றாவது வருடாந்த மாநாட்டில் செயற்பாடுகள் (கொழும்பு, இலங்கை CEPA/IMCAP/SLAAS)

[8] லவ்மேன், எம். (1998) ''அதிக அபாயமிக்க கூட்டுச் செயற்பாடு: சிலி, உருகுவே மற்றும் ஆர்ஜென்ரீனாவில் மனித உரிமைகளைக் காத்தல்'' , அமெரிக்க சமூகவியல் செய்தித்தாள், பாகம் 104, இல.2.

[9] அருணாதிலக, என்., ஜயசூரிய, எஸ். மற்றும் கெலகம, எஸ். (2000) இலங்கையில் போருக்கான பொருளாதாரச் செலவுகள் (கொழும்பு, இலங்கை: கொள்கை கற்கைகளுக்கான நிலையம்; மற்றும் குணதிலக, ஜீ (2001): போரின் கிரயம்: இலங்கையில் போருக்கான பொருளாதார, சமூக மற்றும் மனித செலவு (கொழும்பு, இலங்கை: மார்க்கா நிலையம்).

[10] சர்வானந்தன், எம். (ஆசிரியர்) (2005) ''இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு, 1977 க்குப் பின்னரான காலப்பகுதி'' (கொழும்பு, இலங்கை: இனத்துவ கற்கை சர்வதேச நிலையம்)

[11] கீவெலிட்ஸ், யூ மற்றும் ஷெல் - பவுகன், எஸ். (2005): ''மோதல் அபாயமிக்க அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவான கடும் தாக்குதல் அவசர நிலைமைகளில் மோதல் கூடுணர்வு மிக்க மனிதாபிமான செயற்பாடு: இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் சுனாமி பேரனர்த்தமும் நிவாரண பதில் அளிப்புகளும்'' வெளியிடப்படாத, BMZ சார்பாகவும் DAC-CPDC க்காகவும் GTZ ஆல் தயாரிக்கப்பட்ட குறிப்பு.

[12] ஸ்டீல், பீ. (2005) ''சாம்பலில் இருந்து பீனிக்ஸ்? சுனாமிக்குப் பின்னரான இலங்கை பொருளாதாரக் கொள்கை சவால்களும் சந்தர்ப்பங்களும்'' கொள்கை கற்கைகளுக்கான நிலையம் (IPS) வேலைத்தாள் இலக்கம் 7 (கொழும்பு, இலங்கை: IPS).

[13] கீவெலிட்ஸ் மற்றும் ஷெல்-பவுகன், op.cit; ஸ்டீல், op.cit

[14] சர்வானந்தன், op.cit

[15] இலங்கை மத்திய வங்கி op.cit

[16] அதே நூல்

[17] அதே நூல்

[18] அதே நூல்

[19] குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களம் (2004) வருடாந்த அறிக்கை 2004 (கொழும்பு, இலங்கை: குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களம்)

[20] அதே நூல்

[21] GoSL லங்கா (2003) ''இலங்கையை மீளப் பெறல்: துரித அபிவிருத்திக்கான நோக்கும் தந்திரோபாயமும்: (கொழும்பு, இலங்கை: GoSL)

[22] லக்ஷ்மன், W.D. (2002) ''இலங்கையில் இளைஞர் தொழிலின்மை மீதான முழுமையான நோக்கு'' ஹெட்டிகே மற்றும் மேயர் op.cit

[23] இலங்கை மத்திய வங்கி, op.cit

[24] மேயர், எம். (2004) ''இலங்கையில் இனங்களுக்கு இடையிலான பதற்றத்தை மீள் பொருள்கோடல் செய்தல்: இளைஞர் மற்றும் வன்முறை மோதலின் மீது சமூக பாகுபாட்டின் தாக்கம்'' ஹுஸைன், ஏ. (ஆசிரியர்) இனம்: தென் ஆசியக் கண்டத்தில் அடையாளம், சாதி மற்றும் மோதல் (கொழும்பு, இலங்கை: இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்.

[25] சர்வானந்தன், op.cit

[26] அருணாதிலக, ஜயசூரிய மற்றும் கெலகம op.cit

[27] குணரட்ன, ஆர். (2003) ''இலங்கை: தமிழ் புலிகளைப் பேணி வளர்த்தல்'' பெலன்டைன் கே.மற்றும் ஷெர்மன். ஜே (ஆசிரியர்கள்) ஆயுத மோதலின் அரசியல் பொருளாதாரம்: பேராசைக்கும் மனக்குறைக்கும் அப்பால் (நியூயோர்க், அமெ: லைன் ரீனர்).

[28] இன்டர்நெஷனல் அலார்ட் (2005) இலாபத்தின் ஊடாக சமாதானம்: கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமை மீதான இலங்கை தோற்றப்பாடு (லண்டன், யூ.கே: இன்டர்நெஷனல் அலார்ட்)

[29] லங்கா மன்த்லி டைஜன்ட், டிசம்பர் 2004

[30] இன்டர்நெஷனல் அலார்ட் (2005) op.cit

[31] கிளோட் பெரர், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் (CIMA) தலைவர், லங்கா மன்த்லி டைஜன்டில் மேற்கோள் காட்டப்பட்டது, டிசம்பர் 2004.